Registered as a Newspaper

PUMP with Standard Accessories Select



NEWTONE Water Pumps

# சஞ்சீவி

**அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி**

விலை ரூபா 4-00

தரமான உதிரிப்பாகங்களை கொண்டு பாவிக்கப்படும்



நியூரோன் வாட்டர் பம்புகளை வாங்குங்கள்

மலர்: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஆடி மீ 28 உ சனிக்கிழமை முஹறம் 1409 ஷவ்வால் பிறை 09 (12-08-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 64

## லங்கா சிமெந்து மின்நிலையம் மூலம் வடக்கிற்கு மின்சாரம்வழங்க முயற்சி!

யாழ்ப்பாணம்: ஆக: 12

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன மின் நிலை நிலையத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்து அதனை யாழ் மாவட்டத்துக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெற்கிலிருந்து நீர் மின்சாரம் யாழ் மாவட்டத்துக்கு வருவதில் உள்ள தாமதத்தையடுத்தே புதிய வழிமுறையை நாடுவது குறித்து மின்சாரசபை அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள்.

கொழும்பிலிருந்து வந்த மின்சார சபை உயரதிகாரிகள் சிலர் நேற்று முன்தினம் இது குறித்து காங்கேசன் லங்கா சிமெந்து நிறுவன அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தினார்கள்.

லங்கா சிமெந்து மின்நிலையத்தில் உள்ள இயந்திரங்களின் முக்கிய உதிரிப்பாகங்கள் சில மிக பழுதடைந்துள்ளன என்றும்—

அவற்றை மேற்கு ஜெர்மனியில் இருந்து தருவிக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இம் மின் நிலையம் இயங்க ஆரம்பித்தால் யாழ் மாவட்டத்துக்கு முழுநாளும் மின்சாரம் வழங்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3

## இயக்கச்சியில் ஆயுதபாணிகள் பெண் பயணிகளிடம் கொள்ளை!

### பெரும் தொகை பணமும், நகைகளும் அபேஸ்!!

யாழ்ப்பாணம், ஆக.12

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட தனிமார் பஸ் ஒன்றை ஆயுதபாணிகள் சிலர் இயக்கச்சியில்வைத்து கொள்ளை அடித்துள்ளனர். அதில்பயணம்சென்ற பயணிகள் பலர் பெரும் தொகையான பணத்தையும் நகைகளையும் இழந்தனர்.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை 6.30 மணி அளவில் யாழ். நகரில் இருந்து புறப்பட்ட தனியார் பஸ் பிரதான பாதையில் இயக்கச்சி வளைவில் வைத்து ஆயுதம் தாங்கிய மூவரால் வழிமறிக்கப்பட்டது. பஸ்ஸுக்குள் இருவர் ஏறினர்.

"ஆண்கள் இறங்கி முன்னால் நடந்துபோகலாம். பெண்கள் இருக்கலாம்" என்று அந்த இருவரில் ஒருவர் உத்தரவிட்டார். வழமையான சோதனை என்று பஸ் பிரயாணிகள் நினைத்து விட்டனர். பஸ்ஸில் இருந்து இறங்கிய ஆண்களில் சிலர் தமது பொதிகளுடனும் சிலர் பொதிகளை பஸ்ஸுக்குள் விட்டும் நடந்து சென்றனர்.

ஆண்கள் சென்றதும் பஸ்ஸில் இருந்த பெண்கள் பயமுறுத்தப்பட்டு அவர்களின் நகைகள் அபகரிக்கப்பட்டன. தமது இயலாமையைக் காரணம்காட்டி முன்னர் இறங்காமல் பஸ்ஸுக்குள்ளேயே பெண்களுடன் தங்கியிருந்த இரு ஆண்களும் கொள்ளையரிடமிருந்து தப்ப முடியவில்லை. அவர்களிடம் இருந்தும் பணம் மற்றும் பொருள்களும் அபகரிக்கப் பட்டன.

சிறிது நேரத்துக்குள் கொள்ளையர்கள் மூவரும்தாம்

(4ஆம்- பக்கம் பார்க்க)

## அமைதிப்படை விவகாரம்

# இலங்கை அரசின் முடிவு இன்று அல்லது நாளை!

## அமைச்சர்களின் ஆலோசனையை ஜனாதிபதி பிரேமா கேட்டறிந்தார்

கொழும்பு, ஆகஸ்ட் 12

அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பாக புதுடில்லியில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் குறித்து இலங்கை அரசாங்கத்தின் முடிவு இன்று அல்லது நாளை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக நேற்று மாலை நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்களின் கருத்தை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா கேட்டறிந்துகொண்டார்.

இலங்கை அரசின் முடிவை ஜனாதிபதி இன்று அல்லது நாளை அறிவிப்பார் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புதுடில்லி யோசனைகள் தொடர்பாக இலங்கை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மூன்று நாள் விவாதம் நேற்று மாலை முடிவடைந்தது.

இதன் பின்னர் நேற்றிரவு 7-00 மணியளவில் விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதுடில்லி யோசனைகள் குறித்து நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது.

இதேவேளை நேற்றைய விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவில், அமைச்சரவைத் தீர்மானங்களைப் பற்றி அறிவிப்பதற்காக வழக்கமாகக் கூட்டப்படும் பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்பட

(4ஆம் பக்கம் பார்க்க)

## கரடிப்போக்கில் வேட்டுச்சத்தம்

யாழ்ப்பாணம், ஆக. 12

கிளிநொச்சி கரடிபோக்கு சந்திக்கு அண்மையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டு சத்தங்கள் கேட்டன. (உ-76)

## ஆஸ்பத்திரியில் இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம், ஆக. 12

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ். பலாலி வீதியில் பழம் வீதிக்குச் சமீபமாக கிடக்கக் காணப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று மாலைவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை. (ஒ-9)

## பயணிகள் ரயில் நேற்று வந்தது

யாழ்ப்பாணம், ஆக. 12

யாழ் நகருக்கு நேற்று பயணிகள் ரயில் வந்து சேர்ந்தது.

இந்த ரயில் இன்று காலை கொழும்பு நோக்கிப் புறப்படும். (ஒ-9)

## இந்திய எதிர்ப்புப் பேரணி; 750 பேர்வரை உயிரிழப்பு!

### ஜே. வி. பி. வெளியிட்ட தகவல்

யாழ்ப்பாணம், ஆக 12

கடந்த 28, 29, 30 ஆம் திகதிகளில் தென்னிலங்கையில் ஊரடங்கையும் மீறி இந்திய எதிர்ப்பு ஊர்வலம் நடத்தியோர்மீது பாதுகாப்பு படையினர் சுட்டதில் எழுநூற்றி ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இவ்வாறு ஜே வி. பி. இயக்கம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தென்னிலங்கையில் நடந்த ஏனைய சில வன்செயல் சம்பவங்கள் வருமாறு:-

✶ பொலன்னறுவையில் ஜே வி பி தலைவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

✶ கேகாலையில் பொலீஸ் சார்ஜண்ட் அவரது மனைவி இரண்டு புதல்விகள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டனர். சார்ஜண்டின் பெற்றோர்கள் காயமடைந்தனர். அவரது வீடும் எரிக்கப் பட்டது.

★ 133 ஜே. வி. பி. யினர் கைதுசெய்யப்பட்டனர்.

(4ஆம்- பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் நேற்று 2பேர் மரணம்; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 12

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நடந்த அசம்பாவிதம் ஒன்றில் இருவர் மரணமானார்கள். அவர்களில் ஒருவர் பெண்.

சம்பவத்தின் போது மரணமான பெண்ணின் மகளும் காயமுற்றார்.

நேற்றுப் பிற்பகல் சுமார் இரண்டு மணியளவில் நடந்த இந்த அசம்பாவிதத்தின் போது நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இருவர் மரணமானார்கள்; மூன்றுமவர் காயமடைந்தார்.

மோதல் ஒன்றைத் தொடர்ந்தே துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாகச் சொல்லப்பட்டது. எனினும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

இச்சம்பவத்தில் புலேந்திரன் தவமணி (35 வயது) என்பவரும், மற்றொருவரும் மரணமானார்கள். புலேந்திரன் சதீஸ்வரி (15 வயது) காயமுற்றார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### கட்டம் கட்டமாக

## ஈழத்தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப ஐரோப்பிய நாடுகள் தீர்மானம்

லண்டன், ஆக 12

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி தங்கியுள்ள தமிழ் அகதிகளை கட்டம் கட்டமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

முதல் கட்டமாக ஐயாயிரம் அகதிகள் திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளனர்,

இதுதொடர்பான தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற ஐரோப்பிய நாடுகளில் அகதிகள் பராமரிப்பு" தொடர்பான ஐரோப்பிய நாடுகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது பல ஐரோப்பிய நாடுகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டன,

இந்தத் தீர்மானத்தின்படி குறிப்பிட்ட ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஐநூறு பேர் வீதம் ஐயாயிரம் அகதிகளைத் தெரிவுசெய்து—

இலங்கை நிலைமையை அவதானித்து இந்த வருடமுடிவுக்குள் முதற்கட்டமாக அவர்களைத் திருப்பி அனுப்பிவைப்பது என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

திருப்பி அனுப்பி வைக்கப்படும் அகதிகளுக்கு அவர்கள் இலங்கையில் மீளக்குடியமர்வதற்கான சகல உதவிகளையும் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஊடாக வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஜப்பான் புதிய பிரதமர் மீதும் பாலியல் குற்றச்சாட்டு!

டோக்கியோ ஆகஸ்ட் 12

புதிய ஜப்பான் பிரதமர் காய்போ பதவி ஏற்றுஇரண்டு நாட்களுக்குள் அவருக்கு எதிராகவும் பாலியல் குற்றச்சாட்டுகள் கிளம்பியிருக்கின்றன.

ஜப்பானிய பத்திரிகைகள் இக்குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கின்றன.

தனது சொந்த ஊரில் திரு. காய்போ 20 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணமாகாத ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும்—அதன் மூலம் அவருக்கு சட்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்று கிரனேட் வீச்சுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக: 12

யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதியில் கடைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொக்குவிலைச் சேர்ந்த பிரேமகுமாரி தெய்வேந்திரம் (28 வயது), சுண்டுக்குளியைச் சேர்ந்த அன்ரனிப்பிள்ளை யேசுநேசன் ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

கடை ஒன்றில் படையினர் பொருள் கொள்வனவில் ஈடுபட்டு இருந்த சமயமே கிரனேட் வீசப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (ஒ-9)

### சுபநேரம்

[12 - 8 - 1989]

ஆடி 28 — சனிக்கிழமை

நக்ஷத்திரம்: கேட்டை

சுபநேரம்:

03-04 முதல் 04-34 வரை ராகுகாலம்:

09-04 முதல் 10-34 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## ஜனநாயகத்தைப் பேணுவதாகக் கூறும் சக்திகள் தீவிரவாதிகளுக்கு மறைமுக ஆதரவு

### நாடாளுமன்றத்தில் ரஞ்சன்

கொழும்பு, ஆகஸ்ட் 12

ஜனநாயக விரோத சக்திகளின் படுகொலைகள் உட்பட பயங்கர வன்செயல்களால், மக்கள் அச்சமும்; பீதியும், சோகமும் கலந்த வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள சகல தரப்பினரும் இந்த மிருகத்தனமான செயல்களைப் பகிரங்கமாகக் கண்டிக்கவேண்டியது அவர்களின் கடமையாகும்,

ஆகக் குறைந்தது இவற்றை நிறுத்துமாறு வேண்டுகோளாவது விடக்கூடாதா?

அகிம்சை, ஜனநாயகம் என்பவற்றைப் பேணுவதற்குப் பாடுபடுவதாகக் கூறும் சில சக்திகள், மக்களுக்கு எதிராக வன்செயல் புரிபவர்களுக்கு மறைமுகமாக ஆதரவு நல்குகிறார்கள்;

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின, நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

வன்செயல்களைக்கண்டிக்கும் பகிரங்கக் கூட்டறிக்கை ஒன்றை விடுக்குமாறு, சபாநாயகர் ஊடாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளையும் கேட்பது என்று அரசாங்க நாடாளுமன்றக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் திரு. விஜேரத்தின தமது பேச்சில் பிரஸ்தாபித்தார்.

கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் பதவிகளில் அமர்ந்துள்ளோரும் கட்சிகளுக்குப் பிரசாரம் செய்தவர்களும் அவர்களின் குடும்பங்களும் எவ்வாறு இனங்காணப்பட்டு கொலை செய்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய உபவாச ஜெபநாள்

காலம்: 16 ஆவணி 1989 (போயாதினம்)
இடம்: யாழ். பரியோவான் கல்லூரி மண்டபம்
நேரம்: காலை 9 மணிமுதல் 1 மணிவரை

நம் தேசத்தின்
சமாதானத்தையும்
அமைதியையும்
நீதியையும்
வேண்டி ஜெபிக்க
அனைத்துக் கிறிஸ்தவர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்:



யாழ். ஜெபக் குழுக்கள்
இணைப்பாளர்
சூரி வில்லியம்ஸ்

(1484)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

26 சேஜ் 9 அடி 16, 26 சேஜ் 8 அடி 110, 24 சேஜ் 6 அடி 115 தகரங்களும் 26 சேஜ், 8, 7, 3, 4 அடி தகரம் வேலிக்கும் கூரைக்கும் பாவிக்கலாம். அத்துடன் முதிரை, தேக்கு அலுமாரியும் உடன் விற்பனைக்கு உண்டு. சி. கந்தசாமி, நவாலிவடக்கு, நாச்சியார் கோவிலடி, மானிப்பாய். (1503)

நல்ல நிலையில் உள்ள ஈஸ்ரன் சைக்கிள் (GENTS) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சித்தி விநாயகர்ஸ்ரோர்ஸ் 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1383)

பழைய புத்தகங்கள் விற்கப்படும். வாங்கப்படும். Second Hand Book House 13/6 ஸ்ரான்லி ரோட், (முரசொலி, இலங்கை வங்கிக்கு முன், பட்டப் படிப்புக் கல்லூரி லேன்) (1384)

மயிலிட்டியில் 2 பரப்புக் காணி (மடத்திற்புலம்) மயிலிட்டி திருப்பூர்லேனில் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. தெய்வச்சந்திரன் தெனியம்பை வல்வெட்டித்துறை: (1382)

EN தொடர் இலக்கமுள்ள A50 கார் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: P. பராராஜசிங்கம் Station Lane, Chavakachcheri. (11792)

றஸ்ரன் டீசல் எஞ்ஜின் 45 குதிரை சக்தி காற்று குளிருட்டல் (Air cool) நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. எஸ் சுப்பிரமணியம் அன் கம்பனி 34 ஆடியபாதம் வீதி. நல்லூர், யாழ்ப்பாணம். (சி/3272)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புறொய்லர் குஞ்சுகள் ரூபா 15/50, வெள்ளை ரூபா 16/00 பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13/50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. கால் நடை உணவுகளுக்கும் எம்மை நாடுங்கள். ஸ்ரீ கிருஷ்ணா ஒயில் ஸ்ரோர்ஸ் 802. பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி. (1372)

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் Hybro புறொயிலர் குஞ்சுகள் 14 ஆம் திகதி திங்கட்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (1375)

### இறைச்சிக்கோழி விற்பனை

Brcilers எல்லா வகையான கோழி இறைச்சி எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தி. [11778]

### ஸ்கூட்டர் தேவை

நல்ல நிலையில் உள்ள (வெஸ்பா லம்பிரட்டா பஜாஜ்) ஸ்கூட்டர் உடன் தேவை. ஸ்கூட்டருடன் நேரில் வரவும். துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், பிரபல புத்தக சஞ்சிகை விற்பனையாளர்கள், பஸ் நிலையம் சுன்னாகம். (1378)

### மணமக்கள் தேவை

எம்மிடம் பல வகைத் தொழில்களில் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் உண்டு. உங்கள் தெரிவுக்கு நாடுங்கள்: எதிர்காலப் பலன்களை அறிய சோதிடரைச் சந்திக்கலாம்: பன்முக மாற்றம் ஸ்ருடியோ டில்கா அருகில் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1371)

31, வயதுடைய 5' 8'' உயரமுடைய யாழ். பொற்குழி லாளர் குல பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருக்கு மணமகள் தேவை. ஜாதகக்குறிப்பு புகைப்படம் உட்பட பூரண விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். படம் திருப்பி அனுப்பிவைக்கப்படும். 575, C/o Uthayan. (1374)

### திருமண சேவை

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் இத்திருமணங்களை விடாமுயற்சியால் நிறைவேற்றி வைப்பவர்கள் நாமே! உங்கள் பிள்ளைகள் மகிழ்ச்சியாக வாழ முற்றுந் தகுந்த மணமகன் மணமகளைத் தேடி அலையாது நாட வேண்டிய இடம்: புதிய மாங்கல்யா மல்ரிரி சேவிஸ், 14 விதானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை மேற்கு, இருவிளங்கம். (1367)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்குநாடுங்கள் 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடமட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரைமாந்திரீகநிபுணரும்) 210 கஸ்தூரியார் வீதி. (யாழ்/இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்; வியாழக்கிழமை விடுமுறை. (9348)

### ஆங்கிலம்

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த G. C. E Advanced Level Literature O/L ஆங்கில வகுப்புக்கள் யாவும் கடந்த வாரம் ஆரம்பமாகி விட்டன புதிய பிரிவுகள் 14-08-1989 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. கோவிந்தபிள்ளை & ஜெயக்குமார், 62, பழம்ரோட் கந்தர்மடம். (1504)

### CLASSES

Basic Make-up and Hair Dressing Classes with Theory and Practical வகுப்புகள் 13-8-89 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாக இருக்கிறது. Virgo Beauty Parlour 71, Nayanmar Road, off Kachcheri Nallur Road, Nallur Jaffna. (11786)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (ஏழாவது) 13-08-89 ஞாயிறு 2 00 மணிக்கு நடைபெறும். முற்கூட்டியே பதிவு செய்யவும்; நடந்தேறிய வினாத்தாள்களையும் விரும்புவோர் பெற்றுக் கொள்ளலாம்; புதிய கல்வி நிலையம், செங்காதரன் ஆஸ்பத்திரியடி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (1381)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவில் இருந்து பரந்த அறிவைப் பெறுவதற்கு உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் விண்ணப்பிக்கவும்; I. E. T. 11B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர்மேல்மாடி] (1088)

## பத்தாவது ஆண்டு நிறைவு விழா

வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கலாசாரமன்றத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மன்றத் தலைவர் ஆசிரியர் திரு. வ. பரமேஸ்வரம்பிள்ளை தலைமையில் மன்ற முன்றலில் நடைபெறவுள்ளது.

விசேட நிகழ்ச்சிகளாக 'பண்ணிசை அரங்கு' மாலை 3.00 மணி முதல் 4.30 மணி வரை தேவார இசைமணி நல்லை ஆதீனம் ஓதுவார் மூர்த்தி செல்வன் S. தில்லைமணியால் நடாத்தப்படும். வயலின் திரு. S. கேசவன் மிருதங்கம் திரு. க. கண்ணதாசன்;

'ஏமாற்றும் பேர்வழிகள்' நாடகம் வட்டு புதிய விஞ்ஞானக்கல்வி மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்படும். வில்லிசை 'பரமானந்தசிவம் வாழ்க்கைச் சரிதம்' வட்டு கலைவாணி கல்வி நிலையமாணவர்களால் நிகழ்த்தப்படும். (சு)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### டாக்டர் இராசலிங்கம் இரகுநாதன்

(உதவி வைத்திய அதிகாரி, கல்முனை)

தோற்றம்: 24. 06. 1942 — மறைவு: 13. 07. 1989

அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 12-08-1989 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அழைப்பை ஏற்று கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம் ஈமச்சடங்கின் போது உதவியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றி.

இ. லோகாம்பிகை (மனைவி),
இ. சரவணபவன் (மகன்).

டச் ரோட்,
உடுவில்:

(1078)

## ஊழியர் - நிர்வாகம்

# ஒத்துழைப்பு இருந்தால் மட்டும் நிறுவனம் வளர்ச்சி பெறும்

நெடுந்தீவு, ஆக 12 ஊழியர்களுக்கிடையிலும் நிருவாகத்திற்கிடையிலும் நல்லெண்ணமும் பரஸ்பரம் ஒத்துழைப்பும் இருந்தால் மட்டுமே எந்த ஒரு நிறுவனமும் வளர்ச்சி அடைய முடியும். நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தின் வளர்ச்சிக்கு இதுவே காரணமாக இருந்தது.

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. நா. இராமச்சந்திரனுக்கு ஊழியர்கள் அளித்த விருந்துபசாரத்தில் பேசிய சங்க ஊழியர் செல்வி கே. இந்திராணி இப்படிக் கூறினார்.

பொதுமுகாமையாளர் திரு. இரா. தருமலிங்கம் பேசுகையில் ஒரு தலைவர் என்ற நிலையில் மட்டுமன்றிப் பணியாளர் என்ற மனப்பாங்கிலும் செயலாற்றியவர் அவர் என்றார்.

திரு. இராமச்சந்திரன் தனது உரையில்; பல தரப்பட்ட கஷ்டங்களுக்கு மத்தியில் பொதுமக்கள் பாராட்டத்தக்க சேவையை ப. நோ. கூ. சங்கம் வழங்கியுள்ளது என்றார். (இ-111)

St John's College, Jaffna
and
Chundikuli Girls' College, Jaffna

### ADMISSION - 1990

1. Vacancies exist, ONLY in the following Classes:-
   a) Year ONE and Year SIX. (St. John's & Chundikuli Girls' College).
   b) Year NINE. (Chundikuli - Girls' College ONLY).
2. APPLICATIONS CLOSE ON 20 th SEPTEMBER, 1989
   i) On Forms available from the respective Schools between 1st September and 15th September, 1989.
   ii) Applications on other Forms will NOT be considered.
   iii) Forms received after 20th September. 1989 will NOT be considered.
3. Applications must be accompanied by Birth Certificates. Forms incorrectly, or incompletely filled will be rejected.
4. Application Forms can be obtained from the respective Schools in person or by post at Rs. 25/- per Form for Year ONE and Rs. 50/- per Form for Year SIX and Year NINE.

   In person:

   On School days between 9 00 a m. and 2 00 p m.

   By post:

   Send a Money Order or Postal Order for the amount with a self addressed stamped long envelope
5. AGE LIMITS:
   i) Year ONE: Applicants should have been born between 01-02-84 and 31-01-85.
   ii) YEAR SIX: Applicants should have been born on or after 01 02-79.
   iii) Year NINE: Applicants should have been born on or after 01-02 76.
6. ADMISSION TEST for Year SIX and Year NINE: Saturday, the 7th October, 1989, beginning at 8.30 a.m.

PRINCIPALS.

Jaffna.

[c-3191]

## பொதுக் கூட்டம்

சுழிபுரம், ஆக 12 மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஐக்கிய சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறும். (இ 28)

University of Jaffna,
Tender Notice

### Supplying and/or Installation of Air Conditioners.

Sealed Tenders are invited for the Supplying and/or installation of air conditioners at the following locations:

1. Medical Faculty-
   a) Department of Physiology 01 No.
   b) Department of Pathology 01 No
   c) Department of Bio-Chemistry 01 No.
   d) Department of Anatomy 01 No
   e) Medical Faculty Library 01 No.
   f) Medical Faculty Board Room 01 No
2. Library - 02 Nos
3. Finance Branch - 01 No
4. Department of Maths-Computer Unit - 01 No

Tender documents in connection with this work will be issued at the Finance Branch, University of Jaffna during office hours from 22nd tc 25th August '89 on payment of non refundable fee of Rs. 200/- for each Tender.

If necessary, site inspection could be made along with the Works Engineer from 9 a. m. to 10 a. m. on 29th August, 1989.

The Tender Documents should be forwarded to the Bursar, University of Jaffna by registered post or personally with the mark "Tender for Supplying and / or installation of Air Conditioners" to reach him on or before the 08th September 1989 at 10 a. m. Tenders will be opened on the same day at 10.30 a.m.

Actg. Registrar.

[C-3270]

## கூ. ச. கிளைகளில் விலை அதிகம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 12 சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ரூபா 9/50க்கு விற்பனை செய்யப்படுவதாக அறியப்படுகிறது:

சாவகச்சேரி நகர்ப் பகுதி சறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ஒன்பது ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்போது சங்கக் கிளைகளில் ஏன் இவ்வாறு விற்க வேண்டும் என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். (ச-117)

## 5 ஆம் நாள் நன்றி நவிலல்

### பொன்னையா நவரத்தினம்

(பாலு)
(லொறி உரிமையாளர்)

படைப்பு: 18. 07. 1956 — உதிர்வு: 08. 08. 1989

பளை, வேம்போடுகேணியைச் சேர்ந்த பொன்னையா நவரத்தினம் 08.08.1989 அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையாவினதும், வள்ளிப்பிள்ளையினதும் அன்பு மகனும், சுப்பிரமணியம், இரத்தினசிகாமணி, முத்துராசா, தவராசா, சரஸ்வதி, பத்மாவதி, யோகாம்பிகை, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், முத்தையா, கார்த்திகேசு, நடராசா, செல்லம்மா, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சி; முத்தையாவின் பெருமகனுமாவார்.

கடந்த 09 08 1989 இல் நடைபெற்ற அன்னாரது மரணச் சடங்கிலும்; ஈமக்கிரியைகளிலும் கலந்து கொண்டு பல்வேறு வகையில் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்,
— குடும்பத்தினர்

வேம்போடுகேணி,
பளை.

(1487)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு. இராமலிங்கம் கந்தையா

(இளைப்பாறிய வர். பி. போதச சாலைப்பரிசோதகர் கோண்டாவில்)

மண்ணில்: 30 - 11 - 1927 — விண்ணில்: 13 - 07 - 1989

அன்புத் தலைவனே! ஆசை அப்பாவே!
நாட்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
உங்களை இழந்த துயர் நீங்கவில்லை
கண்ணீர் ஆறோ ஓயவில்லை!
எங்கள் உயிர் இருக்கும் வரை
உங்கள் நினைவு இருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

13-07-1989 இல் நடைபெற்ற எமது குடும்பத் தலைவரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவி வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்:

12-08-1989 இன்று கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் 13-08-1989 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்

திருமதி க. திருஞானசக்தி (அன்புமனைவி)
க. மோகனதாஸ் (அருமைமகன்)
க. மோகனறஞ்சினி (அருமை மகள்)

''மோகன பவனம்''
பன்னாலை,
தெல்லிப்பழை: (1485)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ் உ. அ. அதிபர் பிரிவில்

# ஜனசக்தி பங்கீட்டு அட்டை விநியோகம் 15ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக 12

ஜனசக்தி திட்டத்துக்கான பங்கீட்டு அட்டை வழங்கும் நடவடிக்கைகள் ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் செப்ரம்பர் 10 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்படும் என்று யாழ். உ. அ. அதிபர் தெரிவித்தார்.

அட்டை வழங்கும் நடவடிக்கைகள் முடிவுற்றதும் அக்டோபர் முதலாம் திகதியில் இருந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மக்கள் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவுமுத்திரை உள்ள 16 ஆயிரம் குடும்பங்களுக்கும் ஜனசக்தி அறிமுக அட்டை வழங்கப்பட்டுள்ளது. (க-10)

## பருவமழை

முல்லைத்தீவு, ஆக 12

முல்லைத்தீவுப் பகுதியில் நீண்ட இடைவெளிக்குப்பின் பருவமழை தொடர்ந்து பெய்து வருகின்றது. (சு-92)

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில்

# டாக்டர்களுக்குத் தட்டுப்பாடு; சுகாதார திணைக்களம் முறையீடு

யாழ்ப்பாணம், ஆக 12

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட டாக்டர்களுக்கான பதவிகள் வெற்றிடங்களாக உள்ளதாக யாழ்ப்பாண சுகாதாரத் திணைக்களம் சுகாதார அமைச்சுக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

பருத்தித்துறை, தெல்லிப்பளை வைத்தியசாலைகளில் மட்டும் 25 டாக்டர்கள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் தற்பொழுது 13 டாக்டர்கள் மட்டுமே கடமையாற்றுகிறார்கள்;

இவற்றைவிட நயினாதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, அச்சுவேலி, பளை, வட்டுக்கோட்டை, கோப்பாய், அக்கராயன்குளம், பூநகரி ஆகிய வைத்திய சாலைகளில் ஒரு டாக்டர் கூட இல்லை என்றும் யாழ் சுகாதாரப் பணிப்பாளர் திரு. என். கனகசபை தெரிவித்தார். மேற்படி வைத்தியசாலைகளில் உதவி வைத்தியர்கள் (ஆர்.எம்.பி) கடமையாற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக டாக்டர்களுக்கு நியமனங்கள், இடமாற்றங்கள் சுகாதார அமைச்சினால் வழங்கப்படாததன் காரணமாகவே இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள டாக்டர்கள் பற்றாக்குறை பற்றிய முழுவிவரமும் சுகாதார அமைச்சிடம் எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [க-10]

## கம்பன் விழா

யாழ்ப்பாணம், ஆக. 12

காரைநகர் கம்பன் சழகத்தின் 4ஆவது ஆண்டுக் கம்பன் விழா எதிர்வரும் செப்டம்பர் மாத நடுப்பகுதியில் இடம்பெறும். இது தொடர்பான காரைநகரைச் சேர்ந்த மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் முறையே செப்டம்பர் 11ஆம், 12ஆம் திகதிகளில் இடம்பெறும் என காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. ரி. சிவகுமாரன் தெரிவித்தார். (க)


விதை உருளைக்கிழங்கு
விற்பனைக்கு
விநியோகஸ்தர்கள் தேவை

1989 காலபோகப் பயிர்ச்செய்கைக்கென ஒல்லாந்தின் (Holland) பிரபல உற்பத்தியாளராகிய டி. சற். பி. சி. (De Z. P. C.) யிடமிருந்து "டிசயரி" இன விதை உருளைக்கிழங்கை நாங்கள் இறக்குமதி செய்பவுளோம்.

இவ்விதை உருளைக்கிழங்கை விநியோகம் செய்ய விரும்புவோர் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முகவரி: ஈஸ்வரன் பிறதர்ஸ்
267, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
தொலைபேசி: 422864, 433587;

யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளக்கூடிய முகவரி:
யுனைட்டட் ஏஜன்சிஸ்
பலாலி றோட்,
உரும்பராய் சந்தி,
(கல்யாண மண்டபம் முன்பாக)
உரும்பராய்
(1505)



விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
பிரிவு 6 Day Classes (8.30 - 1.30)
O/L Evening Classes (2.00 - 4.00)
ஆரம்பம்: 14 - 8 - 1989
★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ★
விஞ்ஞானம்:- திரு: J. R. சூரி
கணிதம்:- திரு: செல்வா
ஆங்கிலம்:- திரு: விஸ்வநாதன்
தமிழ்:- / சமயம்:- திரு. சுந்தரலிங்கம்
சமூகக்கல்வி:- திரு. கருணாகரன் / திரு. சுந்தரமூர்த்தி
வர்த்தகம்:- திரு. கருணாகரன்
முக்கிய குறிப்பு:
கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும் ஒரே நிறுவனம்:
● விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்:
(சி/3255)



விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
A/L கலை, வர்த்தக
வகுப்புக்கள்
91 பிரிவு 2, ஆரம்பமாகிவிட்டன
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:
பொருளியல்:- திரு. கலாகரன்
வர்த்தகம்:- திரு. லங்கா
கணக்கியல்:- திரு. வன்னியசிங்கம்
அளவையியல்:- திரு. சுப்பிரமணியம்
இந்து நாகரிகம்:- திரு. காரைசுந்தரம்பிள்ளை
தமிழ்:- திரு. குழந்தை
புவியியல்:- திரு. குணராஜ்
அரசியல்:- திரு: மஃறூப்
● முக்கிய குறிப்பு:- கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து கற்பிக்கும் ஒரே நிறுவனம்.
(சி-8761)



★ வேகமாக விற்பனையாகின்றன
அஸ்ரன் வெளியீடுகள்
ஆசிரியர் பயிலுநர் போட்டிப் பரீட்சைக்குரிய
பொதுஅறிவு - பொதுஉளச்சார்பு [விலை 65/50]
(1984, 87 பரீட்சைகளின் வினா-விடைகளை உள்ளடக்கியது)
S. L. A. S. மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குரிய
கிரகித்தல், நுண்ணறிவு, விடயஆய்வு
(1986 87 பரீட்சைகளின் வினா-விடைகளை உள்ளடக்கியது)
★ எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
கேட்டு வாங்குங்கள்!
அஸ்ரன் வெளியீடுகள்!!
(சி-3276)



கம்பியூட்டர் கல்வி

| | Basic | d Base III + | I.D.P.M [Part II] |
|---|---|---|---|
| Duration | 4 Months | 2 Months | 4 Months |
| Days | Tue, Fri | Sat, Sun | Sat, Sun |
| Monthly Fees | 300/- | 600/- | 225/- |
| Commencement | 18-8-89 | 19-8-89 | 12-8-89 |

★ Lectures By Members of IDPM (London)
★ Practicals on I B M (Compatibles)
★ தமிழிலும் விளக்கங்கள் தரப்படும்.
★ Valuable Certificate

C. I. M. A., I. D. P. M., I. A. B.
TYPING வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும் விபரங்களுக்கு:
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Leaders in Computer Education)
16, 3rd Cross Street, Jaffna.
(சி/3186



LEADERS IN ACCOUNTANCY
INTRODUCING
DATA PROCESSING AND
COMPUTOR PROGRAMMING
IN
BASIC LANGUAGE
Commensing 14 th Aug. 1989.
AND
WORD PROCESSING
Commensing 14 th. Aug. 1989
ALSO
Lotus 1 2 3 At Our Earliest
{ EPSON (I.B.M. COMPATIBLE) COMPUTER இல் செய்முறைப் பயிற்சியும் FILE HANDLING இல் சிறந்த தேர்ச்சியும் அளிக்கப்படும்; }
விபரங்களுக்கு:
North Ceylon Technical Institute
14, St. Peters Lane;
Hospital Road, Jaffna.
(C/3202)


## வந்திடுவான்! வாழவைப்பான்!!

எடுப்பு

எனக்கொரு குறையுமில்லை - நல்லூர்
இறையவன் இருக்கையிலே
(எனக்)

தொடுப்பு

துணைக்கவன் வந்திடுவான் - துயர்
துடைத்தவன் வாழவைப்பான்
(எனக்)

முடிப்பு

தனக்கெனத் தலங்கள் வைத்தான் - தமிழ்
தழைத்திட அருளைத் தந்தான்
இணக்கமாய் நல்லூர் தன்னில் - நாம்
இன்புறக் கோயில் கொண்டான்
(எனக்)

நயினைக் கவிஞர்
நா. க. சண்முகநாதபிள்ளை

(இன்று நல்லூர்க் கந்தன் 7ஆம் திருவிழா)


★ கம்பியூட்டர் பயிற்சி ★
OSLO SCIENCE ACADEMY
["கலைமகள்" மருத்துவமனை அருகில், பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை.]
COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC
அடுத்த வகுப்பு ஆரம்பம் 12 - 08 - 1989
(காலம் 3 மாதம்) மாலை 3.00 மணிக்கு
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
(1470) - மகா.



அந்திய கால சேவையில் புதிய நண்பன்
★ எம்பாமிங் ★ பிரேதப்பெட்டிகள்
★ றேஸ் மலர்வளையங்கள்
★ ஊர்வல வாகனங்களுக்கு
எம்மை நாடுங்கள்!
பிறைற் ஹவுஸ்
(புனித யாகப்பர் ஆலய அருகாமை)
No: 210 பிரதான வீதி — யாழ்ப்பாணம்.
(சி/3280)


## கேள்வி அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாண அரசு
கட்டடங்கள் திணைக்களம்

மேற்படி அரசினால் பரந்தன் உணவுக் களஞ்சியம் திரு துலதற்கான கேள்விகள் திருகோணமலை உள்துறைமுக வீதி, வடக்கு கிழக்கு மாகாண அரசுக் கட்டடங்கள் திணைக்களத் தலைவரினால் 1989ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30ஆம் திகதி முற்பகல் 10மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 500, 000/-க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கட்டடங்கள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் அதே அளவு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கட்டடங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரிசிலிப்புக் கடிதங்களை (Trial Letters) வைத்திருப்போரும் இக் கேள்விகளுக்குத் தகுதியுடையோராவார்.

மேற்படி கேள்வி அறிவித்தல் ஆவணி 89 - 28ஆந் திகதி 4. 30 மணி வரை கிளிநொச்சி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி வைப்புக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியவற்றை ஏதாவது கச்சேரியில் பணமாக வைப்பு செய்து கொள்ளலாம்.

(அ) ரூபா 500/-க்கான மீளளிக்கப்படாத கட்டண ரசீது.

(ஆ) ரூபா 3500/-க்கான மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு ரசீது:

கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும்; அத்துடன் ஏதும் விபரங்களை கிளிநொச்சி நிறைவேற்று பொறியியலாளரிடமிருந்து காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்;

கேள்விதாரர் தனியார் கம்பனிகளாயின் அவை தமது தற்போதைய பணிப்பாளர்களினதும் பங்குதாரர்களினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்;

— சி. சுப்பிரமணியம்
பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கம்,
திருகோணமலை.

உள்துறைமுக வீதி,
திருகோணமலை.

(சி/3279)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லூரில் சகாய விற்பனை"

நல்லூரில், கந்தசுவாமி கோயில் வீதியில் அமைந்திருக்கும் விளம்பர காட்சிச் சாலையில் ரூபா 20/-க்கு 'மில்க்வைற்' உற்பத்திகளை வாங்குபவர்களுக்கு காத்திருக்கும் அன்பளிப்புகள்:-

1. அழகிய பொலித்தீன் [B] பாக் ஒன்று
2. இரை விதைப் பைக்கற் ஒன்று.
3. அகத்திக் கீரைக் கன்று ஒன்று.
4. கந்தரனுபூதி நூலொன்று.
5. அழகிய முருகன் ஸ்ரிக்கர் ஒன்று.

'மில்க்வைற்' மேலுறைகளைச் சேர்த்துள்ளோர் அவற்றைக் கொடுத்து அரிய பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

# சஞ்சீவி

12 - 08 - 1989 சனிக்கிழமை

இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு

''நீம் சுகாதார தூபம்''

இயற்கை மூலங்களைக் கொண்டு 'மில்க்வைற்'றால் தயாரிக்கப்படுவது.

நுளம்பு, கொசுகு, ஈயையான் முதலியவற்றின் தொல்லைகளை நீக்கி இல்லத்தில் நறுமணம் நிறைந்து மங்களம் பொலிந்திட ''நீம் சுகாதார தூபம்''!

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

## ஜனாதிபதி அனுமதி பெற்றே முதல்வர் புதுடில்லி சென்றார்

கொழும்பு, ஆகஸ்ட் 12

ஜனாதிபதி பிரேமதாஸாவின் அனுமதி பெற்றே வடக்கு—கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் புதுடில்லி சென்றார்.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின, நேற்று முன்தினம் இத்தகவலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. பிரதிப ஹபனகமவின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் விஜேரத்தின இவ்வாறு சொன்னார்.

முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாளிடம் சரியான பாஸ்போர்ட் இருந்தது. அவர் புதுடில்லி சென்றதால் குடியகல்வு—குடிவரவுச் சட்ட விதிகள் மீறப்படவில்லை''— என்றும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

## பாதிப்புற்றோருக்கு புனர்வாழ்வு நிறுவன உதவி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 12

வடமராட்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கவென 84 ஆயிரம் ரூபாவை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி. ஆர். ஆர். ஓ) வழங்கியுள்ளது.

கரவெட்டி மற்றும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்களின் வேண்டுகோளின் பேரிலேயே மேற்படி நிதியுதவி வழங்கப்பட்டதாக (ரி. ஆர். ஆர். ஓ) அறிவித்துள்ளது:

இந்நிதியின் மூலம் வல்வெட்டித்துறையில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு அன்றாட உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும்.

நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்துக்கு 73 ஆயிரத்து 863 ரூபா 50 சதமும், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்துக்கு 10 ஆயிரத்து 294 ரூபா 45 சதமும் வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஓ)

### பயிலுநர் ஆசிரியர் தெரிவு:

## கிளிநொச்சி மாவட்டத்தில் நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஆக. 12

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இப் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் விவரங்கள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சை, போட்டிப் பரீட்சை ஆகியவற்றுக்கு தெரிவானவர்கள் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானவர்கள் விவரங்கள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும், பச்சிலைப்பள்ளி உ. அ. பிரிவில் தெரிவானவர்கள் விபரங்கள் பளை ம. வியிலும் பூநகரி உ. அ. அதிபர் பிரிவில் தெரிவானவர்கள் விபரங்கள் பூநகரி ம. வியிலும் எதிர்வரும் 14ஆம் திகதி பார்வைக்கு வைக்கப்படவிருக்கிறது.

விண்ணப்பித்தோர் அத்தினத்தில் குறிப்பிடப்பட்ட இடங்களில் வந்து தம் கடிதங்களை பெற்றுக்கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சை 20ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (உ-3)

### கோப்பாய் உ. அ. அ. பிரிவு மக்களுக்கு

## ஆஸ்பத்திரி வீதி வங்கியில் திங்கள் ரூ 4000 நிவாரணம்

யாழ்: ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி பிரதான கிளையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை உற்பத்தித் திறனாய்ந்த தொழில் முயற்சிக்கான நிவாரணப்பணமான ரூபா 4 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கே அன்று காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை நிவாரணப் பணம் வழங்கப்படும்.

பத்தமேனி, இடைக்காடு, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு ஆவரங்கால், கோப்பாய் வடக்கு ஆகியவையே அந்த பகுதிகளாகும்.

இதுவரை பணம் பெறத் தவறியவர்களும் அன்று பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## எமது புதிய வெளியீடுகள்

(1) ★ விசு ★ சரண்யா ★ மாதுரி ★ மனோரமா நடித்த

சகலகலா சம்பந்தி

(ஒறிஜினல்)

(2) ★ பார்த்திபன் — ★ சீதா நடித்த

புதிய பாதை

[ஒறிஜினல்]

(3) ★ மோகன் ★ சந்திரசேகர் ★ S S சந்திரன் ★ செந்தில் நடித்த

சொந்தம் 16

[ஒறிஜினல்]

வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

(11725)

## மாலி சந்தி கடையில் கொள்ளை

வல்வெட்டித்துறை ஆக 12

நெல்லியடி, மாலி சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை உடைக்கப்பட்டு கொள்ளையிடப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-160)

## புத்தகங்கள் சேதமாக்கப்பட்டன

ஒட்டுசுட்டான் ஆகஸ்ட் 12

ஒட்டுசுட்டானில் சர்வோதய பிரதேச நிலையத்தில் இருந்த புத்தகங்கள், கோவைகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-113)

## இந்திய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ஹோமகம வீதியில் நேற்று முன்தினம் மூன்று பேரின் சடலங்கள் கிடக்கக் காணப்பட்டன.

★ இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கேகாலையில் ஒருவரும் மெதிரிகிரியவில் ஒருவரும் உயிரிழந்தனர்.

★ தொடங்கஸ்லந்தையில் புதனிரவு இராணுவ சிப்பாய் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற குழு ஒன்று இராணுவச் சிப்பாயின் தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் உட்பட ஏழு பேரைச் சுட்டுக்கொன்றது.

★ பண்டாரவளை தோட்டம் ஒன்றில் பிரபல இந்திய தமிழ் வர்த்தகர் ஒருவர் வியாழன் இரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

★ புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அக்குறணை கிராமிய வங்கியிலிருந்து பணம் மற்றும் நகைகளாக ரூபா ஒரு லட்சத்து 20 ஆயிரம் கொள்ளையடிக்கப்பட்டது.

★ நேற்று அம்பாறையில் உபதபாலகம் ஒன்று எரிக்கப்பட்டது.

★ நேற்றுக்காலை வெலிகமவில் தென் மாகாண சபையின் ஆளும்கட்சி அங்கத்தவரான எம். எம். மஹ்ரூப் என்பவர் காரில் வந்துகொண்டிருந்த போது சுடப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவரும் அவரது மருமகனும் படுகாயமடைந்தனர். (உ,21)

## ஜப்பான் --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டபூர்வமற்ற முறையில் மகள் ஒன்று பிறந்தது என்றும் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

பிரதமர் காய்போ நேற்று செய்தியாளர் மாநாடொன்றை கூட்டி, குற்றச்சாட்டை நிராகரித்தார்.

கடந்த ஒரு மாதகாலத்தில் ஜப்பானில் நியமிக்கப்பட்ட 3 ஆவதுபிரதமர் இவராவார்.

முந்திய பிரதமர்கள் இருவரில் ஒருவர் நிதி மோசடிக் குற்றச் சாட்டிலும், மற்றவர்பாலியல்குற்றச் சாட்டிலும் பதவியிழந்தது தெரிந்ததே. (உ-எ)

## இயக்கச்சி----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபகரித்த பொருள்களுடன் காட்டுக்குள் சென்று மறைந்தனர்.

பிரஸ்தாப பஸ் மீண்டும் அங்கிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட சமயம் பரந்தனில் வைத்து பழுதடைந்து நின்றுவிட்டது.

சுமார் 10 பிரயாணிகள் தமது கொழும்புப் பயணத்தை இடை நிறுத்தி விட்டு நேற்று நண்பகல் அளவில் இ.போ.ச பஸ் ஒன்றில் யாழ்ப்பாணம் திரும்பினர்.

பஸ் இரவு வவுனியாவில் தரித்து நின்று இன்று சனிக்கிழமை காலையே மீண்டும் கொழும்பு நோக்கிப் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

# மன்னார் குடாவில் எண்ணெய் அகழ்வு!

## மாகாணசபை முயற்சி

சென்னை ஆகஸ்ட் 12

மன்னார் குடாவில் எண்ணெய் அகழ்வு வேலைகளை தொடங்கப் போவதாக வடக்கு, கிழக்கு மாகாணசபை அறிவித்திருக்கிறது.

ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளின் உதவியுடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாகாணசபையின் நிதி அமைச்சர் திரு. பி. கிருபாகரன் இவ்வாரம் சமர்ப்பித்த சபையின் வரவு செலவு திட்டத்தில் மன்னார் குடாவில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடுவது பற்றிய யோசனை வெளியிடப்பட்டிருக்கிறது.

மாகாணசபையின் இந்த யோசனைக்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்—

இலங்கையின் அதிகாரப்பரவலாக்கல் நடைமுறையின் கீழ் மாகாணசபைகளுக்கு கடல் மற்றும் கனிவள விடயங்களில் அதிகாரம் இல்லை என்றும் இந்திய பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. (உ)

### சூட்டுக் காயங்களுடன்

## இளம் பெண்ணின் சடலம் புதையுண்ட நிலையில் மீட்பு!

கிளிநொச்சி குளத்துக்கு அண்மையில் உள்ள வைரவர் கோவிலடியில் துப்பாக்கிசூட்டு காயத்துடன் இளம் பெண் ஒருவரின் சடலம் நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில்கண்டு பிடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்டு பிடிக்கப்பட்ட இச் சடலம் பொது மக்களின் உதவியுடன்தோண்டி எடுக்கப்பட்டு கிராம சேவையாளரினால் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று வரை இந்தச்சடலம் அடையாளம் காணப்படவில்லை. (உ-76)

## இலங்கை அரசின்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

பத்திரிகையாளர் மாநாடு நடைபெறுமா என்பது குறித்தோ அல்லது அதில் பங்குபற்ற பிரதிநிதிகளை அனுப்புமாறோ நேற்றிரவு 9 மணி வரை பத்திரிகையாளர்களுக்குத் தகவல் ஏதும் அனுப்பப்படவில்லை என்று கொழும்பில் செய்திஏஜென்ஸிகள் தெரிவித்தன.

இது புதுடில்லி யோசனைகள் குறித்து அமைச்சரவையின் முடிவு வெளியிடப்பட மாட்டாது என்பதையும்—

அமைச்சர்களின் ஆலோசனைகளைத் தமது கருத்தில் கொண்டு ஜனாதிபதி எடுக்கும் முடிவே இலங்கை அரசின் முடிவாக அறிவிக்கப்படும் என்பதையும் ஊர்ஜிதப்படுத்துவதாக அமைகிறது என்றும் கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

## பண்டத்தரிப்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரணமான அடுத்த நபர் ஒரு வண்டில்காரர் என அறிய வந்தது.

அசம்பாவிதத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (அ-9)

## ஜனநாயகத்தைப் பேணு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப்படுகிறார்கள் என்பதை அவர் புள்ளிவிவரங்களுடன் விளக்கினார்.

தாம் தேடுபவர் கிடைக்காவிடில் அவரின் குடும்பத்தையே தீயசக்திகள் பூண்டோடு அழித்துவிடுவதாகவும் அவர் கூறினார்.

### மரண ஆணை

நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் பலருக்கும் இனந்தெரியாதவர்கள் ''மரண ஆணை'' வழங்கி இருக்கும் ஆபத்துக் குறித்தும் அவர் விவரித்தார்.

வன்செயல்கள் பற்றிய முறைப்பாடுகளை நாடாளுமன்றப் பாதுகாப்பு ஆலோசனைச் சபைக்குத் தெரியப்படுத்தும்படியும் அவர் எம். பிக்களைக் கேட்டுக்கொண்டார்.

திரு. ரஞ்சன் விஜேரத்தின தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயக முறையைச் சீரழிக்கும் சக்திகள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.

ஜனநாயக ஆட்சி முறையை மதிப்பவர்களையும் இதில் நம்பிக்கை கொண்டிருப்பவர்களையும் ஒழிப்பதற்கு திட்டமிடப்பட்ட ரீதியில் சதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஐ. தே. கட்சியினரே அதிகம் பலி

வன்முறைக்குக் கடந்த ஜூலை மாதத்துடன் முடிவடைந்த இரண்டு ஆண்டு காலத்தில் பலியானவர்களின் [illegible] வருமாறு:-

ஐ. தே. க. — 672

ஸ்ரீ. ல. சு. க. — 100

இலங்கை மக்கள் கட்சி — 17

ஐக்கிய சோஷலிச முன்னணி— 67

பாதுகாப்புப்படையினர்- 354

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக மக்கள் பேசுவதற்குக் கூடத் தயங்குகின்றனர்.

ஐ. தே. க. உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டு வருகிறார்கள். சட்டவிரோத ஊர்வலங்களில் கலந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தப் படுகிறார்கள்.

இலக்கத்தகடு இல்லாத வாகனங்களே இக்கொலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

அரசாங்க ஆதரவாளர்களாகக் கருதப்படுபவர்களுக்கு 'மரண ஆணைகள்' வழங்கப்படுகின்றன.

சகல ஜனநாயக அமைப்புக்களும் ஒன்றுபட்டு இந்த பயங்கர வன்முறையில் ஈடுபடும் சக்திகளுக்குக் கூட்டாக வேண்டுகோள் விடுக்கும் கடமை இத்தருணத்தில் அவற்றுக்கு இல்லையா? என்று கேட்க விரும்புகின்றேன்.

அரசியல் நோக்கங்களை அடைவதற்கு வீணாக மனித உயிர்களைக் கொல்வதால் எதுவித அர்த்தமும் இல்லை என்பதை அச்சக்திகளுக்கு உணரவைப்பது இந்த ஜனநாயக அமைப்புக்களின் கடமையாகும்.

அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கப் போராட்டம் வழி அல்ல. பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க வேண்டும். இந்தக் கொள்கையையே அரசு இன்னமும் கடைப்பிடிக்கிறது — என்றார். (அ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லீலா அருளையா

சண்டிக்குளி ரக்கா வீதியைச் சேர்ந்த திருமதி லீலா அருளையா 10-08-89 அன்று கொழும்பில் திடீரெனத் துயிலுக்குள் நித்திரையடைந்தார்.

இவர் காலஞ்சென்ற அலன் அருளையா (ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி)யின் அன்பு மனைவியும், சிலன் அருளையா (கிறின்ட் லேய்ஸ் வங்கி, கொழும்பு)வின் அன்புத் தாயாரும், சாந்தி அருளையா (ஹொறத்துடுவ முஸ்லிம் பாடசாலை ஆசிரியை)யின் அன்பு மாமியும், ஜெபசேயன், திவ்வியசேயனின் அன்புப் பேத்தியும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை 52' பெர்னன்டோ வீதி, வெள்ளவத்தையில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(1488)

### திருமதி பொன்னம்மா தருமலிங்கம்

பண்டத்தரிப்பைச் சேர்ந்த பொன்னம்மா தருமலிங்கம் 11-8 89 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற M. R. தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், த. ஞா. நியூட்டன் (விலை மதிப்புத் திணைக்களம், கொழும்பு), மாக்கிறேற் ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியநாதன் [நியூலங்கா அலுமினியத் தொழிற்சாலை], நிர்மலினி ஆகியோரின் அன்பு மாமியும், கிருஷானி, நிஷாந்தன், சிறோமி, சோபனா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை ஞாயிற்றுக்கிழமை [13-08-89] அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக பண்டத்தரிப்பு தென் இந்திய திருச்சபை சேமக்காலைக்கு 9 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நியூட்டன்.

சின்னத்தம்பி வளவு,
பண்டத்தரிப்பு.

[11726]

### திருமதி பொன்னம்மா வைத்திலிங்கம்

சுதுமலை வடக்கைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா வைத்திலிங்கம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிருப்பர் வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், தெய்வநாயகி (ஆசிரியை, இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை), சுந்தரலிங்கம் (விஞ்ஞான கல்வி அதிகாரி, மாத்தளை), கப்ரின் பாஸ்கரன், பராசக்தி, பாலகிருஷ்ணன் (உரிமையாளர், மொடேண் ரேட்ஸ், யாழ்ப்பாணம்), விமலாதேவி, பாலேந்திரன் (ஆசிரியர், இராமநாதன் கல்லூரி), பாலச்சந்திரன் (கல்கி ரேட்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினகோபால் (செயலாளர், பாலர் கல்விக் கழகம்), தனலக்சுமி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), தனேஸ்வரி (சனசமூக நிலைய உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), செல்வரத்தினம் (காசாளர், ஆற்றுப் பள்ளத்தாக்குச் சபை, தம்புல்ல), சிதம்பரேஸ்வரி, குமாரகுலசிங்கம் (நொதேன் இன்டஸ்ரீஸ்), ரஞ்சனாதேவி (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), இந்திராணி (ஆசிரியை, ஆண்டிமுனை ம.வி.) ஆகியோரின் அன்பு மாமியும், தனுஜா, ரமணன், கார்த்திகா, யாழினி, ஜனகன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் சுதுமலை இல்லத்தில் 13-08-1989 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
இ. இரத்தினகோபால்
(மருமகன்)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(1506)

### திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா

புங்குடுதீவு 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா காலமாகிவிட்டார்.

இவர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை (அம்பாள் ஸ்ரோர், முல்லைத்தீவு), உலகநாதன் (முல்லைத்தீவு), நகேசு, மங்கையர்க்கரசி, பேரம்பலம் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சப்-இன்ஸ்பெக்டர் புண்ணியமூர்த்தி, லெட்சுமணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, திலகவதி, நாகேசு, பேரம்பலம், விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், கதிரவேலு, முத்துப்பிள்ளை, பரமலிங்கம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணபதிப்பிள்ளை மாரிமுத்துவின் மகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12-ம் திகதி சனிக்கிழமை இன்று காலை 10-00 மணியளவில் தகனக்கிரியைக்காக நாமுண்டாமுனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

8-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(1507)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 08 - 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHILTON
CHILTON
CHILTON
CHILTON
CHILTON

சஞ்சீவி சஞ்சிகை

12 - 08 - 1989 சனிக்கிழமை

மலிவு விலையில் அறிமுகம்
CHILTON TRIP SWITCH
மின்பொறியியலில் புகழ்மிக்க
Ottermill Chilton Ltd
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு
சுந்தர் சன்
சந்தைமுன், மானிப்பாய்.

# தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம்: ஈழத் தமிழர்கள் ஏற்றுக் கொள்வரா?

**கருத்துக் கலசம்** — மயூரா

## பொறுப்புணர்வு பெருக்குவோம்

**மெய்** வருத்தம் பாரார்; பசி நோக்கார்; கண் துஞ்சார்; கருமமே கண்ணாயினார் — என்று உண்மை உழைப்பைப்பற்றி உணர்த்துகிறது ஒரு பாடல். அது பொறுப்புணர்ச்சியின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது எனலாம்.

உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் கூடப் பொறுப்பில்லாமல், பொறுப்புணர்வு இல்லாமல் நடந்து கொள்ளும் காலம் இது! ஆபத்தான நிலையில் உள்ள நோயாளியைக் கவனிக்காமல், வார்ட்டில் இருந்து தங்கள் வீட்டு விவகாரங்களைச் சூடாக விவாதித்துக் கொண்டிருக்கும் பணியாட்களையே அங்கு அதிக எண்ணிக்கையில் காண்கிறோம்.

மக்கள் அன்றாடம் பாவிக்கும் ஒரு பிரதான வீதி. அதில் உள்ள பள்ளத்தை நிரப்பித் திருத்துவது சம்பந்தமாக மாதக் கணக்காக அதிகாரிகள் "அது எனது பொறுப்பல்ல, இன்னாரது பொறுப்பு" என்று தட்டிக் கழித்து இழுத்தடிக்கிறார்கள்! இதுவும் பொறுப்பற்ற தன்மையின் பிரதிபலிப்பே.

பாலத்தைத் திருத்த ஒப்பந்தம் செய்தவர், இருப்பில் கிடந்து கறள் கட்டிய இரும்புக்கம்பியைப் பாவித்துக் "கொங்கிறீட்" போடுவதும் பொறுப்புணர்வு இல்லாமையின் தன்மையே.

இப்படிச் சமூகம் முழுவதிலும் பொறுப்புணர்வு இல்லாத தன்மை பரவி வருகிறது. அதுவும் பொதுமக்களுக்குச் செய்யும் பணிகளில் பொறுப்பில்லாமல் நடந்து கொள்ளும் வழக்கம் மலிந்து வருகிறது. தமக்குக் கிடைக்கக் கூடிய சுயலாபத்தைக் கருதி, மக்கள் நலனை அதனிடம் பணயம் வைக்கிறார்கள், பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியவர்கள்.

இந்தப் பொறுப்புணர்வு இல்லாத தன்மையே லஞ்சம், ஊழல், மோசடி ஆகிய சமூகவிரோதச் செயல்களுக்கு வித்திடுகிறது. சமூக நலனைப் புற்றுநோய் போலப் பிடித்து உபாதையும், உபத்திரவமும் கொடுக்கிறது.

நானும் சமூகத்தின் அங்கம். சமூகம் நலன்களை அனுபவித்தால் தான் நானும் அவற்றை அனுபவிக்க முடியும். சமூகத்துக்குச் செய்யவேண்டிய கடமை என்று எனக்கும் உண்டு. அந்தக் கடமையைப் பொறுப்புணர்ச்சியுடன் செய்யவேண்டும். இவ்வாறு ஒவ்வொருவர் மனதிலும் பொறுப்புணர்வு பிறக்கவேண்டும்

இங்குள்ள ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு அதிகாரியும், ஒவ்வொரு பணியாளரும் தமக்குள்ள பொறுப்புக்களை உணர்ந்து பொறுப்புடன் நடக்கப் பழகுதல் அவசியம். அதுவே இன்றைய முக்கிய தேவையுமாகிறது.

பொறுப்புணர்வைப் பெருக்குவோம்.

★

**19**-10-1978 அன்று தமிழக அரசு தமிழிலுள்ள எழுத்துக்கள் 'சீர்திருத்தம்' செய்யப்படல் வேண்டும் என்ற சட்டத்தைப் பிறப்பித்தது. இச் 'சீர்திருத்தம்' பற்றி முதலில் எடுத்துரைத்த வரும் துணிந்து கையாண்டவரும் திராவிடக் கழக மூலவரான பெரியார் ஈ. வே. ரா. என்ற ஈ. வே. ராமசாமி நாயக்கர் ஆவார்.

சமயம், சமூகம், மொழி சார்ந்த புரட்சியான கருத்துக்களை மக்களிடையே பரப்பி அது காலவரை நிலவிய தமிழர் தம் வாழ்வியலைத் தலைகீழாக மாற்றியவர் என்பதால் அவர் கொண்டுவந்த 'எழுத்துச் சீர்திருத்தம்' தமிழக அறிஞரிடையே பெரும் அச்சத்தையும் ஐயத்தையும் ஏற்படுத்தியது இயல்பே.

பெரியாரின் 'சீர்திருத்தக்' குரலாலே ஈர்க்கப்பட்ட அவர் தம் ஆதரவாளர்கள், தாம் நடத்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் வெளியிட்ட நூல்களிலும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைப் படிப்படியாகப் புகுத்தத் தொடங்கினர். எனினும் தமிழகம் முழுவதும் இதற்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் கருத்துக்கள் வெளிவரத் தொடங்கின; பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இத்தகைய கட்டுரைகள் அதிகமாக வெளிவந்தன. கருத்தரங்குகள் விவாதங்கள் நடந்தன.

### இரண்டு காரணிகள்

இவ்வாறான வாதப் பிரதிவாதங்களுக்கு இடமளித்த காரணிகள் இரண்டு எனலாம்.

1. பெரியாரது கொள்கையும், கொள்கை நிறைவேற்றத்திற்கு அவர் கையாளும் வழிவகைகளும் தமிழறிஞரிடையே ஏற்படுத்திய வெறுப்போடு கூடிய அச்ச உணர்வு.

2. அரசு மட்டத்தில், அரசியற் சார்பான முறையிலே மொழிச் சீர்திருத்தம் ஏற்படுத்துவது எதேச்சாதிகாரமானதாகும் என்று கருதியமை.

இவை போலப் பலமானது என்று கொள்ளமுடியாத விடத்தும் உளவியல் சார்ந்ததாகவும் தமிழ் அறிஞர்களின் உணர்வுகளைச் சீண்டுவதாகவும் அமைந்த காரணியாக எனக்குத் தோற்றுவது எழுத்துச் சீர்திருத்தம், எழுத்துச் சீரமைப்பு ஆகிய சொற்றொடர்கள் கையாளப்பட்டமையே.

'சீர்' என்ற சொல்லுக்கு அழகு, ஒலி, இரைச்சல், ஒழுங்கு, காவுதடி, கால் தண்டை, சித்திரம், சிலம்பம், சிறப்பு, சொல்; செல்வம், செய்யுள், மிகுபுகழ் முதலாக நாற்பத்தாறு பொருள்கள் கழகத் தமிழ் அகராதியிலே தரப்பட்டுள்ளன. இவற்றுள்ளே பெரும்பாலானவை 'சிறப்பு' என்ற பொருளையே முதன்மைப்படுத்தல் காணலாம்; ஆக 'எழுத்துச் சீர்' என்பது எழுத்தின் சிறப்பை, அழகை, மிகுபுகழைப் புலப்படுத்துகையில்

சீர் உடைத்தாய ஒன்றைத் திருத்துவதா?— என்ற வியப்பும் திகைப்பும் தமிழறிஞர்களுக்கு ஏற்பட்டமை இயற்கையே! 'உலகம் என்பது உயர்ந்தோர் பேற்றே' என்ற கருத்தால் வளர்ந்தவர்களும் வளர்க்கப்பட்டவர்களுமான இவர்கள் தமிழை ஆழமாகவும், அகலமாகவும் கற்றுத் தேர்ந்த தமக்குத், தமக்கே உரிமையான 'என்றுமுள தென்ற மிழுக்கு' அதன் எழுத்துச் சீருக்குத் திருத்தம் கொணர இவர்கள் யார் என்று ஆதங்கமும், ஆத்திரமும் கொண்டதில் வியப்பில்லை.

எனவே இத்தகைய எதிர்ப்பாளர்களைப் பொருள் செய்யாது அரசியல் மேட்டிமையையும், பொதுமக்கள் ஆதரவையும் துணையாக்கி தமிழக அந்நாள் முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் சட்டமாக ஆக்கியமை இன்றும் சர்ச்சைக்கு உரியதாகவே உள்ளது; இது தவிர்க்க முடியாததே.

உண்மையிலே தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 247 எழுத்துக்களினதும் வரிவடிவங்களும் சீர்திருத்தத்துக்கு உள்ளாகவில்லை. அவ்வாறு செய்வதும் இயலாதகாரியம். எழுத்துச் சீர்திருத்தத்தை வலியுறுத்துவோர் சில எழுத்துக்களின் வரிவடிவிலே சிற்சில மாற்றங்கள் வேண்டும் என்கின்றனரே அன்றி, எல்லாவற்றையும் தலைகீழாக்கி விட அவர்கள் முனையவில்லை என்பதை நாம் மறந்துவிடலாகாது.

> தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் இலங்கையிலும் அமுல் நடத்த ஏற்பாடாகி வருகிறது.
>
> அரசு மட்டத்தில் சட்டம் கொண்டு வரவும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டமூலத்தைக் கொண்டு வரப்போவதாக தமிழ் மொழி விவகாரத்துணை அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அறிவித்து இருக்கிறார்.
>
> இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சீர்திருத்தத் தமிழ் நடைமுறையில் இருக்கிறது.
>
> இலங்கையில் அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதால் நாம் அடையப்போகும் நன்மைகள், தீமைகள் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன.
>
> தமிழறிஞர் சொக்கன் அவர்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் உருவான விதம், இது பற்றிய தனது கருத்து ஆகியவற்றை விரிவாக இக்கட்டுரையில், விவரித்திருக்கிறார்.
>
> கட்டுரையின் முதலாம் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

இவ்விடத்திலே தமிழ் எழுத்துக்கள் தோன்றிய காலந்தொட்டே மாறாத வடிவினவாகவே நிலவிவந்தனவா என்ற கேள்வி எழுகின்றது. இக்கேள்விக்கு விடை காண நாம் தமிழ்ச் சாசனவியலையும் பழந்தமிழ் இலக்கணங்களையுமே ஆதாரமாகக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது. முதலிலே சாசனவியலை நோக்குவோம்:

### சாசனவியலும் தமிழ் எழுத்துக்களும்

வரலாற்றுப் பேராசிரியரும் சாசனவியல் அறிஞருமான கலாநிதி கா. இந்திரபாலா சாசன ஆய்வின் அடிப்படையிலே தமிழ் எழுத்துக்கள் பற்றிய கருத்தினைத் தந்துள்ளார். 'பிராமி' என்ற எழுத்து முறையிலிருந்து இன்றுள்ள தமிழ் எழுத்து முறை அமைந்தது எனக் கொள்ளும் அவரின் கூற்றுப் பின்வருமாறு!

'பிராமி ஒரு மிகவும் எளிமையான எழுத்து முறையாகும். இன்று நம்மை எதிர்நோக்கும் எழுத்துப் பிரச்சினைகளும் அதற்குப் பெருமளவு இல்லை எனலாம். நம் முன்னோர் மிகவும் விஞ்ஞானரீதியான முறையில் அதனை வகுத்திருந்தனர் என்று கூடக் கூறலாம்.

ஆனால் காலப்போக்கில் பல்வேறு காரணங்களின் சேர்க்கையினால் அந்த இலகுவான, எளிமையான எழுத்துமுறை இடத்துக்கோர் எழுத்துமுறையாக மாறி இன்று ஒன்றுக்கு ஒன்று தொடர்புகாணமுடியாத வகையிலே காட்சி அளிக்கின்றது.

நேர்கோடுகளைப் பெருமளவு கொண்டிருந்த பிராமி எழுத்துக்கள் இன்று தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், சிங்களம் ஆகிய தென்பகுதி மொழிகளில் வளைகோடுகளைக் கொண்டவையாய் மாறிவிட்டன.

('எழுத்துச் சீர்திருத்தம். இது அவசியமா?' பலாலி ஆசிரியர் கலாசாலைச் சஞ்சிகை 'கலாவதி'யில் 1979 இல் வெளியான கட்டுரையின் ஒருபகுதி. மறுபிரசுரம் வாரமுரசொலி – 02–07–89)

பாரதநாடு முழுமைக்கும் பொதுவாக இருந்த 'பிராமி' எழுத்து முறையோடு தமிழ் எழுத்துமுறைமையும் ஒன்று இருந்திருத்தல் வேண்டும்' என்று இரா. கிருஷ்ணமூர்த்தி தந்துள்ள கருத்து இது.

'இதுவரை கிடைத்துள்ள சான்றுகளின்படி 'தமிழி' எழுத்துக்கள்தான் தமிழின் தொன்மையான எழுத்து வடிவம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்'

தமிழ் மொழிக்கு இக்காலத்திற்கு முன் வேறுவகையான எழுத்து வடிவம் இருந்திருக்கலாம். அது பிற்காலத்தில் மறைந்திருக்கலாம். உலகில் வேறு சில மொழிக்கு அது

**- சொக்கன் -**

போன்றநிலை ஏற்பட்டதாக அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழ்மொழிக்கு அதுபோன்ற எழுத்து வடிவம் இருந்து பிறகு மறைந்ததாக இதுவரையில் சான்றுகள் கிடைக்கவில்லை.

தமிழ் வட்டெழுத்து இரா. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ. (ஆகஸ்ட் 1980) இன்று தமிழில் வழங்கும் எழுத்து 'வட்டெழுத்து' என்பதில் இருந்து வளர்ந்த ஒன்றே என்பர். இதன் வரலாற்றினை மொழியியல் அறிஞரும் சாசன ஆய்வாளருமான கலாநிதி ஐராவதம் மகாதேவன் பின்வருமாறு கூறி உள்ளார்.

'தமிழ்-பிராமி எழுத்துக்கள் குறித்து, சமீபகாலத்தில் பல புதிய கண்டுபிடிப்புக்களின் காரணமாக வட்டெழுத்தின் தோற்றத்தைக் குறித்து ஏற்பட்ட குழப்பங்கள் தீர்ந்துள்ளன. தமிழ்-பிராமி எழுத்துக்களே காலப்போக்கில் மாறுதல் அடைந்து வட்டெழுத்தாக உருவெடுத்தது. தமிழ்-பிராமி எழுத்திலிருந்து எந்தக் காலத்தில் வட்டெழுத்துப் பிரிந்து தனித்தன்மை அடைந்தது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. வேண்டுமானால் பல்லவர்களின் ஆட்சிக்கால ஆரம்பத்தில் (கி. பி, 600) இந்த மாறுபாடு ஏற்பட்டிருக்கலாம்'

(இரா. கிருஷ்ணமூர்த்தியின் 'வட்டெழுத்து' நூலில் அவரால் எடுத்துக்காட்டப் பெற்ற மேற்கோள் பக்.5)

பிராமி எழுத்துக்களோடு தமிழின் சிறப்பெழுத்துக்களான ழ, ள, ற, ன தமக்கே உரிய பழைய வடிவத்தில் கல்வெட்டுக்களிலே காணப்படுவதனை ஆதாரமாகக்கொண்டு பிராமி எழுத்து முறையிலிருந்து தமிழ் எழுத்துமுறை தோன்றவில்லை என்று கொள்வதும் ஒன்று இக்கூற்றுக்கு ஆதாரம்,

'பொதுவாகப் பிராமி எழுத்துக்கள் அனைத்தும் சமண அல்லது பௌத்த சமயச் சார்புடைய கல்வெட்டுக்களிலே காணப்படுகின்றனவேயன்றி, வேறு பொதுக்கல் வெட்டுச்சான்று எதிலும் காணப்படவில்லை; எனவே இதனைக் கொண்டு பழந்தமிழ் எழுத்துக்கள் பிராமி எழுத்துக்களே என்று முடிவு கட்டுதல் தவறேயாகும்'

(ஷெ நூலில் திரு. வி. இராமமூர்த்தி எம். ஏ அவர்களின் கூற்றாக நூலாசிரியர் தந்திருப்பது)

சமுதாயத்திற்கு, தனிமனிதனுக்கு, மொழிக்கு, இலக்கியத்திற்கு ஒரு வரலாறு இருப்பது போன்றே ஒரு மொழியின் எழுத்துக்கும் வரலாறு உண்டு என்பது சாசனவியலாரின் முடிந்த முடிபாகும்.

தமிழ்ச் சாசனவியலாரும் இம்முடிவிற்கு விலக்கல்லர்.

அசோகன் காலத்து எழுத்து முறை, பாண்டியர் காலத்து எழுத்துமுறை, பல்லவர்கால எழுத்துமுறை, சோழர் கால எழுத்துமுறை என்று பாகுபடுத்தி அவ்வக்காலக் கல்வெட்டுக்கள் செப்பேடுகள் கொண்டு தமிழ் எழுத்துக்களின் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாற்றங்களை இவர்கள் தெளிவாகக் காட்டியுள்ளனர்.

### கல்வெட்டெழுத்துக்களின் நம்பகத்தன்மை

'கல்வெட்டுக்களிலே பொறிக்கப்பட்ட வாசகங்கள், செய்யுள்கள் ஆகியன அறிஞர்கள் எழுதியனவோ, கூறியனவோ ஆகலாம். ஆனால் அவற்றைக் கற்களிலே பொறித்தவர்கள் சாதாரண தொழிலாளர்கள். அவர்கள் எழுதுவனவெல்லாம் பிழையற்று இருக்கும் என்பதை உறுதி செய்து கொள்வது இயலாது எனவே பிழையானவற்றைக் கொண்டு எழுத்தாராய்ச்சி நிகழ்த்தினால் அந்த ஆராய்ச்சியும் பிழைபடும். அது கொண்டு எழுத்துக்கள் காலத்துக்குக் காலம் உருவில் மாற்றம் அடைந்தன என்று கொள்வது தவறு' என்பாரும் உளர்.

சாசனங்களிலே எழுதப்பட்ட சொற்களிலே, வாக்கியங்களிலே பிழைகள் நேர வாய்ப்பு உண்டு என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் எழுதப்பட்ட எழுத்துக்களின் வடிவங்கள் யாவுமே பிழை மலிந்திருக்கும் என்பது அபத்தம்.

கற்களிலே எழுத்துக்களைப் பொறித்தவர்கள் எழுத்தில் உருவமாற்றம் செய்வதை அவர்கள் காலத்தில் வாழ்ந்தோர் ஏற்றிருப்பார்களா? எழுதப்பட்ட விடயம் இது தான் என்று அன்று மட்டுமன்றி இன்றுங்கூட உறுதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்குமே? இவற்றைப் பிழை காண முற்படுவோர் சிந்தித்தல் வேண்டும்.

தமிழ்ப் பேரறிஞர்களாய் விளங்கிய மு. இராகவையங்கார், ரா. இராகவையங்கார் தொடக்கம் ஔவை துரைசாமிப்பிள்ளை, சதாசிவபண்டாரத்தார் ஈறுகச் சாசனங்கள் மூலம் வெளியிட்டுள்ள ஆய்வு முடிவுகளையும் இக்காரணத்தால் நாம் புறந்தள்ளல் நேரும் என்பதையும் சுட்டிக் காட்ட விழைகின்றேன்.

(இன்னும் வரும்)



## நல்லை மாநகர் நாதன்!

நல்லை மாநகர் நாதனே புவி
நாளும் ஆட்கொள்ளும் தேவனே
செல்வனே மயில் வாகனு புரம்
செற்ற சங்கரன் பாலகா
வல்லவா பகை வென்ற வா இளம்
வள்ளியை மணம் கொண்ட வா
அல்லல் போக்கிடும் ஐயனே எமை
ஆக்குவாய் துயர் போக்குவாய்!

தந்தைக்கேயுப தேச மந்திரம்
தந்தவன் காக்க வந்தவன்
சிந்தைக்கே யரிதானவன் இருள்
தேய்ப்பவன் ஒளி சேர்ப்பவன்
விந்தைக்கே வடிவானவன் வடி
வேலவன் எங்கள் காவலன்
எந்தையானவன் அவ்வையின் தமிழ்
என்றதும் சொக்கி நின்றவன்!

தீயவல் லசுரக் குணத்தினைத்
தீய்ப்பவன் துயர் மாய்ப்பவன்
நேயமாகவே தேவரைத் தினம்
காப்பவன் அருள் பூப்பவன்
ஆய வேதமாய் அரிய நாதமாய்
ஆனவன் உயிர் ஆனவன்
தாயுமானவன் தந்தை யானவன்
சங்கரன் பெற்ற தத்துவன்!

அன்பிலார்க்கெலாம் அன்பனுகுவான்
அறிவிலார்க்கெலாம் அறிவுமாகுவான்
பண்பிலார்க்கெலாம் பண்புமாகுவான்
பயனிலார்க்கெலாம் பயனுமாகுவான்
கண்ணிலார்க்கெலாம் கண்ணுமாகுவான்
கதியிலார்க்கெலாம் கதியுமாகுவான்
எண்ணிலாத பல் கோடி பக்தர்கட்(கு)
இதய மாகிய நல்லை வேலனே!

— காரை. செ. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பர எண் 192



கொக்கரக்கோ... ஓ..... கொக்கரக்கோ...... ஓ... சேவலின் கூவுதலினுல் நித்திரை கலைந்து விழித்தேன். கண்ணுடி ஜன்னலில் பட்டு அறையின் உள்ளே படிந்த பிரகாசமான ஒளி,

'விடிந்து வெகுநேரமாகி விட்டதைக் காட்டுகிறதோ? இருக்காது. விடிந்திருந்தால் காக்கைகளின் கத்தலும், பறவைகள் குருவிகளின் இனிமையான குரலும் கேட்குமே! ஒருவிதமான சத்தமும் இன்றி அமைதியாக இருக்கிறதே. அப்போ... பொழுது விடியவில்லையா?'

திறந்திருந்த ஜன்னலின் ஊடாகக் கண்களை அகல விரித்து மிகவும் கூர்மையாகப் பார்க்கிறேன்.

சந்திரன் நடு வானில் நின்று குளிர்ச்சியான ஒளியை வீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறன். அப்பொழுது தான் உணருகிறேன்.

'ஓ...பூரணை வந்து இன்று மூன்றவது நாள். நடு இரவு, மணி ஒன்று அல்லது இரண்டு இருக்கும்'

எண்ணியபடி, நேரத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள, எழுந்து சென்று 'லைற்ஸ்விச்' சைப் போட்டுக் கடிகாரத்தைப் பார்க்கிறேன். 'எலக்ரோனிக்' கடிகாரம் ஒன்று முப்பத்தைந்து என்று கண்ணைச் சிமிட்டுகிறது.

தூக்கம் கலைந்ததினுல் உண்டான வெறுப்புடன் மீண்டும் படுக்கையில் விழுகிறேன். தூக்கம் வர மறுக்கிறது. புரண்டு படுக்கிறேன். ஜன்னல் ஓரத்தில் இருந்த படுக்கையில், ஆழ்ந்த நித்திரையில் இருந்தஎனது மகள் வள்ளியின் முகம், நிலவின் ஒளிபட்டு நன்ருகத் தெரிகிறது.

'தாயை அப்பிடியே உரிச்சுப் படைச்சுக் கிடக்கு'

என்று அயலவர்களும் இனத்தவர்களும் சொல்லுவார்கள். உண்மைதான். அவளுடைய உடம்பில் உள்ள அங்கங்களும் அசைவுகளும் பேச்சும் சிரிப்பும் இறந்து போன என் மனைவியை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தன.

ஆழ்ந்த நித்திரையில் இருந்த அவளின் முகத்தில் சாந்தமும் அமைதியும் நிறைந்திருந்தன. கவலையே அறியாத, துன்பங்களைச் சந்திக்க சந்தர்ப்பங்கள் இல்லாத வயது.

அவளைப் பற்றிய எண்ணம் வந்ததும், பெருமூச்சு ஒன்று என்னுடைய அடி நெஞ்சில் இருந்து புறப்பட்டு விடுதலை பெற்று வேகமாக வெளியேறியது.

புரண்டு படுக்கிறேன். கண்களை மூடிக் கொண்டு தூக்கத்தை வரவேற்க முயற்சித்த எனது மனதைப் பசுமையான, பழைய நினைவலைகள் வட்டமிடுகின்றன.

மூடிய இமைகள் கண்களைக் கவ்விக் கொண்டிருக்க, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகள் மனத்திரையில் நிழற் படங்களாக அசைகின்றன.

ஆகா...அந்த இனிமையான கல்லூரி நாட்கள் மீண்டும் வருமா...? பாடசாலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது வேலியேறிக் குதித்து மாங்காயும் நெல்லிக்காயும் திருடித் தின்றது...,

நண்பர்களுடன் இரண்டாவது காட்சிப்படம் பார்த்து விட்டுத் திரும்பும் போது, வழியில் இருந்த தென்னஞ் சோலைகளில் புகுந்து மரமேறி இளநீர் பிடுங்கிக்குடித்தது...,

கோவில் திருவிழாக்கள் ஒன்றையும் தவற விடாமல் பார்த்து, அடுத்த நாள் வகுப்பில் தூங்கி வழிய... ஆசிரியர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் பதிலாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, கூனிக் குறுகி நின்றது......

— இப்படியான நிகழ்ச்சிகளின் ஞாபகங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னுக்கு வந்து நின்ருள் யோகா.

நான் படித்த கல்லூரியில் அழகுத் தேவதையாக உலாவி மாணவர்களின் மனமேடைகளில் நடனமாடித் திரிந்தாள் யோகா. யோகேஸ்வரி என்று முழுப் பெயரையும் சொல்ல அலுப்படைந்தவர்களும், செல்லமாக அவளை அழைக்க ஆசைப்பட்டவர்களும் வைத்த பெயர் அது.

அவள் அழகி மட்டுமல்ல. துடுக்கும், மிடுக்கும், நிறைந்த கோபக்காரியும்கூட! கல்லூரியில் மட்டுமன்றி வெளியேயும் அவளுடன் கதைக்கவோ, கிட்டப்போகவோ மாணவர் கூட்டத்திற்குப் பயம்.

கேலியோ கிண்டலோ செய்து வம்புக்கு இழுத்தால், வாய்க்கு வந்தபடி ஏசி, தலை குனியவைத்துவிடுவாள். சில சமயங்களில் சொல்லக்கூடாத சொற்களையும் 'பச்சையாகவே' சொல்லித் திட்டி மானத்தை வாங்கிவிடுவாள்.

யோகா கோபத்துடன் ஏசினலும் அதிலும் ஒரு அழகும் நளினமும் இருக்கும். அந்தத் துடுக்குக்காரிக்குக் கல்லூரி மாணவர்கள் வைத்த பட்டப் பெயர் 'கிளியோ பற்ரு'

அந்தக் 'கிளியோ பற்ரு' ரோம சாம்ராச்சியத்தை ஆட்டிப்படைத்தாள். இந்த அழகி கல்லூரி மாணவர்களின் மனங்களைத் திணறடித்துக் கொண்டிருந்தாள்.

யோகாவின் அழகிலும், நடை, உடை, அலங்காரத்திலும் சொக்கிப் பைத்தியமாக அலைந்தவர்களில், எனது கல்லூரி நண்பன் சிவநேசனும் ஒருவன்; பிடிவாதத்துக்கும், குழப்படிக்கும் பேர் போனவன்.

யோகாவின் வாய்வீச்சுக்குப் பயப்படாதவன். அவளின் கண்வீச்சில் மனங்கலங்கி அலைந்துகொண்டிருந்தான். அவளைத் தனது 'கேள் பிரெண்ட்' ஆக்கிக்கொள்ள அவன்செய்த பிரயத்தனங்கள்......ஏராளம்.

ஒருநாள் சிவநேசன் என்னிடம்வந்து 'மச்சான் இந்த லெட்டரை 'கிளியோபற்ரு' விடம் கொடடா அவள் உனது வீட்டுப் பக்கம்தானே' என்று சொல்லியபடி ஒரு கடித உறையை என்னிடம் தந்தான்.

'என்ன சிவா நான் அவளிடம் செருப்படி வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டு விட்டியோ', என்று சிரித்தபடி கேட்டேன்.

'மச்சான் கல்லூரி மாணவர்களில அவளுடைய ஏச்சுக்கும், பேச்சுக்கும் அகப்படாதஆள் நீ ஒருவன் தானே. பயப்படாதை, கொண்டு போய்கொடு என்ருன்.

அன்றுமாலை ஏதோ காரியமாக எனது வீட்டுக்கு வந்த யோகா 'ஏதும் கதைப்புத்தகம் இருந்தால் தாவேன்' பொழுதுபோகவில்லை' என்ருள்;

லக்ஷ்மி எழுதிய 'காஞ்சனையின் கனவு' என்ற நாவல் என்னிடம் இருந்தது, அதற்குள் சிவனேசன் தந்த கடித உறையை வைத்து அவளிடம் கொடுத்துவிட்டேன். ஏதோ கடமை என்று துணிச்சலில் கொடுத்துவிட்டாலும், யோகாவின் சுபாவமும்,குணமும் எனக்கு நன்கு தெரிந்திருந்ததால் ஒருவிதமான பயம் என் மனதைக் கலக்கியது,

எப்பொழுது வந்து 'இப்போ தம்பிக்குத் தொழில் தரகோ' என்று மானத்தை வானத்தில் ஏத்தப்போகிருளோ? என்று பயந்தபடி இருந்தேன். மறுநிமிஷம் இதென்ன பெரிய விஷயம் அப்படிப் பயந்து சாவதற்கு. 'நீ புத்தகம் கேட்டாய் நான் தந்தேன். அதற்குள் இருந்ததை நான் கண்டேனு' என்று சொல்லிச் சமாளித்துவிடலாம். அகப்படப்போறவன் சிவநேசன் தானே. மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டேன்.

மூன்று நாட்கள் கழிந்தன, 'நீ தந்த நாவலைப் படித்து முடித்துவிட்டேன்' என்றபடி புத்தகத்தைத் தரும்பொழுது 'அதற்குள் ஒரு லெட்டர் இருக்கிறது அதை நீ வாசித்துப்பார்த்துவிட்டு அந்தக் 'குரங்கு மூஞ்சையிடம்' கொடு' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே ஓடிவிட்டாள்.

இந்தப் பூனையும் அந்தப் பாலைக் குடிக்குமா? சரிதான் குடிக்க ஆரம்பித்துவிட்டதே. இனி என்ன என்று நினைக்க எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. 'காவாலிப் பயல்' என்று பெயர் எடுத்த சிவநேசனின் கடிதத்துக்கு, உடனே பதில் எழுதிய யோகாவை... புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் மடையன் எழுதினலும், இவள் ஒரு பெண்பிள்ளை... எப்படி எழுதுவாள்...?

போதாக்குறைக்கு என்னையும் வாசித்துப் பார்க்கச் சொல்லுகிருள். ச்சீ, இதென்ன வெட்கம் கெட்ட வேலை. அவள் இவனுக்கு எழுத நான் அதை வாசிப்பதா? அந்த அந்தரங்க அசிங்கத்தை நான் ஏன் வாசித்துப் பார்க்க வேண்டும்? என்று எண்ணி அப்படியே வைத்து விட்டேன்.

அன்று இரவு 'ஹோம்வேக்' செய்வதற்கு மேசையருகில் இருந்ததும் மூன்ருல் இருந்த காஞ்சனையின் கனவுக்குள் இருந்த கடிதத்தை வாசித்துப் பார்த்தால் என்ன... என்னுடைய மனக்குரங்கு சேட்டைசெய்யத் தொடங்கியது.

அதை வாசித்துப் பார்ப்பது சரியல்ல என்ற உள்உணர்வை விட, வாசித்துப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் மேலோங்கிவிட்டது. கடிதத்தை எடுத்து வாசிக்கிறேன்.

'டாளிங்' என ஆங்கிலத்தில் அழைத்து எழுதப்பட்டிருந்ததைப் பார்த்ததும், சரிதான் சிவநேசன் விரித்த வலையில் வசமாக மாட்டிக்கொண்டாள். என்னதான் எழுதியிருக்கிருள் என்று எண்ணியபடி தொடர்ந்தேன். கடைசி வரியில் எழுதப் பட்டிருந்த சொற்கள் எனது மூளையின் இரத்தோட்டத்தை நிறுத்தி விட்டதோ...?

'மிஸ்ரர் நான் உன்னைத் தான் 'லவ்' பண்ணுகிறேன். சிவநேசனை அல்ல. இந்த லெட்டரும் உனக்குத்தான். நானும் உனக்குத்தான் யோகா' என்று முடித்திருந்தாள் கடிதத்தை.

'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்ற பழமொழி எனது விஷயத்தில் உண்மையாகி விட்டது. யோகாவை அடிக்கடி கண்டு பேசி... பேசி... ஒருதரை ஒருவர் மறக்கவோ பிரியவோ முடியாது என்ற நிலைக்குத் தள்ளிவிட்டது.

கல்லூரியில் இறுதியாண்டுப் பரீட்சை முடிந்ததும் படிப்பைத் தொடராமல் வீட்டில் முடங்கிக்கிடந்தாள் யோகா.

எனக்கு தனியார் கம்பெனி ஒன்றில் உத்தியோகம் கிடைக்கிறது.

ஊரில் பலரின்எதிர்ப்புகளுக்கிடையில் நானும் யோகாவும் பதிவுத் திருமணம் செய்து கொண்டு வாழத்தொடங்குகிருேம்.

புரண்டு, படுத்துச் சோம்பல் முறித்தபடி கடிகாரத்தைப் பார்க்கிறேன். நேரம் ஆறுமணி. விடிந்து விட்டது. கடந்த கால நிகழ்ச்சிகளின் சங்கிலித் தொடர் அறுபட - எழுந்து சென்று விருந்தையில் போடப்பட்டிருந்த கதிரையில் இருந்து, வள்ளி கொண்டு வரப் போகும் சூடான தேநீரை எதிர்பார்க்கிறேன்.

அந்த நேரம். இன்றைய எனது குடும்ப நிலையும், எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறதோ என்றபயமும் சேர்ந்து என்னை மீண்டும் சிந்தனைச் 'சுழி'யில் வீழ்த்தி விடுகிறது.

நானும் யோகாவும் வாழ்ந்த பதினைந்து ஆண்டுத் தாம்பத்தியத்தில், மூன்று ஆண்களும், ஒரு பெண்ணுமாக நான்கு பிள்ளைகளுக்குப் பெற்ருேராகி விடுகிருேம். கால மாற்றம் எங்கள் வாழ்க்கைச் சக்கரத்தையும் வேகமாகச் சுழற்றி விட்டது.

வெளிநாடுகளில் உழைப்பு வசதிகள் நிறைய உண்டு என்று தமிழ் இளைஞர்கள் படையெடுக்கத் தொடங்கி விட்டார்கள். எனது பிள்ளைகளின் ஆசையுடன் எனது அவாவும் கைகோத்து நின்றது. மூன்று பேரையும் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவழித்து வெளிநாடுகளுக்கு - ஒருவன் கனடா. அடுத்தவன் ஜேர்மனி.கடைக்குட்டி டென்மார்க் - அனுப்பி விட்டேன்.

மூன்றுபேரும் உழைத்து அனுப்பினல் வள்ளிக்கு ஒரு கலியாணம் செய்து வைத்து விட்டு, நான் நிம்மதியாக இருக்கலாம் என்ற எண்ணத்தில் மண் விழும் என்று நான் நினைக்கவே இல்லை.

அவர்கள் வெளிநாடுகளில் அகதிகளாக அந்தஸ்துப் பெற்று வயிற்றைக் கழுவ முடிந்ததே தவிர எனக்குப் பணம் அனுப்பும் நிலையில் ஒருவரும் இல்லை என்பதை அறிந்து ஏமாற்றம் அடைந்தேன்.

அவர்களை அனுப்புவதற்குச் செலவழித்த காசை வட்டிக்கு எடுத்திருந்தால் ..... நல்ல வேளை கடன் படாமல் காணி ஒன்றை விற்றுச் செலவு செய்தபடியால், கடன்காரன் என்ற துக்கமும் வட்டி வளருகிறதே என்ற ஏக்கமும் இன்றி இருக்கிறேன்.

இதனிடையே வள்ளிக்குக் கலியாணம் செய்து வைத்து விடவேண்டும் என்ற அவா, என்னுடைய பிடரியில் பிடித்துத் தள்ளி, மாப்பிளைக் கொள்வனவுச் சந்தைக்குத் துரத்த ...... நண்பர்களிடமும், கலியாணத்தரகர்களிடமும் அடைக்கலம் புகுந்தேன்.

'மாப்பிள்ளைக் கொள்வனவுச் சந்தை' என்ருே சொன்னேன்? வேறென்ன, அங்கும் கொடுக்கல் வாங்கல். இது தானே வியாபாரம்.

வீடு பெற நில்' என்று ஔவைப்பாட்டி சொல்லி விட்டுப் போன அறிவுரைக்குத் தவருன பொருள் கொண்டு 'வீட்டுடன் காசும் நகையும் கிடைத்தால் தான் கலியாணம் செய்வோம்' என்று வாலிபர்கள் அனைவரும் ஏகமனதாகத் தீர்மானம் செய்து கொண்டார்கள் போலத் தெரிகிறது.

வள்ளியினுடைய அழகு, அறிவு, சாந்தகுணம் குடும்பத்தை நிர்வகிக்கும் ஆற்றல் முதலிய சிறந்த குணங்களுக்காக எந்த இளைஞனும் வள்ளியைக் கலியாணம் செய்து கொள்ள முன்வரவில்லை.

'வீடு கொடு இல்லாவிட்டால் ஆளை விடு' என்று திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடிக்கிருர்களே கலியாணப் புருேக்கர்களும் ஆண் சிங்கங்களைப் பெற்றவர்களும் -

பொருள் இல்லார்க்கு இவ் உலகில்லை. என்று வள்ளுவர் சொன்ன வாக்கு எவ்வளவு தூரம் உண்மையாகி விட்டது அதனுல் தானே பொய்யா மொழி என்ற காரணப் பெயரையும் பெற்று விட்டான்.

அறிஞர்களும் ஆன்ருேர்களும் சொல்லி விட்டுப்போன தத்துவங்களும் உபதேசங்களும அறிவுப் பசிக்குத் தீனி போடுமே தவிர, வயிற்றுப் பசியைத் தீர்க்கவோ, வளமான வாழ்க்கையை அமைக்கவோ உதவப்போவதில்லை.

மகிழ்ச்சியானவாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தேவையானவை - பணமும் பொருளும். அவை இரண்டும் என்னிடம் இல்லை.

வள்ளியைக் கலியாணம் செய்து கொடுக்கப் பல இலட்சங்கள் வேண்டும். இல்லாவிட்டால் என்னுடனேயே காலத்தைக்கழிக்க வேண்டும். கொடிக்குச் காய் பாரமாக இல்லாவிட்டாலும், குமரா எவ்வளவு நாட்களுக்கு வைத்திருக்க முடியும்?

பெண் பிள்ளையைப் பெற்று வளர்த்துப் படிப்பித்து அவளை மணவாழ்க்கைக்குத் தகுதியானவளாக்கி, தாரை வார்த்துக் கொடுக்கும் பெற்ருேருக்கல்லவா பணமும் பொருளும் கொடுப்பதுடன், நன்றியுள்ளவளுகவும் இருக்கவேண்டும். இதை விட்டு விட்டுப் பெண்ணையும், பொன்னையும்ஒருங்கே கேட்பது எந்த வகையில் நியாயம்?

நண்பர்கள் சொல்லக் கேட்டு ஆச்சரியப் பட்டிருக்கிறேன் — ஈரான், ஈராக், சவூதி அரேபியா போன்ற முஸ்லிம் நாடுகளில் திருமண வயதடைந்த இளைஞர்கள் இரவு பகலாக மிகவும் உற்சாகத்துடன் உழைப்பார்களாம் ஏன் தெரியுமா?.பெண்களின் பெற்றேருக்குப் பணம் கொடுத்து தாம் விரும்பியவர்களைக் கலியாணம் செய்து கொள்வதற்காக.

இப்படியான தன் மானமுள்ள உழைப்பாளிகளாக, இளைஞர்களை தமிழ் சமுகம் உருவாக்கும் நாள் ஒன்று வருமா? எப்போ?

எப்படியாவது வள்ளிக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டும். வெளிநாடுகளுக்குச் சென்ற பிள்ளைகளோ அகதிகள். கலியாணப் புருேக்கர்களும், ஆண் பிள்ளைகளைப் பெற்ற அப்பாக்களும் வியாபாரிகள். இனி யாரையும் நம்பிப் பிரயோசனம் இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டேன்.

எனது மனதில் ஒரு புதுமையான சிந்தனை துளிர் விடுகிறது. ஒரு துண்டுக் கடதாசியை எடுத்து எனது எண்ணங்களைச் சொற்களாக்கி 'பொக்கற்' ருக்குள் வைத்துக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தினசரிப் பத்திரிகை அலுவலகத்தை நோக்கி நடக்கிறேன்.

நான் எழுதிய கடதாசியை விளம்பரப் பகுதியில் இருந்த பொறுப்பாளரிடம் கொடுக்கிறேன். அதை வாங்கி வாசித்துப் பார்த்தவர், சட்டென நிமிர்ந்து என்னை இரண்டு முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு - எனக்குப் பைத்தியம் இல்லையென்பதை நிச்சயப் படுத்திக் கொள்ள - விளம்பரச் செலவு ரூபா 45/- என்ருர்.

நான் பணத்தைக் கொடுக்க அவர் ரசீதை எழுதி என்னிடம் தந்தபடி உங்கள் முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள், இந்த விளம்பரம் வருகிற ஞாயிறு இதழில் வெளியாகும்' என்று சொல்லிச் சிரிக்கிருர். அது பரிகாசச் சிரிப்பா அல்லது உற்சாக மூட்டும் சிரிப்பா என்பதை என்னுல் ஊகிக்க முடியவில்லை. எதுவாக இருந்தாலும் எனக்கென்ன?

ஞாயிறு இதழில்

அறிவும், அழகும், சாந்த குணமும் குடும்பத்தை நிர்வகிக்கும் ஆற்றலும் நிறைந்த இருபத்தைந்து வயதுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை, சீதனம், வீடு, காசு எதையும் எதிர்பாராத அறிவும், அழகுமுள்ள கண்ணியமான எந்தத் தொழிலாவது செய்து குடும்பத்தை நடத்தக்கூடியவர்கள் மட்டும் விரும்பப்படுவார்கள். தொடர்பு விளம்பர எண் 192.

(யாவும் கற்பனை) ★

- அழகு அருணாசலம் -

சஞ்சீவி சிறுகதை

# 'நிலா'வின் கடிதம்

- ராஜேஷ்குமார் -

அன்பான உங்களுக்கு
இந்தப் பெண்களின்
முகமெல்லாம்
என்னைப் போலவே
இருக்கிறதாமே...?
இந்தக் கவிஞர்கள்
ஏன் தான் இப்படிப்
பொய் சொல்கிருர்களோ...?

அன்பான உங்களுக்கு
பகல் ட்யூட்டி
பார்க்க
ஆசையாய் இருக்கிறது.
இன்னும்
எத்தனை நாளைக்குத்தான்
நான் மட்டுமே
நைட் ட்யூட்டிக்கு...?

அன்பான உங்களுக்கு...
ஆம்ஸ்ரோங்கைப் பார்த்தால்
அன்புடன் விசாரித்ததாக
அவரிடம் கூறுங்கள்,
அப்புறம் வருகிறேன்
என்று திரும்பியவர்
ஆளையே காணும்.

அன்பான உங்களுக்கு...
நேற்றைக்குப் பூமியிலிருந்து
ஒரு விருந்தாளி என்னைப் பார்க்க
வந்திருந்தார்.
அவருடைய பெயர் என்னவென்று
கேட்டேன்?
விலைவாசி என்று சொன்னுர்.

அன்பான உங்களுக்கு . !
இன்று அமாவாசை
வீட்டுக்கு தூரம்.
வெளியே வரமுடியாது
அம்மா கத்துவாள்
அடுத்த வாரம்
இதே நேரம் பளிச் சன்று
வருவேன்
காத்திருங்கள்,

அன்பான உங்களுக்கு...!
முன்பெல்லாம் இங்கிருந்து
பார்த்தால்,
சீனுவின் நெடுஞ்சுவர் மட்டுமே
நீளமாகத் தெரிந்து வந்தது.
அண்மைக் காலமாக
நீளமாகஏதோ தெரிகிறது.
விசாரித்துப் பார்த்தால் ரேஷன்
கடைகளுக்கு முன்னுல்
நிற்கும் க்யூ என்று சொன்னுர்கள்.

அன்பான உங்களுக்கு...!
இந்த சர்க்கஸ் காரர்கள்
ராத்திரி நேரங்களில்
என் கண்கூச நேராய்
லைட் அடிக்கிருர்கள்
அங்கே ஒரு நல்ல கூலிங்கிளாஸ்
கிடைத்தால் வாங்கி
அனுப்புங்களேன்.

அன்பான உங்களுக்கு...
உங்கள் பூமியில் – சிலர்
என்னைச் சந்திரன்
என்கிருர்கள்
சிலர் நிலாப் பெண்
என்கிருர்கள் ..
நான் ஆணு?... பெண்ணு?
நீங்கள் தான் சொல்லவேண்டும்.

அன்பான உங்களுக்கு ..
இந்த நட்சத்திரரெளடிகளின்
நெரிசலில்
பயணம் செய்வதற்குள் – எனக்கு
போதும்
போதுமென்ருகி விடுகிறது.
இருந்தாலும் உங்கள் ஊர்
டவுண் பஸ் நெரிசலை விட
இது எவ்வளவோ
பரவாயில்லை.

அன்பான உங்களுக்கு...
மாதம் ஒரு நாள்
எனக்கு விடுமுறை
என்பது உங்களுக்குத்
தெரியும்.
அந்தப் பொழுது போகாத
நாளில் எனக்கு
படித்துப் பார்க்க
ஒரு 'அம்புலி மாமா'' புத்தகம்
வேண்டுமே...! வாங்கி
அனுப்ப முடியுமா...?

அன்பான உங்களுக்கு
நிலா நிலா வா வா
நில்லாமல் ஓடி வா
என்று
என்னை அன்போடு
நீங்கள் கூப்பிடுகிறீர்கள்
நான் பதிலுக்கு இங்கே
உங்களைக் கூப்பிடமுடியாது
காரணம்,
இங்கே காற்றில்லை.

அன்பான உங்களுக்கு
கடல் கண்ணுடியில்
என் முழு முகத்தைப்
பார்க்க எனக்குக்
கொள்ளை ஆசை;
ஆனுல்,
அன்றைக்கு மட்டும்
கடல் கண்ணுடிக்கு என்மேல்
ஏராளமான கோபம்...ஏனே...?
ஆயிரமாயிரம் அலைகள்
என்னை நோக்கிச் சீறும்;

— அன்புடன் நிலா —

என் மனைவி புடைவைக்கு மாட்சா பிளவுஸ் வாங்கி வரச்சொன்ஞ நான் மறுத்து விடுவேன்.........

எதற்காக?

நீங்க வாங்கின பிளவுஸ் மாட்சாகவில்லை. அதற்கு மாட்சா வேற புடைவை வாங்கப் போகிறேன்னு கிளம்பிடறா.........

- ந. கைலாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகைக் காப்பாற்ற எம்.ஜி.ஆர். ஆசியுடன் உலகம் சுற்றிய தமிழ் இளைஞர்கள்

வாஷிங்டனில்—

கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை...காலை இரண்டு இளைஞர்கள் ஐ.நா தலைமைக் காரியாலயத்தின் முன்னால் சைக்கிள்களை நிறுத்திவிட்டு கீழே இறங்குகின்றனர்.

பின்னர் வானளாவ உயர்ந்து கம்பீரமாக நிற்கும் ஐ.நா கட்டடத்தைப் பார்க்கின்றனர்.

உள்ளே நுழைந்த இருவரும், ஐ. நா பொதுச்செயலாளர் ஜேவியர் பெரெஸ் டி குயிலர் பணிமனையின் வாசலில்...

'மிகவும் அவசரமான செய்தி ஒன்றுடன் வந்திருக்கிறோம். பொதுச்செயலாளரைச் சந்தித்துக் கையளிக்க வேண்டும். அனுமதியுங்கள்' —என்று பாதுகாப்பு அதிகாரியிடம் விண்ணப்பிக்கின்றனர்:

பாதுகாப்பு அதிகாரி பொதுச்செயலாளருடன் தொடர்புகொள்கிறார். விஷயத்தைத் தெரிவிக்கின்றார். அனுமதி கிடைக்கிறது.

வெளியேவந்து இரண்டு இளைஞர்களையும் அழைத்துச் செல்கிறார், பொதுச்செயலாளர் குயிலர்.

இதுதான் அந்த மிக அவசரமான செய்தி:-

'எங்கள் உலகம் அழகானது; கிடைப்பதற்கு அரிதான ஒன்று. அணு ஆயுதங்களால் இந்த உலகை அழிந்து போக அனுமதித்துவிடாதீர்கள்.'

அவசரச்செய்தியை வாசித்த திரு. குயிலர் அந்த இளைஞர்களைப் பார்த்து,

'நீங்கள் ஐ.நா ஸ்தாபனத்தின் சார்பாகமட்டும் செயல்படவில்லை. முழு உலக மக்களின் சார்பாகவும் செயற்பட்டுள்ளீர்கள்' -- என்று பாராட்டினார்.

ஐ. நாவுக்குச் செல்வதற்கு முன்னர் இந்த இளைஞர்கள் உலகையே சுற்றிவந்தனர்.



எம். ஜி. ஆர்.

5 கண்டங்களில் உள்ள 34 நாடுகளில் 1,215 நாட்கள் இவர்கள் பயணம் செய்தனர்.

மாத்தமாக 64 ஆயிரம் கிலோ மீற்றரை இரண்டு சைக்கிளில் கடந்தனர்.

ஐ. நா செயலாளரிடம் அவர்கள் கையளித்த அவசரச் செய்தியில், உலக நாடுகளின் தலைவர்கள், தத்துவ ஞானிகள், நகைச்சுவை நடிகர்கள், விவசாயிகள், மாணவர்கள், கல்விமான்கள், விண்வெளி வீரர்கள் விளையாட்டு வீரர்கள் இப்படி பலதரப்பட்ட வகுப்பினர் கையெழுத்து இட்டிருந்தனர்.

கையெழுத்திட்டவர்களில் ஆக வயது கூடியவர்கள் 95 வயதான சீன அரசியல்வாதி. ஆக இளம் வயதினர் ஆறு வயதான நியூசிலாந்து பிரசை.

'அணு ஆயுதப் பிரச்சினையை அரசாங்கங்களிடம் மட்டும் விட்டுவிடக்கூடாது' —இப்படி ஆஸ்திரேலியப் பிரதமர் பொப்ஹோக் அதில் எழுதியிருக்கிறார்.

அமெரிக்க விண்வெளி வீரரும் செனட்டருமான திரு. ஜோன் கிளென்:

'27 ஆண்டுகளுக்கு முன்னர் பச்சைப்பசேல் என்று பூமி அமைதியாக இருக்க விண்வெளியிலிருந்து பார்த்தேன். ஆனால் நீங்களோ பூமியைத் தரை மூலம் சுற்றிப்பார்த்து வந்திருக்கிறீர்கள். மண்ணில் இருந்தும் விண்ணிலிருந்தும் பார்த்த எம் நோக்கம் ஒன்றுதான். உலகம் அழிவிலிருந்து காப்பாற்றப்படவேண்டும் என்பதுதான்' — இப்படி திரு. கிளென் இந்த இளைஞர்களிடம் தெரிவித்தார்.

இந்த இளைஞர்கள் தங்கள் உலகப் பயணத்தின் போது பல உலகத் தலைவர்களைச் சந்தித்தனர்.

யார் இந்த இளைஞர்கள்?

தமிழ் நாட்டைச் சேர்ந்த 26 வயதான ராஜசேகரன் ஞானசேகரன், 27 வயதான ரி. சீனிவாசராவ் ஆகியோர் 20-03-1986இல் 500 டாலர்களை கையில் வைத்துக் கொண்டு பாண்டிச்சேரியில் இருந்து இந்தப் பயணத்தை ஆரம்பித்தனர்.

இதற்கு முன்னர் முதலமைச்சராக இருந்த திரு. எம். ஜி. இராமச்சந்திரனிடம் ஆசிபெற்றனர். எம்.ஜி.ஆர். ஆறுயிரம் டாலர் பணத்துடன் ஆசியும் வழங்கினார்.

★

## 'பிஞ்சும்' இருந்த பொன்னாடை

புலவர் ஒருவரின் பாடலைக் கேட்டு மகிழ்ந்த அரசன், மரம், செடி கொடிகள் வரையப்பட்ட பொன்னாடை ஒன்றை அவருக்குப் பரிசளித்தான்.

அதைப் பெற்றுக் கொண்ட புலவர், அவ்வாடை நடுவில் சிறிது கிழிந்திருப்பதைக் கண்டு திகைத்தார்.

தனக்குப் பரிசளித்த பொன்னாடை கிழிந்திருப்பதை அரசனுக்கு உணர்த்த வேண்டும், அதே சமயத்தில் அவன் வருந்தக் கூடாது...... அதை எப்படி உணர்த்துவது என்று புலவர் சிந்தித்தார்.

பின்னர், 'அரசே! நீங்கள் பரிசளித்த பொன்னாடையில் மரம் இருக்கிறது, கிளை இருக்கிறது பூ இருக்கிறது, 'பிஞ்சும்' இருக்கிறது— என்று கூறிப் பொன்னாடையில் கிழிந்து இருந்த பகுதியைக் காட்டினார்.

★

பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

## வாழ்க்கையில் வெற்றி பெற ...

ஏதாவது ஒன்றைப் பற்றியே சிந்தனை செய்.

அந்தச் சிந்தனையே உன்னுடைய வாழ்க்கையாகட்டும்.

குறிப்பிட்ட அந்தச் சிந்தனையைப் பற்றியே யோசனை செய். கனவு காண்.

அதனையே வாழ்க்கையாகக் கொள்.

மூளை, தசை, நரம்பு என்று உன் உடம்பின் ஒவ்வொரு உறுப்பிலும் அந்தச் சிந்தனை மட்டுமே மேலோங்கி இருக்கட்டும்.

மற்றச் சிந்தனைகளுக்கு இடமளிக்காதே.

இதுதான் வாழ்க்கையில் வெற்றிக்கான வழி.

— சுவாமி விவேகானந்தர்

## மந்திரியாக வர விரும்பாத கல்கி!

கல்கி, பிரபல தமிழ் எழுத்தாளர்.

அவரைப் பார்த்து, நீங்கள் மந்திரியாக வர விரும்புகிறீர்களா? என்று ஒருவர் கேட்டார்.

அதற்குக் கல்கி:

'நான் என் கதையில் அரசர்களையே என் விருப்பத்திற்கு ஆட்டிப்படைப்பவன். எனக்கு இந்த மந்திரிப் பதவியா பெரிது? — இப்படித் திருப்பிக் கேட்டார்.

எழுத்தாளருக்கு உள்ள பெருமை இது.

இது ஓவியர்களுக்கும் உண்டு.

இமயம் முதல் இறைவன் வரை யாவற்றையும் ஓவியத்தில் அடக்கிக் காட்டும் வல்லமையுள்ளவர்கள் அல்லவா அவர்கள். ★

# காலத்தை வென்ற மகாபுருஷர்கள் யார்?

காலத்தை வென்ற மகாபுருஷர்கள் யார்?

சுவாமி சின்மயானந்தர் இதற்குப் பதிலளித்திருக்கிறார்.

அவரின் பதிலை வாசியுங்கள்;

காலம் என்பது இரண்டு அனுபவங்களுக்கு நடுவில் இருக்கும் இடைவெளி.

ஆமாம்! காலம் என்பது உங்கள் கைக்கடிகாரம் காட்டிவிடக்கூடிய வெறும் நேரம் அளவு மட்டுமல்ல.

காதலியைச் சந்திப்பதற்காக ஏற்பாடு செய்துகொண்டு வருகிறான் ஓர் இளைஞன்.

அவன் ஐந்து மணிக்குக் கடற்கரைக்கு வருவதாக டெலிபோனில் சொல்லி இருக்கிறான்.

ஆனால் காதலி வந்துசேர ஐந்தரைமணி ஆகி விடுகிறது.

அந்த அரைமணி நேரம் காத்திருப்பது அவனுக்கு இரண்டு மணி நேரம் போவது போலத் தோன்றுகிறது,

கடைசியில் இருவருமாக ஓர் ஒதுங்கிய மூலையில் போய் உட்காருகிறார்கள். தங்கள் பேச்சை இருவரும் ஆரம்பிக்கிறார்கள்.

அவர்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். பொழுது போவதே தெரியவில்லை.

அவள் கைக்கடிகாரத்தைப் பார்க்கிறாள். 'அடடா, ஏழு மணி ஆகிவிட்டதே. நான் கிளம்ப வேண்டும்: வீட்டில் தேடுவார்கள்' — என்று கூறி எழுந்து நிற்கிறாள்.

'ஒன்றரை மணிநேரம் ஆகிவிட்டதா? அரைமணி நேரம் கழிந்தது போல அல்லவா இருந்தது?' என்கிறான் காதலன்.

அரைமணி நேரம் காத்து இருந்தது இரண்டு மணிநேரம் போவதைப்போல அவனுக்குத் தோன்றியது.

ஏனென்றால், அப்போது உணர்ந்தது சிரமமான அனுபவம்.

இப்படி அனுபவங்களுக்கு இடையே ஒரு பாலமாக அமைந்திருப்பதுதான் காலம்.

இந்த உணர்ச்சிகளை வென்று துல்லியமான மனத்துடன் இருக்கும் பெரியார்களைத்தான் காலத்தை வென்ற மகாபுருஷர்கள் என்பர்.

சொன்னவர்:

சுவாமி சின்மயானந்தர்

## 'மாண்புமிகு' நெப்போலியன்

மாவீரன் நெப்போலியனின் உருவ அமைப்பு அவ்வளவு சிறப்பானது எனக் கூறமுடியாது.

ஆனால் எழுச்சி தரக் கூடியது.

தம்மைச் சந்திக்கும் எவரையும் எளிதில் கவரக் கூடிய சிறப்பான வசீகரத்தை அவர் பெற்றிருந்தார்.

எனவே தான் நெப்போலியன் 'மாட்சிமை பொருந்திய சிறிய மனிதர்' என்று அவரது படை வீரர்களால் புகழப்பட்டார். ★


# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386.371 | 16,206,887 | 25,811.712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310.787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827.514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372.825 | 2,330.012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | • |

நம்பிக்கையுடன் சேமிக்க

"ஷப்ரு"வை நாடுங்கள்

நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4

தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## பொருளாதார வளங்கள்
(க. பொ. த. சாதாரணதரத்திற்கு உரியது)

**வினாக்கள்:**

1. வளங்கள் என்றால் என்ன?
2. இயற்கை வளங்களின் மனித வளத்தின் முக்கியத்துவத்தினை புலப்படுத்துக.
3. வளங்களின் அசமநிலை என்றால் என்ன?
4. பொருளாதாரம் ஒன்றில் வளப்பற்றாக்குறை தோன்றுவதற்கான காரணிகளைத் தருக?
5. இலவசப்பண்டம்-பொருளாதாரப்பண்டம் என்ற இரண்டு பதங்களுக்குமான கருத்தினை புலப்படுத்துக.
6. தங்கியிருப்போர் படை என்றால் என்ன? உதாரணம் தருக?
7. வலுநெருக்கடியைப் போக்க மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட மாற்றுசக்தி வளங்களைக் குறிப்பிடுக.
8. வலுநெருக்கடி தோன்றுவதற்கான காரணிகளைத் தருக.
9. கனிய வளங்களின் பிரிவுகளைத் தருக?
10. வளங்களைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்கான வழி முறைகளைத் தருக.

**விடைகள்:**

1. குறித்த ஒரு பொருளாதாரத்தில் வாழும் மக்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்துகொள்வதற்கு பயன்படுத்தப்படும் அனைத்து காரணிகளையும் வளங்கள் என அழைக்கமுடியும்.

2. இயற்கை வளம் ஒன்றுடன் மனிதவளம் சேரும் பொழுது அது பொருளாதார வளமாக மாற்றி அமைக்கப்படுகின்றது. எந்த ஒரு வளத்தையும் பொருள்கள் சேவைகளாக மாற்றி நுகரும் ஆற்றல் மனிதனிடம் காணப்படுகின்றது. அவனிடமுள்ள திறமை, அறிவு, அனுபவம், ஆற்றல் இதற்குத் துணையாக இருப்பதனால் இயற்கை வளங்களில் மனிதவளம் முக்கியத்துவம்பெற்ற ஒரு வளமாகக் காணப்படுகின்றது.

3. உலகளாவிய ரீதியில் எந்த ஒரு நாட்டிலும் கனிய வளங்கள், காட்டுவளங்கள், மனிதவளங்கள் என்பன சமனாக காணப்படாத நிலையினை வளங்களின் அசமநிலை என அழைக்கப்படும்.

4. அதிகரித்த உலகசனத்தொகை வளர்ச்சிவீதம், மனிதனின் அதிகரித்த தேவைகள், கைத்தொழில் விஞ்ஞானத்துறையின் வளர்ச்சி, ஆகிய காரணிகளை குறிப்பிட்டுக்கொள்ளமுடியும்.

5. பொருளாதாரம் ஒன்றில் எத்தகைய உற்பத்திச் செலவும் இல்லாமல் இயற்கையில் இருந்து இயற்கையாகக் கிடைக்கப்பெறும் அனைத்துக் காரணி வளங்களையும் இலவசபண்டம் என அழைக்கப்படும். மாறாக ஒரு பண்டத்தை நுகருவதற்கு உற்பத்திச் செலவு ஒன்று காணப்படுமேயானால் அஃது பொருளாதாரப்பண்டம் என அழைக்கப்படும்.

6. பொருளாதாரம் ஒன்றில் பொருள்கள் சேவைகளின் உற்பத்திக்கு பங்களிப்பு செய்யமுடியாதவர்களை தங்கி இருப்போர் படைஎன அழைக்கப்படும்.
(உ+ம்) சிறுவர்கள் (14வயதுக்குட்பட்டோர்)
முதியவர்கள் (65வயதுக்கு மேற்பட்டவர்கள்)

7. அலைச்சக்தி, வெப்பசக்தி, இயற்கைவாயு, நிலவெப்பம், உயிரியல்வாயு.

8. உலகின் சக்தி நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு, நவீன கைத்தொழில் விஞ்ஞானத் துறைகளின வளர்ச்சி, பெற்றோலியம் ஏற்றுமதிசெய்யும் நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை போன்ற காரணிகளை குறிப்பிட்டுக்கொள்ளமுடியும்.

9 (அ) உலோக கனியவளம்; இரும்புத்தாது, செப்பு, அலுமினியம், தங்கம், வெள்ளி.
(ஆ) எரிபொருள் கனிய வளம்: நிலக்கரி கனிய எண்ணெய், இயற்கை வாயு.
(இ) எரிபொருளோ, உலோகமோ அல்லாத கனிய வளம். சல்பர், காரீயம், சுண்ணாம்பு, களி

10. வளங்களின் உச்சப் பயன்பாட்டினை பெறல், வளங்களின் வீண்விரயங்களை தவிர்த்தல், புதியவளங்களை ஆய்வுசெய்தலும் கண்டுபிடித்தலும், உற்பத்தியில் இருந்து கழிக்கப்படும் வளங்களை மீள் உற்பத்திக்கு பயன்படுத்தல் ஆகிய காரணிகளைக் குறிப்பிட்டுக்கொள்ள முடியும். ★

ஆக்கம்:
- நகீரதன் -

# தாவரவியல்

1. ஏறு கொடிகளின் வகைகளை உதாரணத்துடன் விளக்குக...?

**பற்றுகம்பிக்கொடிகள்:-**
இத்தாவரங்கள் மெல்லிய கம்பிச்சுருள் போன்ற பற்றுக் கம்பிகளைப் பெற்றுள்ளன. இப் பற்றுக்கம்பிகள் தாவர உறுப்புகளின் மாறுபாடேயாகும். பிரண்டையில் நுனி மொட்டும், பட்டாணியில் இலையும், இலிமேடினிஸ் இலைக்காம்பும், கலப்பைக் கிழங்கில் இலையின் நுனியும் பற்றுக்கம்பிகளாக மாறியுள்ளன.

**கொக்கிக் கொடிகள்:-**
பற்றுக் கம்பிக்குப் பதில் வலிவான கொக்கிகளை பற்றிக் கொள்ளப் பயன்படுத்தும் தாவரங்களாகும். (எ—கா) மனோரஞ்சிதம் - மஞ்சரிக் காம்பு பற்றுக் கொக்கியாக மாறியுள்ளது.

**முட் கொடிகள்:-**
தண்டுகளில் உள்ள கூர்மையான கீழ்நோக்கி வளைந்துள்ள முட்கள், பற்று உறுப்பாகப் பயன்படுகிறது. (எ—கா) ரோஜா, இலையடி செதில் முட்களாக மாறியுள்ளது. இலந்தை மரத்தில் காகிதப் பூவில் கோண மொட்டு முட்களாக மாறியுள்ளது.

**வேர்க்கொடிகள்:-**
கணுக்களில் வெற்றிட வேர்கள் தோன்றி பற்றுறுப்பாகச் செயல்படுகிறது. (எ—கா) வெற்றிலை, மிளகு.

2. தண்டு கிளைத்தலில் இரு வகைகள் எவை...?

**(i) கவட்டுக் கிளைத்தல்:-**
நுனிமொட்டு இரண்டாகப் பிரிந்து ஒவ்வொரு தனித்தனியாக இரு கிளைகளை உண்டாக்குதல்:

**(ii) பக்கக் கிளைத்தல்:-**
கோண மொட்டின் வளர்ச்சியினால் ஏற்படும் கிளைத்தல் இது.

3. பக்க கிளைத்தலில் இரு வகைகள் யாவை...?

**(i) ஒரு பாகக் கிளைத்தல் வளர்ச்சி:-**
நுனி மொட்டு தொடர்ந்து வளர்ந்து, மையத்தண்டை நீளச் செய்கிறது. மையத் தண்டிலிருந்து பக்க கிளைகள் நுனிபோக்கிய வரிசையில் அமைந்திருக்கும். (எ—கா) சவுக்கு.

**(ii) நுனி வளரா இணைக்கிளைத்தல் வளர்ச்சி:-**
நுனிமொட்டின் வளர்ச்சி சிறிது காலத்திற்குப் பிறகு நின்றுவிடும். இதற்கு அருகில் உள்ள கோண மொட்டுகள் தொடர்ந்து வளர்கின்றன. (எ—கா) மா, பலா.

4. பெருங்கொடிகள் என்பவை யாவை...?
வெப்பமண்டல மழைக் காடுகளில் வாழும் பாஹினியாவாவி போன்ற கட்டைத் தன்மையுடைய தாவரங்கள் உயரமாக வளர்கின்றன. இத்தாவரங்களின் வேர்கள் நிலத்தில் பதிந்திருந்தாலும், அவைகள் தாங்கியைச்சுற்றிப் படர்ந்து காணப்படும். இவைகளுக்குப் பெருங் கொடிகள் என்று பெயர்.

5. தரைகீழ் தண்டின் வகைகள் யாவை...?
(i) மட்ட நிலதண்டு (Phizome)
(ii) கந்தகம் (Corn)
(iii) தண்டடி கிழங்கு (Tuber)
(iv) குமிழம் (Bilb)

- யனுரவி

# உங்கள் உடம்பு ஒல்லியாக இருக்க...

ஒல்லி உடம்பு உங்களுக்கு வேண்டுமா...? ஒல்லியாகச் சிந்தியுங்கள். ஒல்லியாகச் செயல்படுங்கள்.

எப்படி...? பட்டினி கிடந்தல்ல. பசி எடுத்த பிறகு சாப்பிட்டு மருந்து மாத்திரை டயட் மூலம் அல்ல. நமது நடத்தை மாற்றத்தால்.

**கொழுப்பைக் குறைப்பதா...?**

கொழுப்பைக் குறிவைக்க வேண்டாம். உங்களை, உங்கள் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளுங்கள். உடம்பு தானாக இளைத்து விடும்.

அதைவிட்டு, கொழுப்பைக் குறைக்கிறேன் என்று ஆரம்பித்தால் அது இன்னும் அதிகமாகிவிடும்:

பிறந்த குழந்தையைக் கவனித்துப்பாருங்கள். வயிறு பசியெடுத்தால் அழும். பாலூட்டினால் வயிறு நிறைந்து அழுகையை நிறுத்தி விடும்.

**தாயின் போக்கு**

தனக்கு வேண்டியதற்கு மேல் துளியும் சாப்பிடாது. கடவுள் இப்படிக் குழந்தையைப் படைத்திருக்க, தாய் எப்படிக் கொடுக்கிருள் பாருங்கள்...!

என் குழந்தை ஒரு போத்தல் பாலை எப்படி ஒரே மூச்சில் உறிஞ்சிக் குடித்து விடுவான் தெரியுமா...! இன்னும் கொஞ்சம் குடியடா குழந்தை! என்று வற்புறுத்துவாள்.

எறும்பு கடித்துக் குழந்தை அழுதால், இனிப்பு பிஸ்கட்டை எடுத்து அதன் வாயில் வைப்பாள்;

குழந்தை அழுகை நிறுத்தி விட்டுச் சிரிக்கிறதா...? 'இனிப்புக் கொடுத்தால் இன்பம் வரும்' என்று இவளாகவே முடிவுக்கு வந்து விடுவாள்.

அதைக் குழந்தைக்குத் திணித்து, அவன் அழும் பொழுதெல்லாம் ஸ்வீட், பிஸ்கட் கொடுத்து, அவன் இனிப்புக்காகவே சிணுங்கும்படி ஒரு பழக்கத்தை அவனுக்கு ஏற்படுத்தி விடுவாள்.

இப்படித்தான் பசியில்லாமல் சாப்பிடும் பழக்கம் குழந்தையில் இருந்து மனிதனைப் பற்றிக் கொள்ளுகிறது.

பட்சணங்களின் மீது பார்வை பட்டாலே சாப்பிடத் தோன்றும். நறுமணம் கமழ்ந்தால் நறுக்கென எடுத்து நொறுக்குவார்கள்!

சாப்பாட்டு நேரம் வந்தால் போதும் பசி எடுக்கிறதோ இல்லையோ சாப்பிட்டு வைப்பார்கள்.

மனக்கவலையாக இருந்தால், போரடித்தால், தனிமை வாட்டினால் எதையாவது வாங்கி வயிற்றுக்குள் தள்ளி வைப்பார்கள். பலன், பானை வயிறும், யானை உடம்பும்...!

**டயட் டயரி**

ஒல்லி உடம்பைப் பெற உருவான யோசனைகள்

1. டயட் டயரி வைத்திருங்கள். அதில் ஐந்து தலைப்புகள் இருக்கவேண்டும். எப்பொழுது சாப்பிடுகிறீர்கள், என்ன, எங்கே, யாருடன் சாப்பிடுகிறீர்கள், சாப்பிட்ட பிறகு என்ன உணர்வு ஏற்படுகிறது.

சாப்பிடுகிறோம் என்ற உணர்வு இல்லாமலே பலர் சாப்பிடுகிறார்கள். உதாரணத்திற்கு ஓர் அம்மையார் பற்றிச் சொல்கிறேன்.

தன் குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடத்திற்குச் சாப்பாடு கட்டும் பொழுதெல்லாம் ஒவ்வொரு அயிட்டத்திலும் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொள்ளுவார்.

பிறகு நேரத்தோடு தனியாகவும் சாப்பிட உட்காருவார். உடம்பு குண்டாகாமல் இருக்குமா...?

பழம், றொட்டி, முறுக்கு விற்பவர்களும் சிலர் இப்படித்தான் அடிக்கடி எடுத்து வாயில் போட்டுக் கொள்ளுவார்கள்.

2. ஆசையை அடக்குங்கள். உணவைப் பார்த்ததும் எடுத்துச் சாப்பிடும் பழக்கம் உங்களுக்கு இருந்தால், வீட்டில் எல்லா அறைகளிலும் உணவுப் பண்டங்கள் இருக்கவேண்டாம். சமையல் அறையோடு நிற்கட்டும்.

3. கலோரியில் கவனம் வையுங்கள். ஒரு நாளைக்கு நமக்கு இரண்டாயிரத்து நானூறு கலோரி உணவு தேவை.

இதில் 500 கலோரி குறைந்தால் ஒரு வாரத்தில் உடம்பின் எடை அரைக்கிலோ குறைந்து விடும்.

எடையைப் படிப்படியாகக் குறைக்கவேண்டுமே தவிர, ஒரேயடியாகக் குறைக்கக் கூடாது.

சாப்பிடாமல் இருப்பதோ, ஆயிரத்து இருநூறுகலோரிக்கும் குறைவாகச் சாப்பிடுவதோ தவறு.

4. ரசித்து, ருசித்துச் சாப்பிடுங்கள். சிறுகவளம் எடுத்துக் கொண்டு நன்கு மென்று உமிழ் நீரோடு கலந்து உண்ணுங்கள்.

வயிறு தனது திருப்தியை மூளைக்குத் தெரிவிக்க 20 நிமிடங்கள் பிடிக்கிறது. அதனால் சாப்பாட்டுக்கு நீங்கள் அரை மணி நேரமாவது எடுத்துக் கொள்ள வேண்டும். நண்பர் உறவினர்களுடன் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் சாப்பிடுங்கள்.

**5. விருந்து வேண்டாம்**

விருந்துகளுக்குப் போவதைக் குறைத்துக் கொள்ளுங்கள். மருந்துச் செலவு வராது.

விருந்துக்காரன்ஞல் 'சூப்' குடிக்காதீர்கள். நிறையச் சாப்பிடும்படி நேரும். ஒரு கரட்டைக் கடித்துச் சாப்பிடுங்கள். குறைவாக உணவு கொள்ளுங்கள்.

6. குறைந்த உணவு, நிறைந்த உடற்பயிற்சி. இதுவே உங்களது தினசரி வேதமாக இருக்கவேண்டும். நடக்கும் தூரத்திற்கு பஸ் தேடவேண்டாம்.

உங்கள் எடையில் இரண்டு அல்லது மூன்று கிலோ குறைந்ததும், ஒரு பையில் அந்த எடைக்கு மணலை நிரப்பித் தூக்கிப் பாருங்கள்.

'இவ்வளவு தான் இந்த எடையை நான் என் உடம்பில் சுமந்து கொண்டு நடந்தேன்...' என்று சொல்லிப் பாருங்கள் உற்சாகமாக இருக்கும்.

குண்டு உணர்வு போய்; ஒல்லி உணர்வு உள்ளத்தில் மேலோங்கும். பசியின் பெருமை பிடிபடும்: பிடி இடை வாய்க்கும். ★

# அன்றாட வாழ்வில்...

**முகம் மினு மினுக்க**

முகம் தனி மினு மினுப்புப் பெற்றுப் பிரகாசிக்கவேண்டும் என்று எல்லோரும் விரும்புவார்கள்.

பாதி எலும்பிச்சம் சாற்றைத் தயிருடன் கலந்து முகத்தில் பூசி, 10 நிமிடம் கழித்துக் குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் முகம் மினு மினு வென்று பிரகாசிக்கும்.

**முகத்தின் அழுக்கு நீங்க..**

முகத்திலுள்ள அழுக்குகள் நீங்க மோர் அருமையான பொருள்.

மேக் - அப் - போட்டுப் பவுடர் பூசி நாள் பூராவும் உழைத்து விட்டு வந்ததும், சிறிது மோரில் மிருதுவான துணியை நனைத்து, முகத்தைத் துடைக்க அழுக்குகள் வந்து விடும்.

துணியை மாற்றி மாற்றித் துடைக்கவும்: பின் உலர்ந்த துவாயினால் முகத்தைத் துடைத்து விடவும்.

**உப்பு...**

நம்முடைய அன்றாட உணவில் ஒரு நாளைக்கு ஒரு 'ரீஸ்பூன்' அளவில் பத்தில் ஒரு பங்கு உப்பு சாப்பிட்டாலே போதும்.

ஆனால் அதைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகமாக நாம் உப்பு சேர்த்துக்கொள்கிறோம். இது எமது இருதயம், ரத்த அழுத்தம், சிறுநீரகம், என்பனவற்றைப் பாதிக்கிறது.

**வெந்நீர்...**

வயிற்றுப் புண்ணினால் வரும் வயிற்று வலியாக இருந்தால் மிதமான சூடான வெந்நீரைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக் குடித்தால் உடனே வலிகுறையும்.

வெந்நீர் இரத்தத்தில் உள்ள நஞ்சை வெளிப்படுத்துகிறது: அடிக்கடி வெந்நீர் சாப்பிடுவதைப் பழக்கமாகக் கொண்டவர்களுக்குத் தலைவலியே வருவதில்லை.

குழந்தைகளுக்கு வரும் வயிற்று வலியும் வெறும் வெந்நீர் கொடுப்பதனால் குணமாகும். ★




# சுதாகரின் மனமாற்றம்

சுதாகர் ஒரு ஏழை விவசாயியின் மகன். சுதாகரின் தந்தையான கந்தசாமி மிகவும் கஷ்டப்பட்டு தன்னுடைய மூன்று உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்தைக் காப்பாற்றிவந்தான்.

சுதாகரோ சரியான சோம்பேறி. எந்நேரமும் வீட்டில் ஒரு மூலையில் தூங்கியபடியே இருப்பான்.

ஒருநாள் தாய் காமாட்சி சுதாகரிடம் 'சுதா, கடைக்குப்போய் ஒரு தையல் ஊசி வாங்கிவா' எனக் கூறி பணத்தையும் கொடுத்தனுப்பினாள்.

சிறிது நேரத்தின் பின் சுதாகர் வீட்டிற்கு வந்தான். காமாட்சி சுதாகரிடம்,

'எங்கே நீ வாங்கி வந்த தையல் ஊசி' எனக் கேட்டாள். சுதாவும்,

'நான் வாங்கி வரும்போது எங்கேயோ தொலைத்துவிட்டேன்.'

'வாங்கியவுடன் உனது சட்டைப்பையில்அல்லவா போட்டுக்கொண்டு வரவேண்டும்' எனக் கூறினாள் தாய்.

இன்னொருநாள் சுதாகர் தனது நண்பனைச் சந்தித்த போது: அவன் சுதாகருக்கு ஒரு குட்டி நாயைக்கொடுத்தான்.

அவன் அதனை தனது தாய் சொன்னபடி சட்டைப் பையினுள் அடைந்துகொண்டு வீட்டிற்குச்சென்றான்.

வீட்டை அடைந்ததும் அவனது சட்டை, சட்டையாக இல்லை, கிழித்த துணித் துண்டுகளாகவே இருந்தது. இதனைக்கண்ட காமாட்சி, நாயைக் கயிற்றினால் கட்டி அல்லவா கொண்டு வரவேண்டும், என்று புத்திசொன்னாள்:

காலை மணி எட்டு. சுதாகர் பாடசாலைக்குச் சென்றான்; அன்றுதான் அவனது பாடசாலையில் முதன்முதலாக மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பமாக்கப்பட்டு மாணவர்களுக்கு அப்பம் வழங்கப்பட்டது.

சுதாகர் தனது தாய்க்கு அப்பம் கொடுக்க ஆசைப்பட்டு தனது தாய் கூறியபடி கயிற்றினால் கட்டி இழுத்துச் சென்றான்.

வீட்டை அடைந்ததும் தான் கொண்டுவந்த அப்பத்தை தாய்க்குக் காட்ட 'அம்மா' எனக் கூப்பிட்டான். சுதாகரின் குரலைக் கேட்ட காமாட்சி வெளியே வந்து அப்பத்தின் கோலத்தைப் பார்த்து,

'இனி உனக்கு உது சரிவராது பேசாமல் அப்பாவோடு போய் வேலை செய்' எனக் கூறினாள்.

மறுநாள் தந்தையுடன் சுதாகரும் தோட்டத்திற்குப் போனான். போகும்போது மதிய உணவான கஞ்சியை ஒரு மட்குடத்தில் எடுத்துச் சென்றான். தோட்டத்தை அடைந்ததும் கந்தசாமி கஞ்சிக் குடத்தை ஒரு மரத்தில் தொங்கவிட்டார்.

நண்பகல் ஆனதும் சுதாகர் தந்தையிடம் 'அப்பா எனக்குப் பசிக்கிறது' எனக் கூறினான். கந்தசாமியும்,

'சுதா மரத்தில் இருக்கும் கஞ்சியில் அரைவாசியைக் குடித்துவிட்டு மீதியை எனக்கு வை எனக் கூறினார்.

ஆனால் சோம்பேறியான சுதாகர் பானையை மேலிருந்து இறக்கப்பஞ்சிப்பட்டு அருகிலிருந்த கல்லொன்றினால் பானைக்கு எறிந்தான்: பானையில் ஒரு துவாரம் ஏற்பட்டு அதனூடாகக் கஞ்சி ஒழுகியது.

ஒழுகுகின்ற கஞ்சியை சுதாகர் அண்ணாந்து குடித்துவிட்டு ஒரு மரத்தடியில் இருந்தான். சிறிதுநேரத்தால் கந்தசாமி வந்து கஞ்சியை எடுக்கப் போனார்.

ஆனால் பானையில் ஓட்டையைப் பார்த்ததும் கோபத்துடன் சுதாகரை 'வீட்டிற்குப் போ' எனக் கூறினார்.

அன்று இரவு கந்தசாமியும் காமாட்சியும் கலந்து பேசி சுதாகரை வேறு எங்காவது தங்கவைத்து வேலைக்குப்போக விடுவோம் எனத் தீர்மானித்தார்கள்.

மறுநாள் கந்தசாமி சுதாகரை ஒரு தென்னந்தோட்ட சொந்தக்காரனிடம் வேலைக்குச் சேர்த்து அங்கேயே தங்கவும் ஏற்பாடு செய்தான்.

தென்னந் தோட்டக்காரன் சுதாகரிடம் 'உன் பெயர் என்ன?' எனக்கேட்க சுதாகரும் 'கோம்பை இருக்க நீர் விழுங்கி' எனக் கூறினான்.

தென்னந்தோட்டக்காரனும் சுதாகரை அழைத்துச் சென்று இளநீர்கள் இருக்கும் ஓர் அறையுள் இருக்கவைத்து விட்டு வெளியில் போனான்.

சிறிதுநேரம் கழித்து தோட்டக்காரன் தோப்பிற்கு வந்தான். இளநீர்கள் இருக்கும் அறைக்குப்போனான். அங்கே சகல குரும்பைகளிலும் ஓட்டை இடப்பட்டிருப்பதைக் கண்டு சுதாகரிடம் விசாரித்தபோது,

நான் முதலிலேயே சொன்னேன் என்பெயர் 'கோப்பை இருக்க நீர் விழுங்கி' எனக் கூறியதும் தோப்புச் சொந்தக்காரனிற்கு கடுங்கோபம் வந்தது. அவனும் சுதாகரை தன் தோப்பிலிருந்து அடித்துக் கலைத்தான்.

அடித்த அடியின் வேதனை காரணமாக சுதாகர் வீதியால் அழுது கொண்டு போனான்.

நான் இனிமேல் நேர்மையாகவும் புத்திசாலித்தனமாகவும் என் தந்தையின் தோட்டத்திலேயே வேலைசெய்வேன்' என உறுதியோடு தன் வீட்டைநோக்கிச் சென்றான். ★

- சி. சிவாஞ்ஜன் -




# அறிவியல் வினா-விடை

நாம் விளையாடிவிட்டு மூச்சிரைக்க ஓடி வரும் போது உடனே தண்ணீர் அருந்தக் கூடாது என்கிறார்கள். காரணம் என்ன?

● விளையாடி விட்டு மூச்சிரைக்க ஓடிவரும்போது உடலின் வெப்பநிலை தானே குளிர்ந்து வியர்வை முழுஅளவில் வெளிவருதல் நல்லது.

மேலும் மூச்சிரைக்கும் நிலையில் தண்ணீர் அருந்தினால் அது தவறுதலாக மூச்சுக் குழாயில் சென்றுதொல்லை ஏற்படுத்தலாம்,

ஓடும்போது மூச்சு வாங்கக் காரணம் என்ன?

● ஓடும்போது தசைகளின் இயக்கம் அதிகரிப்பதால், அதற்கு இரத்த ஓட்டமும் தேவைப்படுகிறது.

இரத்த ஓட்டத்தை அதிகரிக்க, இருதயத்துடிப்பு அதிகரிக்கிறது. இதனால் நுரையீரல்களுக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு அதிகரிக்கிறது.

இந்த இரத்தத்தைச் சுத்திகரித்து மீண்டும் இருதயத்துக்கு திருப்பி அனுப்ப, நுரையீரல்கள் மிகையாகச் செயல்படுகின்றன,

இதனால் ஓடும்போது மூச்சு வாங்குகிறது. ஓட்டம் நின்றவுடன் மூச்சுவிடல் சகஜ நிலையை அடைகிறது.

மனிதனுக்குள் மனம் எங்கு அமைந்துள்ளது? மூளைக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பு எவ்வாறு நிகழ்கிறது?

● மனம் ஒரு செயல் வடிவம் அதற்கு உருவமில்லை. அருவமானது உடலில் உள்ள உறுப்புக்களின் மொத்த செயல்பாங்கும், மனிதனின் தனித்தன்மையும் சேர்ந்த அமைப்பே மனம் (பருப் பொருள்)

## எங்கள் அம்மா!

காலைக் கதிரோன் கிளம்பு முன்னே
  காலம் தாழ்த்தா தெழும்பி நாளும்;
வேலைப் பளுவை ஏற்றுச் செய்யும்
  வேலை ஆளும் யாரே கூறீர்?

தேனீர் வைத்துத் தந்த பின்பு
  தேவைக் குணவு செய்ய மாய்ந்து;
'போனீர் சாப்பிட் டுடனும் பள்ளி'
  போந்து புத்தி உரைப்பா ராரே?

உடைகள் தைத்து இட்டுப் பார்த்து
  உடுத்த அழுக்கு ஆனல் தோய்த்து;
சடைகள் பின்னிச் சருமம் பேணி
  சகத்தில் எம்மை ஏற்றி வைப்பார்!

வீட்டுப் பொருட்கள் திரைந்து போகா,
  வீணில் பொழுதைக் கழித்த லின்றி;
நாட்டும் அழகைப் பெருக்கி வைத்து
  நாட்டுக் குழைப்பார் தன்னில் முந்தி!

செய்வதெல்லாம் ஊதிய மின்றி,
  செய்யும் பிறவி வையம் தன்னில்;
மெய்யா நிமிர்ந்து நிற்கும் அந்த
  மேன்மைக் சூரியாள் எங்கள் அம்மா!

— நவாலியூர்க்கவிராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைக்கனம்

'என்ன அப்படிப் பார்க்கிறாய்? உன்னுடன் போட்டிக்கு வந்துவிட்டேன் என்று? என்னைப் போல் மினுக்கி வெளுத்துக்காட்சி தந்தாலும் என் 'ருசி' உனக்கு வந்திடுமா' அட்வகேட் ஆனந்தராஜா வீட்டுச் சாப்பாட்டு மேசையில் இருந்த சீனி தன் அருகில் இருந்த மேசை உப்புடன் மோதியது.

'என்னுடன் போட்டி போட நீ யார்? அப்படிப் போட்டி போட்டாலும் எப்படி ஜெயிக்கமுடியும்? காலாதிகாலமாக தமிழன் பண்பாட்டுடன் ஒன்றி வந்தவன் நான்; இன்று சாப்பாட்டு மேசையில் ஏறி விட்டேன் என்று தம்பட்ட மடிக்கிறாய். இந்த மேசைச்சாப்பாடு வரமுன்பே தமிழன் தன்பந்தியில் எனக்கு முன்னுரிமை அளித்து விட்டான், அவனது சாப்பாட்டிலையில் எனக்குத்தான் முதலிடம்; இதை நீ நன்கு புரிந்துகொள்'.

இப்படி உப்புக் கூறியதும், 'பூ... பந்தியில் பெரிய முதலிடம் பெற்று விட்டாய். உனது பெறுமதிதான் என்ன? கேவலம் கிலோ ஒரு ஐந்து ரூபா நோட்டையாவது தாண்டினாயா? நீ ஏணி வைத்து ஏறினாலும் என் விலையைப் பிடிக்கமாட்டாய். நினைத்தாலே இனிக்கும். என்னைப்பற்றி அரசியலே அமர்க்களப்படுகிறது. என்னைப்பற்றிக் கதைக்காத அரசே கிடையாது. நினைத்தவுடன் வாயில் போட்டதும் இனிக்கவா செய்கிறாய். உன்னைப்பற்றிப் புகழ்பாட... என்னருகில் இருக்கவும் நீ தகுதியற்றவன்' என்றது சீனி.

உப்பிற்கோ பொறுக்கவில்லை. 'ஓ... நேற்று வந்து இனிப்புக்காட்டிவிட்டு தகுதி வேறு கதைக்கிறாயா? அதிகப் பிரசங்கிபோல் தம்பட்டம் அடிக்காதே... உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று ஆன்றோரே கூறியிருக்கிறார்கள். எனக்குப் பெறுமதி முக்கியமில்லை... பணம் தேவையில்லை... ஆன்றோர் புகழும் நல்வார்த்தையே எனக்குத் திருப்தி.

'என்னடா... ஏதோ உனக்குள் பெருமை பெருமை என்கிறாயே... வருகிறாயா இருவரும் மக்களிடம் சென்று வாக்குக் கேட்போம்; குழந்தைகள்முதல் பாட்டா பாட்டி வரை என் பக்கந்தான் நிற்பார்கள்.' என்று சீனி உப்பைக் கேட்டதும்,

உப்போ மிக அமைதியாக; 'சீ...... உன்னைப்போல் அற்ப புத்தி எனக்கில்லை. நான் ஏன் மக்களிடம் செல்லவேண்டும். என் பிறப்பு இயற்கையானது. உன்னைப்போல் செயற்கைச் சினைப்படுத்தலில் உற்பத்தியாகவில்லை. நான்; நாகரிகமோகம் கொண்ட மக்கள் மனதில் உன் இனிப்பைக்காட்டி இடம்பெற்று விட்டாய்; அதுதான் படபடக்கிறாய். நானோ என்றும் போல் இருக்கவேண்டிய இடங்களில் இருந்து என் தன்மையை நிலைநாட்டுகின்றேன்.

சீனிக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. 'மடப்பயலே! பிறப்புப் பற்றி உளறுகிறாயே... உன் பிறப்பு எனக்குத் தெரியாதா? உவர்க் கடற் சேற்றிலே முளைத்த உனக்கு என்ன துணிச்சல் கௌரவமான என் மேல் நாட்டுப்பிறப்புப் பற்றிப் பழித்துரைக்க...! உன் 'நா, உப்பிலேயே அவியட்டும்... தூ...'

உப்பிற்கோ பதில்பேசமுடியாது அழுகையே வந்துவிட்டது. 'ம்...நான் சேற்றில் முளைத்த பூத்தானே... இந்த மக்கள் நன்றிகெட்டவர்கள்... அவர்களுக்கு நான் எவ்வளவு பாதுகாப்புக்களைச் செய்கிறேன். நான் இன்றிச் சாப்பாடே இல்லை என்று உணர்ந்தும் என் பெறுமதியைத்தன்னும் கூட்டக்கூடாதா?... நேற்றுப் பிறந்த சீனிக்கு இருக்கும் மதிப்பு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிறந்த எனக்கில்லைத்தான்... என்ன மாதிரி என் பிறப்பைத்தாக்கி விட்டான்... என மனதில் நினைத்து அழுதது.

இந்த அமைதியில் அட்வக்கேட் தம்பதிகள் தன்னைப் பற்றிப் பேசுவது சீனியின் காதிற் கேட்டது...

'டேய் உப்பா! நன்றாகக் காதுகொடுத்துக்கேள். இந்தத் தம்பதிகள் வாயிலும் என் கதைதான்...

ஆட்வக்கேட் மனைவி: 'என்ன சொன்னீர்கள்? சீனிக்குத் தட்டுப்பாடா?...

இல்லை இல்லை, உலகசந்தையில் சீனியின்விலை பன்மடங்கு ஏறிவருவதால் நம் அரசிற்குப் பெரும் நட்டமாம்; அதனால் இந்தச் சீனிப் பாவிப்பை அடியோடு நீக்குமுகமாக இங்கு நட்டத்தில் இயங்கும் சீனித் தொழிற்சாலைகளையும் மூடிவிட்டு சீனிக்குப்பதில் சர்க்கரை, பனங்கட்டி, கித்துள் தொழிற்சாலைகளை நிறுவி அவ்வப்பகுதி மக்கள் அவற்றைப் பாவிப்பில் எடுத்துப் பயன்பெறுவதுடன் நாட்டிற்கும் மிச்சம் பிடிக்குமாறு அரசு உத்தரவுபோட்டுள்ளது என அட்வக்கேட் மனைவிக்கு விளக்கிக் கூறினர்.

'ஐயோ சீனி இல்லாமல் எப்படி ரீ குடிப்பது?... எப்படித் தயிர் சாப்பிடுவது... சீனி இல்லாது என்றால் இருக்கவே முடியாது' மனைவி கீதா அங்கலாய்த்தாள்.

'என்ன கீதா அப்படிப் பதறுகிறாய்? நம்ம மூதாதையர் எங்கே இந்தச் சீனியைக் கண்டார்கள்? அவர்கள் சீவிக்கவில்லையா?... நம்ம பனங்கட்டியுடன் ஒப்பிடும்போது இந்தச் சீனி எந்த மூலைக்கு... எல்லாம் நாம் கைக்கொண்ட பழக்கம் தான். மாற்றிக்கொண்டால் போகிறது'.

உப்பு அமைதியாகச் சீனியைப் பார்க்கிறது. சீனியின் முகத்தில் அசடு வழிகிறது. ★

- அமுதா வெள்ளியங்கிரி -

உருவகக் கதை

### பேசாத படம்

மலர் பிலிம்ஸார் பேசாத படம் ஒன்றைத் தமிழில் தயாரிக்கின்றனர்,

படத்தின் பெயர் 'அந்தக் கால அந்தப்புரங்கள்' என்பது.

புதிய முகங்கள் நடிக்கும் இப்படத்தில் வசம்ன கிடையாது; வெறும் கைகைகளை மட்டுமே வைத்து படம் உருவாகியது. ★

# தமிழ் சினிமாவில் எழுத்தாளர் புரட்சி இயக்குநர் குகநாதன் பெருமிதம்!

பொழுது என்பது போக்குவதற்கு மட்டுமல்ல, ஆக்குவதற்கும்தான் என்னும் கொள்கையைப் பின்பற்றி பொழுதுபோக்குப் படங்களை மட்டும் எடுத்துக் கொண்டிருக்காமல், சாதாரண மனிதனின் உள்ளத்திலும் ஊடுருவக்கூடிய நற்கருத்துக்களைப் போதிக்கின்ற படமாகப் படமெடுத்துக் கொண்டிருப்பவர் வி. சி. குகநாதன்.

எட்டு வயதிருந்தே எழுத்தின் மீது எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. அப்போதிலிருந்தே எதையாவது எழுதிக்கொண்டிருப்பேன்.

சில ஆண்டுகள் நான் காஞ்சிபுரத்தில் தங்கியிருந்தேன். அண்ணா அவர்களுடைய நட்பு எனக்குக் கிடைத்தது. ஒரு முறை நான் எழுதிய கதைகளையும் கட்டுரைகளையும் அவரிடம் காட்டினேன்.

### அண்ணாவின் ஆசி

அவற்றைப் படித்த அண்ணா, 'நன்றாக எழுதுகிறாய் தம்பி! இப்படியே தொடர்ந்தால் எதிர்காலத்தில் பெரிய எழுத்தாளனாக உன்னால் பிரகாசிக்க முடியும் நிறையப் படி!' என்று என்னை உற்சாகப்படுத்தி சில புத்தகங்களையும் எனக்கு வழங்கினார்.

அன்றிலிருந்து தீவிரமாகப் படிக்கவும் எழுதவும் ஆரம்பித்தேன்.

அந்நாளில் பல வெற்றிப் படங்களுக்கு திரைக்கதை அமைத்து அத்துறையில் தீர்க்கதரிசியாய் விளங்கிக் கொண்டிருந்த ஜி. பாலசுப்ரமணியம் அவர்களிடம் எனக்கு பழக்கமேற்பட்டது.

அவர் என்னைத் தன் உதவியாளராகச் சேரும்படி சொன்னார். அதன்படி அவரிடம் சேர்ந்து திரைக்கதை அமைக்கும் கலையைக் கற்றுக் கொண்டேன்.

எனது பத்தொன்பதாவது வயதில் 'புதிய பூமி' படத்திற்கு நானே தனியாக திரைக்கதை அமைத்தேன்.

அப்போது எம். ஜி. ஆர். அவர்கள் என்னை மிகவும் உற்சாகப்படுத்தி ஊக்கமூட்டினார். தொடர்ந்து அவருடைய படங்களில் பணி புரிந்தேன்.

தெலுங்கு, இந்தி, ஒரியா மொழிப் படங்களுக்கும் கதை எழுதியிருக்கிறேன். முன்பு ஒரே நேரத்தில் பத்துப் படங்களுக்குக் கதை, வசனம் எழுதிக் கொண்டிருந்தேன்.

'ஒரு மனிதனின் கதை' டி. வி தொடருக்குத் திரைக்கதை வசனம் எழுதியது ஒரு புதிய அனுபவம் எனக்கு. நான் டி. வி. தொடருக்கு வசனம் எழுதப்போகிறேன் என்பதைக் கேள்விப்பட்டு வீடியோ படத்திற்கெல்லாம் வசனமெழுதி சிக்கலில் மாட்டிக் கொள்ளாதீர்கள்' என்று பலரும் என்னைப் பயமுறுத்தினார்கள்.

ஆனால் நான் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் செய்துதான் பார்ப்போமே என்று தைரியமாக இறங்கினேன்.

### சிவசங்கரி கதை

திரைக்கதை வசனத்தை எழுதி கதாசிரியை சிவசங்கரியிடம் படித்துக் காட்டி, 'சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு உங்கள் கதையைக் கெடுத்துவிட்டேன் என்று சொல்லக்கூடாது!' என்றேன், சிவசங்கரிக்கும் என் திரைக்கதை திருப்தியைத் தந்தது. அந்தத் தொடர் எனக்குப் பெரும்புகழைப் பெற்றுத் தந்தது. எனக்கு நிறையக் கடிதங்கள் வந்து குவிந்தன. ஒரு கலெக்டர்கூட என் வசனத்தைப் பாராட்டி எழுதியிருந்தார்.

சிறு வயதில் எனக்கு நடிக்க வேண்டுமென்ற ஆசையும் இருந்தது. 'ஏமாறாதே ஏமாற்றாதே' படத்தில் வில்லனாக நடித்தேன்.

மக்கள் ஏற்றுக் கொள்ளாததால் பேனாதான் நமக்கு நிரந்தரம் என்று நடிப்பதை விட்டுவிட்டேன்.

### எழுத்தாளர்

முன்பெல்லாம் எழுத்தாளர்களுக்குப் போதுமான மரியாதை கிடைக்காமல் இருந்தது. ஆனால் இப்போது எழுத்தாளர்களை அடையாளம் கண்டு அவர்களின் திறமைகளை மக்கள் அங்கீகரிக்கத் துவங்கிவிட்டார்கள்.


எழுத்தாளர்களுக்கு இப்போது மரியாதை கிடைக்கிறது.

பாக்யராஜ், டி. ராஜேந்தர், பாண்டியராஜன் போன்வர்களெல்லாம் வெற்றி பெற்றிருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் நடிகர்கள் என்பதால் அல்ல. சிறந்த எழுத்தாளர்கள் என்பதால் தான்!

எழுத்து எழுச்சி இப்போது எழுந்துள்ளது. இதை ஒரு முகப்படுத்தி எழுத்தாளர்கள் அனைவரும் பாடுபட்டால் மக்கள் மனதில் ஓர் எழுச்சியை ஏற்படுத்த முடியும்!' — என்கிறார் குகநாதன். (எ-4)

## சொற்சிலம்பம்

### போட்டி இல: 104



சொற்சிலம்பம் இல: 104
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 16 - 08 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. உலகை ஆட்டிப்படைத்த அரசர்களில் ஒருவர் 4. முரசு 5. இம்மையும் மறுமையும் 6. இலச்சினை 7. குற்றம் 9. இரத்தம் 10. உடலை வருத்திச் செய்யும் துறவு 11. பழங்களில் இருந்து தயாரிக்கப்படும் உணவு 12. விரோதம் 15. உரு அமையச் செய் 16. ஒரு மலையின் பெயர்.

**மேலிருந்து கீழ்:**

1. ஒரு முள் செடி 2. சிவனை இந்த உருவிலும் வழிபடலாம் 3. மாசு 4. சுழற்றி விளையாடும் சிறு கருவி 5. இரு இனங்களுக்கு இடையில் எழும் பகைமை 9. தேவர் 11. மிருகங்களில் பெரியது 14. சரி என்பதன் பொருள்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி [illegible]ழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# நடிப்பதற்கும் படிப்பதற்கும் உகந்த ஈழத்தமிழ் நகைச்சுவை நாடகங்கள்

நாடகங்களைப் படிப்பதற்கேற்ற நாடகங்கள், நடிப்பதற்கேற்ற நாடகங்கள், படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற நாடகங்கள் எனப் பகுப்பாய்வு செய்யலாம்.

நாடகங்கள் நடிப்பதற்கே தவிரப் படிப்பதற்கல்ல என அறுதியிட்டுரைப்போரும் உளர்.

இக்கருத்துக்கள் ஒரு புறமிருக்க, நகைச்சுவை நாடகங்களைப் பொறுத்தவரை— அவை நடிப்பதற்கு மட்டுமன்றிப் படிப்பதற்கும் உகந்தனவாக இந்த இரு தன்மைகளிலும் வெற்றி காணக்கூடியனவாக அமைந்து விடுவது வழக்கம்.

நகைச்சுவையை எல்லாத் தரத்தினரும் விரும்பி வரவேற்பதும், நகைச்சுவை என்ற ஊடகத்தின் மூலமாகச் சொல்லுகின்ற கருத்து சுவைஞர்கள் மத்தியிலே அதிக தாக்கத்தினை ஏற்படுத்தும் தன்மை பெற்றிருப்பதுமே இதற்குக் காரணமாகும்.

இந்த வகையில் ஈழத்திலே நூலுருவில் வெளிவந்து மேடையேறியதும், மேடையேறிப் பின் நூலுருப் பெற்றதுமான சில நகைச்சுவை நாடகங்கள் மீதான ஒரு கண்ணோட்டமே இக்கட்டுரையாகும்.

### 'மிஸ்டர் குகதாஸன்'

இவ்வகையான நாடகங்களுக்கு முன்னோடியாக அமைந்தது 'மிஸ்டர் குகதாசன்' நாடகமாகும். இதனை எழுதியவர் இலங்கையர்கோன்.

வேலுப்பிள்ளை-ராஜேஸ்வரி தம்பதிகளின் மகன் குகதாசன், தனக்குப் பேசிவருகின்ற பெண்களையெல்லாம் சொத்தி-கறுப்பு-வாக்குக்கண் இங்கிலீசு தெரியாது - தமிழ் தெரியாது - இப்படி ஏதாவது சாட்டுக்கள் சொல்லித் தட்டிக் கழித்து விடுகிறான்.

கடைசியில் அவனது 'கொண்டிசன்' களுக்கெல்லாம் அமைந்த பெண்ணாக ராமமூர்த்தி – சௌந்தரம்மா தம்பதிகளின் மகள் வாய்க்கிறாள்.

திருமணம் நிச்சயமாகும் சமயத்தில் அது குழம்பி இரு குடும்பங்களுக்கும் இடையே பகைமை வளர்கிறது. கடைசியில் அந்தப்பகைமைமறைந்து திருமணம் மீண்டும் நிச்சயமாகிறது. இதுவே நாடகத்தின் கதை.

இந்நாடகத்திலே [illegible] பழத்தோலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, 'இப்பாத்திரம் இல்லையேல் இந்த நாடகமே இல்லை' என்னும்படி கதையின் முக்கிய இரண்டு திருப்பங்களுக்கும் ஆசிரியர் அதனைக் காரணமாக்கியிருக்கிறார்.

குகதாசன் முதலில் அதில் சறுக்கி மண்டை அடியும்வண்ணம் விழுந்து பைத்தியமாவதும், பின்னர் மீண்டும் அப்படி விழுந்து பைத்தியம் தெளிவதுமே அத்திருப்பங்களாகும்.

குகதாசன் பைத்தியமாகிப் பேசுகின்றபேச்சுக்கள், நடந்துகொள்ளும் முறைகள்...... 'என்ன சங்கடம் பிடிச்ச மனிசரப்பா நீங்கள்' என்று அடிக்கடி கணவனுடன் எரிந்து விழுகின்ற ராஜேஸ்வரி...

பாட்டெல்லாம் பாரதி பாட்டென்று எண்ணிக் கொண்டு அடிக்கடி 'பாரதி சொன்னார் பாரதி சொன்னார்' என்று பிழையான பாடல்களை ஒப்புவிக்கும் நவரத்தினம்... இப்படியாக இந்நாடகத்தில் நகைச்சுவையைக் குறைவின்றி வழங்கியுள்ளார் ஆசிரியர்.

### நாடகம்

'நாடகம்' —கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை எழுதிய நகைச்சுவை நாடகம் இது. சிங்கப்பூர் பென்சனரும் நடிகரும் நாடகத் தயாரிப்பாளருமான சுப்பிரமணியம், தமது மகள் லீலாவுக்குத் தகுந்த கணவனைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு தேர்வு-ஒரு நாடகம் ஆடுகிறார்.

அது நாடகம் என்பது நேயர்களுக்குக் கடைசியில் தான் வெளிப்படுகிறது. இந்நாடகத்திலே சுப்பிரமணியத்தின் மருமக்கள் முறையினரான சுந்தரம், மூர்த்தி, வீரசிங்கம், மணி ஆகியோர் தோன்றித் தோற்றுப்போகிறார்கள்.

தகுதியற்றவன் என ஆரம்பத்தில் அவரால் [illegible]

மகேசனே முடிவில் தேர்வில் தேறுகிறான்.

வெளியே வீரம்பேசி பேய் பிசாசு என்றவுடன் தொடை நடுங்கும் போலி வீரர்களையும், சந்தர்ப்பம் தெரியாது கொடுந்தமிழ் பேசும் பிரகிருதியையும், ஆசிரியர் அறிமுகப்படுத்தியுள்ள பகுதிகளில் நல்ல நகைச்சுவையைக் காண்கிறோம். சிறப்பாகக் கொடுந்தமிழ் பேசும் வில்லுப்பாட்டு வீரசிங்கம் வருகின்ற இடங்களில் நாம் வாய்விட்டுச்சிரிக்க வேண்டியுள்ளது.

### 'இதோ ஒரு நாடகம்'

நாடகம் பற்றியதான இன்னொரு நகைச்சுவை நாடகம் பொ. சண்முகநாதனின் 'இதோ ஒரு நாடகம்' என்பது.

இந்நாடகம் பற்றி 'ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' என்ற தமது நூலில் க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் குறிப்பிடுவதாவது:—

'இளைஞர்கள் சிலர் கூடி நாடகம் ஒன்றிற்கான ஒத்திகை தொடங்கி நாடகம் அரங்கேறாமல் நாடகத்திலே கதாநாயகியாகப் பாத்திரம் ஏற்றவனுக்கும் வில்லன் பாத்திரம் ஏற்றவனுக்கும் காதல் உண்டாகி இருவரும் மணமுடிக்கத் திட்டமிடுவதாக முடியும் நாடகம்.

'இதோ ஒரு நாடகம்' நாடக ஒத்திகைகளை நையாண்டி செய்யும் வகையிலே அமைந்துள்ளது. இக்காலத்தில் நாடகங்கள் போதிய ஒத்திகையின்றி மேடையேறுவதும், திரைப்பட அச்சுப்பாத்திரங்களாய்ப் பாத்திரங்கள் அமைவதும் மிகவும் இயல்பாக இந்நாடகத்திற் காட்டப்படுகின்றன. இவற்றின் பின்னணியிற் காதல் நிகழ்ச்சி ஒன்றையும் இணைத்து நாடகத்திற்கு ஒரு கருவையும் ஆசிரியர் அமைத்தமை குறிப்பிடத்தக்கது...'

### 'அசட்டு மாப்பிள்ளை'

'அசட்டு மாப்பிள்ளை' நகைச்சுவை நாடகத்தை எழுதியவர் எஸ். எஸ். கணேசபிள்ளை.

வள்ளல் சிவப்பிரகாசத்தின் மகன் மகாலிங்கத்தின் எண்ணங்கள் செய்கைகள் யாவும் முற்போக்கானவை. ஆனால் அவனது பேச்சுக்கள் மட்டும் அசட்டுத்தனமானவை. அவனே மலாயன் பென்சனியர் மார்க்கண்டரின் ஒரே மகளும் அழகியுமான மாலதியைக் காதலிக்கவும் கைப்

நகைச்சுவை

பிடிக்கவும் எல்லா வகையிலும் தகுதியானவன் என்பதைச் சொல்வதே நாடகக் கதை.

நாடகம் முழுவதும் நகைச்சுவையைக் குறைவின்றி வழங்குவதற்கு ஆசிரியர் பல பொருத்தமான பாத்திரங்களை இந்நாடகத்திலே படைத்துள்ளார்.

அசட்டுத்தனமாகப் பேசுகின்ற மகாலிங்கம் தனித்தமிழில் திருக்குறள் எடுத்துக்காட்டுகளுடன் பேசுகின்ற பண்டிதர் பரமலிங்கம், தமிழுடன் ஆங்கிலத்தைக்கலந்து பேசுகின்ற மார்க்கண்டர், இவர்கள் அடிக்கடி வந்து எம்மைச் சிரிக்க வைப்பதுடன் ஆசிரியரின் இயல்பான உரையாடல்களிலும் 'அது' நிறைய வருகிறது.

### மச்சானைப் பார்த்தீங்களா?

இரா. பாலச்சந்திரன் எழுதிய நாடகம் 'மச்சானைப் பார்த்தீங்களா?'

ராமா தன்னை ஒரு ராம பக்தன் - அதிசய மனிதன் என்ற அறிமுகத்துடன் கிருஷ்ணரின் உள்ளத்தில் மட்டுமல்ல இல்லத்திலும் குடியேறி விடுகிறார்.

உண்மையில் அவன் ஒரு மோசடிப் பேர்வழி என்பதும் அவனது நோக்கம் கிருஷ்ணரின் திரண்ட சொத்துக்களைச் சூறையாடுவதும், அவரது மகள் மாலுவைக் கெடுப்பதும் தான் என்பதும் கடைசியில் அம்பலமாகிறது.

முதலில் ராமாவிடம் ஏதோ கவர்ச்சியைக் கண்டு சண்முகத்தை ஒதுக்கி வந்த மாலு இறுதியில் அவனது உத்தம குணங்களை உணர்ந்து அவனைக் கைப்பிடிக்கிறாள்.

இந்நாடகத்திலே ராமா கிருஷ்ணரிடம் அடிக்கடி அவிழ்த்துவிடும் புளுகு மூட்டைகளும், அவனது உதவியால் இவர்தான் உலகம் சுற்றப்போவதாக எண்ணும் கற்பனைகளுமே நகைச்சுவையாகக் கொள்ளத்தக்கன.

உதவாக்கரையாகப் போய்க்கொண்டிருக்கும் மலரவனைத் தந்தை கண்டிக்க, அதனால் அவன் வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்யத் துணிந்து பொலிடோலிடம் தஞ்சமடைகின்றான்.

பொலிடோலுக்குப் பதில் மிளகாய்ப்பொடி கரைச்ச தண்ணீரைக் குடித்த பின்னர் தான் அவனுக்கு வாழவேண்டும் என்ற பிடிப்பும் துடிப்பும் ஏற்படுகிறது. இக்கதையினை விளக்கும் நகைச்சுவை நாடகம் அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய 'பொலிடோலே கதி'

### இசைநாடகம்

அம்பலத்தாடிகளின் 'கந்தன் கருணை' ஒரு காத்தான் கூத்துப் பாணி இசை நாடகம்.

புராணகாலப் பாத்திரங்களான முருகன், நாரதர், தெய்வானையுடன் இக்கால மாந்தர்களும் சந்திக்கின்றதான அந்த முரண்பாட்டில் எழுகின்ற ஒருவித நகைச்சுவையை இந்நாடகத்திலே காண்கிறோம். நாட்டுக்கூத்து மெட்டில் சமகாலப் பிரச்சினைகளைச் சொல்லுகின்றபோது அதிலேயும் ஒருவித அங்கதச் சுவை வெளிப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலே நிலவும் சாதிக்கொடுமைகளை நாரதர் வாயிலாக அறிந்த முருகன் - இருவருமாக அதைக்காண வருகிறார்கள். அங்கே 'கந்தன் வேலன்' என்ற பெயருடனே கந்தன் கோயிலுக்குள் எவரும் போகேலாது...' என்று இவர்களே கோயிலுக்குள் நுழையாதபடி விரட்டப் படுகிறார்கள் என்பது நாடகக் கதை. ★

- பொ. சண்முகநாதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுகை வாழ்வை முழுமையாக்கும்

என்னுடைய உம்மத்வர்களில் மிகச் சிறப்புடையோர் இருக்குர் ஆனை தங்களுடைய இதயங்களில் சுமந்து அதனை ஓதி அதன்படி செயல்படுகின்றவர்களும், இரவு வணக்கத்தை உடையோரும் ஆகும்.

தொழுகையைப் பேணி ஒழுங்காக நிறைவேற்றுபவர்கள் சொர்க்கம் புகுகின்றனர்.

தொழுகையற்றவர்களுக்கு இஸ்லாத்தில் எவ்வித பங்கும் கிடையாது' ஒளுவற்றோருக்குத் தொழுகையில் பங்கு கிடையாது.

எனது உம்மத்தவர்களின் ஒளு, ஸஜ்தா செய்ததின் காரணத்தினால் அவர்களின் முகங்களிலும் காலங்களிலும் தோன்றும் ஒளியினால் அவர்கள் மறுமை நாளில் பிரித்தறியப்படுவார்கள்.

தொழுகையினால் உணவு நெருக்கடி அவரைவிட்டு நீக்கப்படும். கப்றுடைய அதாபு கிடையாது. ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தை அவர் மின்னல் வேகத்தில் கடந்து விடுவார். கேள்வி கணக்குக் கேட்கப்படமாட்டாது.

தொழுகையை விட்டவன் மரணமாகும்போது மூன்று விடயங்கள் ஏற்படும்.

1. கேவலமான முறையில் அவர் இறப்பார்:

2. பசியுள்ள நிலையில் அவர் இறப்பார்;

3. தாகமுள்ள நிலையில் அவர் இறப்பார்.



நீங்கள் அறிய எந்தத் தொழுகையையும் விட்டு விடாதீர்கள். தொழுகையை விட்டவர் தமது மார்க்கத்தை விட்டவர் ஆவர்.

ஒருவர் தம் வீட்டில் தொழும் ஒரு தொழுகையின் பிரதிபலன் இரட்டிப்பு இன்றிய ஒரு தொழுகையாகவே இருக்கும்.

அவர் தம் இனத்தவர்களின் (மஹல்லா) மஸ்ஜித்தில் தொழும் தொழுகையானது

**நபிநாயகம் (ஸல்) அவர்கள்**

இருபத்தைந்து மடங்கு இரட்டிப்பானதாகும்.

ஜும்மா மஸ்ஜிதில் தொழும் தொழுகையானது ஐநூறு மடங்கு இரட்டிப்பானதாகும். மஸ்ஜித்துல் அக்ஸாவில் அவர் தொழும் ஒரு தொழுகையானது ஐயாயிரம் மடங்கு இரட்டிப்பானது ஆகும்.

மஸ்ஜித்துல் அக்ஸாவில் அவர்தொழும் ஒருதொழுகையானது ஒரு லட்சம் மடங்கு இரட்டிப்பானதாகும்.

(ஜமாஅத்துத்) தொழுகை நிலைப்படுத்தப்பட்டுவிடுமானால் அதற்காக நீங்கள் விரைந்தோடிவரவேண்டாம். அமைதியாக சாதாரண நடையில் நடந்து வருவீர்களாக. இமாமுடன் நீங்கள் எந்த நிலையை அடைவீர்களோ அதனை நீங்கள் அவருடன் சேர்ந்துதொழுதுவிட்டுஅவருடன்நீங்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்ட ரக்அத்துக்களை அவர் ஸலாம் கொடுத்து முடிந்தபின் தனித்துத் தொழுது தொழுகையைப் பூர்த்தி செய்வீர்களாக!

எவருக்கு ஒரு தொழுகை தவறிவிடுகிறதோ அவருக்கு அவரது குடும்பமும் அவரது பொருளும் சூறையாடப்பட்டது போன்று ஆகிவிடுகிறது.

ஒருவர் தொழுகையில் வந்து நின்று விட்டால் அவர் அவயவங்களை அமைதியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

இது தொழுகையைக் குறைவு இல்லாமல் நிறைவு படுத்தக் கூடியதாகும்.

'திருடுவதில் மனிதர்களில் மிகக் கொடியவர் தம்முடைய தொழுகையைத் திருடுகின்றவரே' என்று நாயகம் (ஸல்) கூறினர். ★

# நான் திராட்சைச்செடி - நீங்கள் கொடிகள்

நானே மெய்யான திராட்சைக் கொடி. பிதா திராட்சைத் தோட்டக்காரன்.

எனினும் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ அது மேலும் கனி சுனக் கொடுக்கும்படி சுத்தம் செய்கிறார்.

**யேசுபிரானின் உபதேசம்**

நான் உங்களுக்கு சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்.

கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாகக் கனி கொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்க மாட்டீர்கள்.

நானே திராட்சைச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால்தான் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;

என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான். அவற்றை அக்கினியில்போட்டு சாம்பல் ஆக்குவார்கள்,

நீங்கள் என்னிலும் என் வார்த்தையிலும், உங்களிலும், நிலைத்து இருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது கிடைக்கும்.

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதால் என் பிதா மகிமைப்படுவார். எனக்கும் சீடராயிருப்பீர்கள்.

பிதா என்னில் அன்பாக இருப்பதுபோல நானும் உங்களில் அன்பாக இருப்பேன். என்னுடைய அன்பிலே நிலைத்திடுவீர்கள்.

நான் என் பிதாவின் வழியைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருப்பதுபோல நீங்களும் என்வழி நடந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கவும், உங்கள் சந்தோஷம் நிறை



வாயிருக்கவும் இவைகளை உங்களுக்கு நான் சொன்னேன்.

நான் உங்களில் அன்பாய் இருப்பதுபோல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாக இருக்கவேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாக இருக்கிறது.

ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை.

நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் பின்பற்றுவீர்களேயானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்.

இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லப் போவதில்லை. ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான்.

நான் உங்களை சிநேகிதர் என்றேன். ஏனெனில் என் பிதாவிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்.

நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படியும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படியும் நான் உங்களை ஏற்பாடு செய்தேன்.

நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாக இருக்கவேண்டும் என்றே இவைகளை நான் உங்களுக்குக் கற்பிக்கிறேன். ★

# சமயச் சடங்குகள் அவசியமா?

நெல்லில் முக்கியமான பொருள் அதனுள் இருக்கும் அரிசியே.

அரிசியை மூடிக்கொண்டிருக்கும் உமியைக் குத்தி எடுத்து விட்டுத்தான் அரிசியை உணவாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறோம்.

ஆனால் மகனே...! அரிசி நாள்பட நிற்காது, கெட்டுப் போகும். நெல்லாக வைத்தால் கெடாமல் இருக்கும்.

அரிசியை வயலில் விதைத்தால் பயிருண்டாகாது. நெல்லை விதைத்தால்தான் முளைக்கும்.

அரிசிதான் முளைப்பதாயினும் அது உமியால் மூடப்பட்டு நெல்லாக நிலத்தில் பதிந்தால்தான் முளைவிட்டு வளரும்.

நம்முடைய தர்மத்துக்குக் காப்பாகவும், உயிர்கொண்டு வேர் ஊன்றி வளர்ந்து பயிர் கொடுப்பதற்காகவுமே கிரியைகளும், முறைகளும், சடங்குகளும், திருவிழாக்களும் நெல்லின் உமிபோல் அமைக்கப்பட்டன.

சமைத்து உண்பதற்கு உமி தேவையில்லை: அரிசி தான் வேண்டும். ஞானம் அடைந்தவனுக்குக் கிரியைகளும், திரு



விழாக்களும் கோயில்களும் வேண்டியதில்லை.

ஆனால் இவையெல்லாம் இல்லாமல் ஞானம் மட்டும் தனித்து உபதேசிக்கப்பட்டு இந்து தர்ம முறையாக வைக்கப்பட்டிருந்தால் அது வயலில்போட்டஅரிசியைப்போல் முளைவிடாமல் அழிந்து போயிருக்கும்.

உடலில் ஒரு காயம் ஏற்பட்டால் அது ஆறும்வரையில் அதற்குக் காப்பாக மேலே பொருக்குத் தோன்றுகிறது.

உள்ளே காயம் இருக்கும் வரையில் பொருக்கு இருக்க வேண்டும்.

புண் ஆறுவதற்கு முன் பொருக்கை எடுக்கக்கூடாது. புண்ஆறிய பின் தாமாகவே அது உலர்ந்து வேறுபட்டு விடும்.

ஞானம் அடைந்த பின் சடங்குகளும், ஆசாரங்களும் தாமாகவே கழிந்து ஒழிந்து போகும்.

ஞானம் அடைவதற்கு முன் அவற்றை ஒழிக்கப் பார்ப்பது புண் ஆறுவதற்கு முன் மேற் பொருக்கை எடுத்துப் புண் ஆறுவதைத் தடுப்பதுபோல் ஆகும்.

ஆசார விதிகளை மதிக்க வேண்டியதில்லை என்று ஞானம்பெற்ற சிலர் எண்ணலாம்.

ஞானம் உண்மையில் முற்றுவதற்குமுன் ஆசார வழக்குகளை விட்டுவிட்டுப் பார்ப்பது உசிதமல்ல.

புகைபோ[illegible] வைத்த வாழைப்பழம் நன்றாக இருக்காது நன்றாக முற்றி இயற்கையில் பழுத்த பழமே சரியான சுவைபெறும்.

பலாப்பழம் அறுக்கும் போது கைக்கு எண்ணெய் தடவிக்கொண்டு, பிறகுதான் அறுக்கவேண்டும். அப்படிச் செய்தால் பலாப்பிசின்

**பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்**

கையில் ஒட்டாமல் இருக்கும். பழம் சரியாக அறுத்துச் சுளை எடுக்கமுடியும்.

அவ்வாறே பகவானிடத்தில் பக்திசெய்து மனத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டே உலக வாழ்க்கை நடத்தவேண்டும்.

அப்படிச் செய்தால் எவ்வளவு பணமும், சுகங்களும் கண்டாலும் உலகப் பற்றாகிய பிசின் ஒட்டாது. கஷ்டங்கள் ஏற்பட்டாலும் மனம் உடையாது.

வீடு கட்டும்போது சாரம் கட்டி அதன் மேல் நின்று வேலைக்காரர்கள் கட்டட வேலை செய்வார்கள். வீடு கட்டி முடிந்ததும் சாரத்துக்கு வேலையில்லை.

தியானத்தில் மனத்தை அலையாமல் நிறுத்தப் பயிலாதவர்களுக்குப் பூஜையும் ஸ்நானமும் அவசியமாகும்.

நல்ல ஞானம் அடைந்தவர்களுக்குக் கோயிலும் குளமும் வேண்டியதில்லை.

(16-8-89 புதன் இழமை பகவான் இராமகிருஷ்ணர் நினைவு இனம்.)

## நல்லை நகர் வேலவன்!

நல்லை நகர் வாழ்கின்ற வேலவா – உனை
காணுமல் வாடுகிறேன் ஓடிவா
தந்தைக்கு உபதேசம் செய்தவா – அசுரர்
தலைதனை வேல் கொண்டு கொய்தவா
பாரிலுள்ள மக்கள் குறை தீர்ப்பவா
பாரெல்லாம் புகழ்ந்து நிற்கும் வேலவா
ஔவைக்கு பழம்கொடுத்த இளையவா – வள்ளி
அம்மையின் மனம்கொண்ட மன்னவா
இவன் ஆலயத்தில் என்றும் நிற்கும் எம்மனம்
இவன் பெயர்தான் நம் வாழ்வில் ஆயுதம்.

ஜனரவி.

# பெண் ஜென்மம்

பெயர் சுஜி: நான் க. பொ. த. உயர்தர வர்த்தகப் பிரிவில் படித்துவிட்டுப் பல்கலைக்கழக அனுமதிக்காக காத்து நிற்கின்றேன். சுகுணா என் சிநேகிதி: என் வீட்டின் பக்கத்து வீட்டில்தான் இருக்கின்றாள்.

வழமைக்கு மாறாக சனிக்கிழமை காலை சுகுணா துள்ளிக் குதித்துக்கொண்டு என்னிடம் ஓடோடி வந்து நின்றாள்.

'என்ன சுகுணா இன்று நீ மிகவும் சந்தோஷமாக இருக்கின்றாய், என்ன விஷயம்...? —அவளிடம் கேட்டேன். அவள் என்னை நிமிர்ந்து பாராக்காமலே;

'என் சுரேஷ் கொழும்பில் இருந்து வருகின்றார். அவரை நான் சந்தித்துப் பேச நீதான் எனக்கு உதவி செய்ய வேணும். பிளீஸ் சரி என்று சொல்லு சுஜி'— என்று கெஞ்சினாள்.

என் மனதை நோகடித்த அதே சுரேஷ் தான்: என்னை ஏமாற்றியது போதாது என்று இப்பொழுது சுகுணாவையும் ஏமாற்றும் நாடகம்.

இது எங்கே சுகுணாவுக்கு விளங்கப்போகிறது...? அவளுக்கு என் கதை தெரியாவிட்டாலும், அவனைப்பற்றி எவ்வளவு சொல்லியும் அவள் கேட்டதாக இல்லை.

சுருக்கமாகச் சொல்லப் போனால் பெண்களை ஏமாற்றும் மகாபாவி தான் அவன். சுகுணாவோ அவன் தான் உலகம், அவன் தான் எல்லாம் என்று இருக்கிறாள்.

சுகுணாவின் காதல் விஷயம் கேள்விப்பட்ட அன்றே, நான் அவளிடம், சுகுணா நீ படிக்கிற வயசில இப்ப கண்ட கண்ட கழுதைகளைக் காதலிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. ஒரு நல்லவனைக் காதலித்து இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் நீயோ...... கூறிமுடிக்க முன்னமே,

சுஜி! அவரைப்பற்றி உனக்குத் தெரியாது; அவர் நல்லவர் அவரை அப்படித் திட்டாதே'— என்று என் வாயை மூடி விட்டாள்.

'சுஜி! நான் கேட்ட கேள்விக்கு என்ன பதில்? நீ எனக்கு உதவி செய்கிறாயா?' சுகுணா என்னைக் குலுக்கிய பின்தான் நான் நிஜ உலகத்திற்கு வந்தேன்.

'சரி நீ சொல்றபடி, உனக்கு நான் உதவி பண்றன். உன் காதலனை மாலை நான்கு மணியளவில் தென்னந்தோப்பிற்கு அழைத்து வரவேண்டும். அவ்வளவுதானே. சரி அழைத்து வருகிறேன்' என்றேன்.

அவள் என் கன்னத்தில் ஒரு முத்தத்தைத் தந்து விட்டுத் துள்ளி ஓடினாள்; நான் மெதுவாக குளியல் அறையை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

சுகுணா கூறியபடி நான் சுரேஷின் வரவிற்காக சந்தியில் ஒரு ஓரமாக நின்றேன்; நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

முப்பது நிமிடங்கள் கழித்து சுரேஷ் தனது வழமையான விசிலுடன் நடந்து வந்து கொண்டு இருந்தான்.

என்னைக் கண்டவர் காணாதவரைப் போல வேறுதிசை நோக்கிப் பார்த்த வண்ணம் நின்றார். எனக்கு நன்றாகவே புரிந்தது அவர் சுகுணாவைத் தான் பார்த்துக் காத்து நிற்கிறார் என்று – என்னைத் தைரியப்படுத்திக்கொண்டு,

'மிஸ்டர் சுரேஷ் உங்களை சுகுணா அழைத்து வரும்படி என்னிடம் சொன்னாள் அது தான் வந்தேன். என்று கூறினேன்.

அப்பொழுது தான் என்னைக் கண்டவர்போல — 'ஓ நீங்க மிஸ்...... என்று இழுத்துக் கொண்டு இருக்கும்போது 'ஐ ஆம் மிஸ் சுஜி' என்றேன்.

'என்ன சுஜி, நீ நன்றாகவே மாறி விட்டாய்' என்றார். நான் என் கோபத்தை வெளிக்காட்டும் பாணியில்,

'மாறியவர்களுக்குத் தான் மாற்றமும் தெரியும்' என்றேன்.

'என்ன சுஜி எப்பவோ நடந்த விஷயத்துக்கு இப்ப போய்க் கோபப்படுகின்றாயே. நீ படித்தவள் என்று நினைத்தேன். சுத்தப்பட்டிக்காடு மாதிரிக் கதைக்கிறாயே. வாழ்க்கை என்பது அனுபவிக்கத்தான் இருக்கு, அதை நீ அனுபவிக்கத் தெரியாமல் இருப்பதற்கு நானா காரணம்?

**- எஸ். லலிந்தா -**

என் மீது நீ கோபப்பட்டுப் பயனும் இல்லை' என்று நெஞ்சழுத்தத்துடன் கூறினான்.

'மிஸ்டர்! உம்மை ஒரு மனிதராக நான் நினைக்காவிட்டாலும், ஓர் ஆறு அறிவுள்ள ஜென்மமாகவே நினைத்தேன். இப்பதான் தெரியுது அதுகூட உமக்கு இல்லை என்று; தயவு செய்து சுகுணாவின் வாழ்க்கையை நாசப்படுத்தி விடாதே 'தவறு செய்வது மனித இயல்பு, அதை மீண்டும் மீண்டும் செய்வது கொடிய மிருகத்தனம்' இப்பகூட திருந்தி நடக்க முயற்சி செய்தால் நல்லவனாக வாழலாம்'— நான் மேலும் கதைக்க எத்தனிக்கையில்,

சுஜி! என்று என்னை அழைக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அங்கு சுகுணா கண்கள் கலங்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

சுஜி! நீ கதைத்ததை நான் பார்த்துக் கொண்டு தான் இருந்தேன். நீ ஏன் இவரைப் பற்றி ஒன்றுமே இதுவரை காலமும் கூறவில்லை. இவரை உனக்கு முன்னமே தெரியுமா? உன்னை ஏமாற்றியது போதாது என்று என்னையும் ஏமாற்றவா இவர் இவ்வளவு நாடகம் போடுகிறார்.

பேசி முடிப்பதற்குள் அவள் ஓவென்று அழவும் தொடங்கி விட்டாள். திடுமென எழுந்த சுகுணா சுரேஷிற்கு நேரே சென்று,

'சுரேஷ் ஏன் என் சுஜியை ஏமாற்றினாய் சொல்லு: பிளீஸ்...... என்று விம்மத் தொடங்கினாள்:

இடையில் குறுக்கிட்ட நான்,

'சுகுணா, அவர் ஆம்பிளையாச்சே, இவரைப் போன்ற ஆண்களுக்கு இது எல்லாம் கை வந்த கலையாயிற்று. எம்மைப் போன்று ஆழமறியாது காலை விடும் பெண்கள் இவற்றைத் தாங்கிக்கொள்ள பழகவேண்டும்' என்று நான் கூற இடையில் மறித்த சுரேஷ்,

'சுகுணா உன் சிநேகிதி எம் இருவரையும் பிரிக்க சும்மா கதை கட்டுகிறாள். நீயும் இதை நம்பிக்கொண்டு என்னுடன் சண்டைக்கு வருகிறாயே, உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. நீயும் பாழாய்ப் போன பெண் ஜென்மம் தானே' என்று கூறி முடித்து விட்டான். இவற்றைப் பொறுமையாகக் கேட்ட சுகுணா,

'சுரேஷ் கொஞ்சம் நில். உன்னைப்போன்ற ஆண் ஜென்மத்திடம் அன்பு செலுத்திய நான் பாழாய்ப்போன பெண் ஜென்மம் தான், உன்னைப் போன்ற ஒவ்வொரு பாவிகளிடமும் மனதைப் பறிகொடுத்துத் தவிக்கும் ஒவ்வொரு பெண்ணும் பாழாய்ப் போனவர்கள் தான்' என்று கூறிவிட்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

இவற்றைக் காணச் சகிக்காத நான், 'சுகுணா வா வீட்டுக்குப் போகலாம்' என்று கூறி அவள் கரங்களை அன்பாகப் பற்றி வீட்டை நோக்கி நடந்து சென்றேன்.

சுரேஷ் இன்னும் திருந்தவில்லை என்பதை அவன் விசில் அடித்துக்கொண்டு சென்ற விதம் தெளிவாகக் காட்டிற்று. ★

சிறுகதை

## பொது அறிவுப்போட்டி இல. 30

1. ஏழு வள்ளல்களில் ஒருவர்? ... ... ... ... ... ... ... மாரி / பாரி
2. அதிகமான் ஔவைக்குக் கொடுத்த கனி? ... ... ... மாங்கனி / நெல்லிக்கனி
3. ரோம சாம்ராச்சியத்தை ஆட்டிப் படைத்தவள்? ... பமேலா/கிளியோபட்ரா
4. இதற்கும் கலங்கும் தன்மையுண்டு? ... ... ... ... ... ... மனம் / விழி
5. நீர் ஆவியாகப் போதுமான கொதி நிலை? ... ... 100பாகைC / 75பாகைC
6. அமெரிக்கத் தலைவர்களின் உத்தியோக வாசஸ்தலம்? ... ... ... ... ... ... பக்கிங்காம்மாளிகை / வெள்ளைமாளிகை
7. இதுவும் சுவையூட்டவல்லது? ... ... ... ... ... உணவுகள் / பாடல்கள்
8. மகாபாவி யார்? ... ... கொடுப்பதைத் தடுப்பவன் / தட்டிப்பறிப்பவன்
9. இவிக்கும் தன்மை இதற்கும் உண்டு? ... ... ... இனிப்பு / இன்சொல்
10. அபிமன்யு யாருடைய மகன்? ... ... ... ... திரௌபதை / சுபத்திரை
11. பகவத்கீதை உபதேசிக்கப்பட்டது யாருக்கு? ... ... அருச்சுனன் / வீமன்
12. மன்னார்குடாவில் கலக்கும் இந்திய ஆறு? ... ... ... வைகை / காவேரி

பெயர்:- ..................................

விலாசம்:- ..................................

..................................

பொது அறிவுப்போட்டி இல: 29
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

.................... இங்கே வெட்டுக ....................

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது; உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 23 - 08 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்கு பலம் தரும் வேப்பம்பழம்

வேம்பு என்றால் எங்கள் உள்ளங்களில் கைப்புச்சுவை யுணர்வே தென்படும். ஆனால் அதன் மருத்துவக் குணங்களை நன்கு அவதானித்தால், ஒரு வேம்பு ஒரு சித்த மருத்துவ மருந்தகம் என்றால் மிகையாகாது. முழுமரமுமே உயிர்களின் வாழ்வுக்கு உதவுவனவாக இருக்கின்றன.

வேப்பம் பூ: இதில் பலவிதமாக வடகம் செய்து உண்ணலாம், பூவின் குணம் இரத்த சுத்தியைக் கொடுக்கும், குடல் கிருமிகளை நாசம் செய்யும், பித்தத்தைச் சமப்படுத்துகின்றது.

வேம்பிலைக் காம்பு; இதனை வேம்பின் துார், ஈக்கு என்று சொல்லுவார்கள். இதனை அவித்துக் கஷாயமாக்கி உண்டால் வயிற்றுப்புழு, விஷக் கிருமிகளைக் கொல்கின்றது

இலைகள்: உடலிலுள்ள வீக்கங்களில் இலையை அவித்து, அதன் தண்ணீரால் கழுவியபின் அந்த இலையை வைத்துக் கட்டினால் வீக்கம் மாறும். வேப்பமரச்சோலை விஷவாயுக்களைச் சுத்தம் செய்து தூய்மையான காற்றைத் தருவதுடன் சுகாதாரத்துக்கும் வகை செய்கின்றது.

வேப்பம் பழம்: இதன்பழம் மூளைக்குப்பலத்தைக் கொடுக்கும் சக்தியுள்ளது. இரத்தத்திலுள்ள விஷத்தையும் நீக்குகின்றது.

விதை: தலையில் ஏற்படும் நோய்க்கு இந்த விதையை துவைத்து வைத்து முழுகிவர சொடுகு, பேன், பூச்சிக்கடி முதலிய ரோகங்கள் நீங்கும். இதன் எண்ணெய் பலவித நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுவதுடன் இயற்கை அளித்த மிகவும் உன்னதமான கிருமிநாசினியுமாகும்.

வேர்; முற்றிய வேப்பமரத்தின் வேர்ப்பட்டையைக் கஷாயமாக்கி குடித்து வந்தால் மலேரியாக் காய்ச்சலால் ஏற்படும் வயிற்றிலுள்ள காய்ச்சல், கட்டி கரைந்து நோய் மாறும். முறைச்சுரம், நடுக்கம் நீங்கும்; இரத்த சுத்தியும் உண்டாகும்.

பட்டை! இதன் பட்டையையும் கஷாயமாக்கி உண்டால் மேல் சொல்லப்பட்ட வியாதிகள் தீர்வதுடன், சர்மப்புண்கள், மேகப்புண்களும் ஆறிவிடும்.

பொது: இப்படியாக வேப்பமரத்தின் ஒவ்வொரு அங்கமும், மன்னுயிர்க்கு மருந்தாகப் பாவிக்கப்படுகின்றது. இது இயற்கை அளித்த அரும்பெரும் சித்தமருத்துவக் களஞ்சியம் என்று வேப்பமரத்தை நம்முன்னோர்கள் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள்.

வேம்பைத் தெய்வமாகக் கிராமப்புற மக்கள் வணங்குவதை நாம் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. அம்மன் (சக்தி) உறையும் விருட்சமாக மக்கள் கருதி வழிபடுகின்றனர்.

### கிருமிநாசினி

சகல ரோகங்களையும் நீக்க வல்ல மூலிகையான அதன் பக்கத்தில் நாம் வாழ்ந்து வந்தால், காற்றில் வரும் எந்தத் தொற்றுவியாதியும் நம்மை அணுகாது.

வேப்பமரத்து நிழலில் பகலில் சிலமணி நேரங்களாவது தங்கி ஓய்வு எடுத்தால் மனத்தில் சாந்தியும், புதிய மனத்திருப்தியும் உண்டாவதை உணரலாம்.

விஷம் தீண்டப்பட்டவர்களை வேப்பம் இலையைப் பரப்பி அதன்மேல் படுத்திருந்தால் விஷம் ஏறாது விஷத்தைச் சமப்படுத்தக்கூடிய சக்தியும் வேப்பிலைக்கு உண்டென்றால், அந்த மரத்தின் மகத்துவத்தை நாம் உணராது இருப்பது நமது அறியாமையாகும்.

அம்மை. பொக்களிப்பான் நோய் உள்ள வீட்டுவாசலில் வேப்பம் இலை செருகியிருப்பதை நாம் அவதானிக்கக் கூடும். ஏன் வேப்பிலையைச் செருகுகிறார்கள் என்றால், காற்றில் வெளியில் வரும் நோய்க் கிருமிகளை மற்றவர்களுக்குப் பரவாது தடுத்து விடும் சக்தி இந்த வேப்பிலைக்கு உண்டு.

அம்மை, பொக்களிப்பான் புண்களுக்கு வேப்பம் இலையையும் மஞ்சளையும் அரைத்துப் பூசி வந்தால் புண்கள் ஆறித் தழும்புகள் தோன்றாது.

நரை திரை நீக்க: ஐம்பது ஆண்டுக்கு மேற்பட்ட பழையவேப்பமரத்தின் இலை, பூ, காய், பட்டை, வேர் இவைகளை எடுத்துச் சேர்த்து நன்றாகக் காய வைத்து, இடித்து வஸ்திரகாயம் செய்து (சீலையில் அரித்து) அந்தத் தூளைப் பத்திரப்படுத்தி சுத்தமான போத்தலில் போட்டு மூடி வையுங்கள். இது தான் வேம்பின் காய கல்பம்.

இந்தத் தூளை வெருகடிப் பிரமாணம் (மூன்று விரல் இடை) எடுத்துத் தேனில் அல்லது பசும் பாலில் மூன்று மாதம் காலை - மாலை சாப்பிட்டுவந்தால் நரை திரை ஏற்படாது. ஏற்பட்ட இள நரையும் நீங்கும். வயோதிபத்திலும் வாலிபராகக் காணலாம்.

வேப்பம்பழ சர்பத்:-

வேப்பம்பழக் காலத்தில் பார்த்தால் வேப்பம்பழம் பாலைப்பழம் போல பள பள என்று இருக்கும். காகங்கள் அந்தப் பழத்தை உண்ண வேப்பம் மரத்தைக் கூட்டம் கூட்டமாக நாடும்.

எந்த அழுக்குக் கிருமிகளை அவை உண்டாலும் அவற்றை எல்லாம் அழித்து அவற்றுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்க வல்லது வேப்பங்கனி.

குழந்தைகள்கூட வேப்பங்கனியை விரும்பி உண்பதை நாம் காணலாம். அந்தக் குழந்தைகள் ஆரோக்கியமாக வாழ்வதைக் காணமுடிகின்றது.

### வேப்பம் சர்பத்

வேப்பம் பழங்களை நிறையச் சேகரித்து நன்றாக சுத்தமான தண்ணீரால் கழுவி எடுத்து ஒரு மண்பாத்திரத்தில் (சட்டியில்) போட்டுக் கசக்கிப் பிழிந்து விதையை நீக்கிவிட்டு, வடிகட்டி எடுத்துக்கொண்டு அதற்கு வேண்டிய அளவு சீனி கலந்து அடுப்பேற்றி சிறு நெருப்பாக எரித்துக் காய்ச்சிக்கொள்ளவும்.

சுண்டுப்பதமாக வந்ததும் இறக்கி ஆறவிட்டுச் சுத்தமான போத்தலில் அடைத்து வைத்துக்கொள்ளவும். இதுவே வேப்பம் சர்பத்.

சொறி, சிரங்கு, சர்ம வியாதி, வயிற்றுப்பூச்சி உள்ளவர்கள் காலை - மாலை வேப்பம் சர்பத்தில் சுத்தமான தண்ணீரில் கலந்து குடித்து வந்தால் தாகம் தணிவதுடன் மேல் சொன்ன வியாதிகளும் தீரும்.

வேப்பம் கள்:-

சில முற்றிய வயதான வேப்பமரங்களிலிருந்து மரம் வெடித்துப் பால் போல ஓர் திராவகம் வடிந்துகொண்டே இருக்கும். இதுவே வேப்பங்கள் எனச்சொல்வர்.

இது தொடர்ந்து நான்கு, ஐந்து நாட்களாக மரத்தில் இருந்து வடிந்துகொண்டே இருக்கும். இதை மக்கள் பாத்திரங்களில் எடுத்து பத்திரப்படுத்துவார்கள். இது பல வருடங்கள் பழுதுபடாது இருக்கும்.

இதனை காலை - மாலை ஒரு அவுன்ஸ் வீதம் உண்டுவந்தால் மூளைப்பலத்தையும், வயிற்றுப்புண், மலேரியாக் காய்ச்சல்கட்டி முதலியவற்றைக் குணமாக்கும்.

சர்ம நோய் நீங்கித் தேகம் பள பளப்பாக இருக்க ஸ்நானப்பொடி:-

வேப்பம்விதை நீக்கிய ஓடு, பாசிப்பயறு இரண்டையும் காய வைத்து இடித்துத்தூள் செய்து ஒரு டப்பியில் அடைத்து வைத்துக்கொள்ளலாம்.

நாம் ஸ்நானம் செய்யும் பொழுது சவர்க்காரத்துக்குப் பதிலாக இந்தப் பொடியை எடுத்துப்பூசிக் குளித்துவந்தால் சர்மவியாதி நீங்குவதுடன் தேகம் பள பளப்பாகவும் அழகாவும், துர்நாற்றம் வியர்வைமணம் இல்லாமலும் இருக்கும்.

வேப்பங்கொட்டைத் தூபம்:-

வேப்பங்கொட்டையும், வசம்பும் சேர்த்து இடித்து நாம் தூங்கும் முன்பு நெருப்புத்தணலில் தூபம் போட்டால் புகை எங்கும் பரவும் அதைச் சுவாசித்தால், நிம்மதியான நித்திரை வருவதுடன், கொசுத் தொல்லையும் இராது, மற்றும் பூச்சி புழுக்கள் நமது படுக்கை அறையில் நுழையாது.

வேப்பெண்ணெயின் மருத்துவசாதனை வலிப்புக்கு:-

வலிப்புவந்தால் வேப்பெண்ணெயை உடல் முழுவதும் பூசி, வேப்பிலையை இடித்து பொட்டலமாகக் கட்டி ஒத்தணம் கொடுத்தால் வலிப்பு நீங்கும்.

பாரிசவாதத்துக்கும் எண்ணெயைத் தடவி ஒத்தணம் கொடுக்கலாம்.

மாறுத புண்களுக்கு!-

பழைய சீழ் பிடித்த புண்களுக்கு முள்முருக்கிலைச் சாற்றைவிட்டுப் புண்ணைச் சுத்தம்செய்து விட்டு வேப்பெண்ணெய் தினமும் போட்டுவந்தால் ஆறுதபுண்ணும் ஆறும். தலைக்குத் தேய்த்து முழுகிவந்தால் சொடுகு, தலைநோய் நீங்கும். ★

\- சித்தவைத்தியக் கலாநிதி க. சிற்றம்பலம் -




# ★ வாசகர் தராசு ★

## தவறுன முடிவுகள்

(1)

22-7-89 சஞ்சீவியில் வெளியான 'தவறுன முடிவுகள்' சிறுகதையை வாசித்தேன்.

தங்கள் வாழ்வில் தவறுன முடிவுகளை எடுத்துப் பின் தவியாய்த் தவிக்கும் மானிடர்களுக்கு சோகம் நிறைந்த ஜீவ புஷ்பத்தின் வாழ்வு ஒரு சாட்டை அடி.

சற்றும் சிந்தியாமல் மனம்போன போக்கில் மதம்மாறி பின் அவஸ்தைப்படும் ஜெயமுகன் பாத்திரத்தைச் சித்தரித்த கதாசிரியர் அவர் பிறந்த ஊராக இந்துக்கள் நிறைந்து வாழும் நயினையினை எடுத்துக் கொண்டது ஏனோ!

**கே. எஸ். கைலாயநாதன்**
நல்லூர் வடக்கு,

(2)

நவாலியூர் சி. என். செல்லத்துரை அவர்களின் 'தவறுன முடிவுகள்' சிறுகதை பயனுள்ளதாக இருந்தது.

இதுபோன்ற கதைகளை சஞ்சீவி தொடர்ந்து தர வேண்டும்.

**- ஞானசேகரம் கணேசலிங்கம்**
கொடிகாமம்.

## ஜனனம்

எம். இந்திராணி எழுதிய 'ஜனனம்' சிறுகதை ஒவ்வொரு பெண்ணின் உள்ளக் குமுறல்களைப் படம்பிடித்துக் காட்டியது.

பாம்பின் காலைப் பாம்புதான் அறியும் என்பர். அதற்கு இணங்க பெண்ணின் மனதைக் கதாசிரியை நன்கு வெளிப்படுத்தி விட்டார்.

**ஊரெழு சி. மணிவண்ணன்**

## தங்கத்தாத்தா

தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பற்றிய கட்டுரை எம்போன்ற இளம் உள்ளங்களுக்கு வரப்பிரசாதமாக இருந்தது.

இதுபோன்று கருத்துச்சுவை மிக்க கட்டுரைகள் சஞ்சிகையில் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பதே எம் அவா.

**- நயினையூர் இ. சிவனேஸ்**

## எந்நாளும் வாராயோ!

எங்கள் வீட்டில் சனிக்கிழமை காலை மட்டும் அம்மா 'திருப்பள்ளி எழுச்சி' பாடவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை.


காரணம், அன்று சஞ்சீவி வெளிவரும் நாள் அல்லவா!

அள்ள, அள்ளக் குறையாத அறிவுக்கருத்துக்களைச் சுமந்து வரும் சஞ்சீவியே, நீ எந்நாளும் வாராயோ!

**- ஷாமினி**


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

**தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.**

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# யாழ்ப்பாண மாவட்ட மக்கள் அறிவாளிகள்
# மகாவலி சிங்களக் குடியானவர் பாராட்டு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

'நாங்கள் இரந்தெனிகலை நீர்த்தேக்கத்தினை அண்மித்துவிட்டோம்' என்று திரு. ஹஜ்க்முகமது கூறி வண்டியில் யன்னல் ஊடாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

நண்பர் ஆரியதுங்க அவர்கள் இரந்தெனிகலை அணை பற்றி விளக்க ஆரம்பிக்கின்றார்.

### இரந்தெனிகலை நீர்த்தேக்கம்

மகாவலி அபிவிருத்திட்ட நீர்த்தேக்கங்களில் பரப்பளவில் மிகவும் பெரியதும் இலங்கையில் இரண்டாவது பெரியதும் இந்நீர்த் தேக்கமாகும். கொத்மலை நீர்த்தேக்க கொள் அளவிலும் ஐம்பது (50) மடங்கு நீரினை இந்நீர்த்தேக்கம் கொள்ளவல்லது.86கோடி கன மீற்றர் நீர் இதன் கொள்ளளவாகும்.

இந்த அணையின் உயரம் 94 மீற்றர் ஆகும்; நீளம் 485 மீற்றர். இரந்தெனிகலை நீர்த்தேக்கத் திட்டத்தில் பல சிறப்பம்சங்கள் உள்ளன. இந்த விசாலமான நீர்த்தேக்கத்தில் இடையிடையே சிறு சிறு தீவுகள் போன் திட்டுகள் காணப்படுகின்றன. அவற்றின் அழகு உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலுக்கு பெரிதும் துணைபுரியும் என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் பொழுதுபோக்கு மீன் பிடித்தலுக்கும் படகோட்டலுக்கும் ஏற்ற அமைப்பு இங்கு காணப்படுவதும் உல்லாசப்பயணிகளைக் கவரும் அம்சமாகவுள்ளது.

இரந்தெனிகலை நீர்த்தேக்கத்தின் மூலம் 122 மின்சக்தி உற்பத்தி செய்யப்படும். மின் சக்தி உற்பத்திக்காக மின் நிலையம் அமைப்பதில் இங்கு ஒரு சிறப்பினை அவதானிக்க முடிகின்றது. ஏனைய நீர்த்தேக்கங்களின் மின் உற்பத்தி அணையில் இருந்து தூரத்தில் அமைந்திருக்க இங்கு அணைக் கட்டின் மறுபுறத்திலேயே மின் நிலையம் அமைந்திருப்பதோடு கீழ்நோக்கிய உந்தல் முறையில் மின் உற்பத்தி நடைபெறுகின்றது.

இந்நீர்த்தேக்கத்திலிருந்து பாசன நீர் இருகரை வழியாகவும் மேலதிக நீர் மூன்று சால்வழியாகவும் வெளியேற்றப்படுகின்றது. இந்நீர் மகாவலியின் ஏ. பி. சி. வலயங்களுக்கு நீர்ப்பாசன வசதியை அளிக்கின்றது.

**கொத்மலை தொடக்கம் மாதுறு ஓயாவரை— பயணக் கட்டுரை - 2**

மேற்கு ஜேர்மனி நாட்டின் உதவியுடன் 1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 1986 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. இத்திட்டத்துடன் இணைந்ததாக 3 கி. மீ தொலைவில் ரத்தம்பே நீர்த்தேக்கத்திட்டம் அமைக்கப்பட்டு அதன் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது ஒரு சிறிய செய்திட்டமாகும். ரந்தம்பே நீர்த் தேக்கத்திட்டம் இரந்தனிகலைத் திட்டத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ளது.

### விவசாயப் பண்ணை

விவசாயப் பண்ணையொன்றுக்கு செல்கின்றோம். அங்கே பலவிதமான பழவகைகளும் செய்கை பண்ணப்படுவதைக் கண்டு கொள்கின்றோம். மேலும் அங்கு [illegible] "பேபிசோளம்" எனப்படுகின்ற பயிர் பயிரிடப்பட்டு அவை மரத்திலிருந்து பறிக்கப்பட்டு இரண்டு பெண்கள் அதைச் சுத்தம் செய்கின்றார்கள்.

அவர்களிடம் அந்த பேபி சோளம் பற்றி கேட்கிறோம். அது ஏற்றுமதிக்காகச் செய்கை பண்ணப்படுவதாகத் தெரிந்துகொள்ளுகின்றோம். இது தவிர வெள்ளரிக்காய், புடலங்காய் போன்றனவும் அப்பிரதேச விவசாயிகளால் செய்கை பண்ணப்படுகின்றது.

இன்னும் ஓரிரு வருடங்களில் மகாவலி பிரதேசத்திலிருந்து எமக்குத் தேவையான கறுத்தக்கொழும்பான் மாம்பழம்கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வளவு சிறப்பாக மாமரங்கள் அங்கு வளர்ந்திருப்பதையும் கண்டுகொண்டோம். பலா மரங்களும் அங்கு காணப்பட்டன.

திட்டமிட்டு விவசாய முயற்சிகள் அங்கு மேற்கொள்ளப்படுவதுடன் விவசாயிகளுக்கு வேண்டும் ஆலோசனை வழங்கும் உத்தியோகத்தர்களும் உற்சாகத்துடன் அங்கு தொழிற்படுவதையும் கண்டுகொண்டோம்.

இதைத் தொடர்ந்து நாம் பால் சுத்திகரிக்கும் தொழிற்சாலையையும் பார்வையிட்டோம். அதன் பொறுப்பாளர் அதன் தொழிற்பாடுபற்றி தெளிவான விளக்கம் தந்தார்.

பால் தொழிற்சாலையில் இருந்து நாம் நந்நீர் மீன் வளர்ப்புத் திட்டம் ஒன்றினைக் காண்பதற்காக ஒரு கிராமம் ஒன்றுக்குப் பயணமானோம். அதுவும் எம்மால் மறக்கமுடியாத அனுபவமாயிற்று. அந்தக் கிராமவிவசாயியைத்தேடி எமது வண்டி நெல்வயல்களுக்கு நடுவாகச் செல்லும் தனிப்பாதையொன்றின் ஊடாகச் செல்கின்றது.

நாம் சென்ற நேரம் நந்நீர் மீன் வளர்ப்புத்திட்ட உரிமையாளர் தான் வளர்க்கும் பன்றிகளுக்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்கின்றார். எங்களைக் கண்டதும் எங்களிடம்வந்து தன்னை அறிமுகப்படுத்தி எங்கள் வருகையின் நோக்கத்தினைக் கேட்கின்றார். திரு. சரத் அவர்கள் முன் வந்து 'நீங்கள் ஈடுபட்டுள்ள நந்நீர் மீன் வளர்ப்பு முறை பற்றி அறியவந்துள்ளோம். அதனை எங்களுக்கு காட்டுவதுடன் அதுபற்றிய விளக்கத்தையும் தாருங்கள்' என்று கூற அவர் எம்மை அழைத்துச்சென்று தனது வீட்டுக் கிணற்றைக் காண்பிக்கின்றார்; நானும் ஆவலுடன் எட்டிப்பார்க்கின்றேன்.

அவர் தந்த விளக்கம் பயனுள்ளவையாக அமைந்தது. நன்னீர் மீன் பிடித் தொழில் இரண்டு முறைகளில் நடைபெறுகின்றன. ஒன்று உணவுக்காக நீர்த் தேக்கங்களில் வளர்க்கப்படுவது மற்றையது அலங்காரத்துக்கு தொட்டிகளில் வளர்ப்பதற்காக குறிப்பிட்ட பருவம் வரை பலநிற மீன்களை வளர்த்து பின்னர் வெளிநாடுகளுக்கு அனுப்புவது.

இதில் இரண்டாவது வகையையே அந்த விவசாயி செய்துவருகிறார்.

நல்ல வருமானம் கிடைப்பதாகவும் கூறினார்.

இறுதியாக திரு சரத் 'நீங்கள் ஏதாவது கூறப்போகின்றீர்களா என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி அளித்த பதில் எல்லார் மனதையும் தொட்டுவிட்டது.

அவர் கூறினார், 'எங்கள் இலங்கை மிகவும் சிறிய நாடு. அழகான நாடு. இங்கே வாழ்கின்ற சிங்களவர், தமிழர், முஸ்லிம் ஆகியோர் ஒற்றுமையாக வாழ்ந்து எமது நாட்டை உயர்வடையச் செய்யவேண்டும். எல்லா மக்களும் நல்லவர்களே, சந்தர்ப்ப சூழ்நிலைதான் எம்மை தவறிழைக்கச் செய்கிறது. நான் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் இருந்திருக்கின்றேன். யாழ்ப்பாண மக்கள் நல்ல பண்புடையவர்கள், அறிவாளிகள். என்னால் தமிழ் மொழியை நன்றாகப் பேசமுடியும்' என்று கூறி தமிழில் பேசத் தொடங்குகிறார். எங்களுக்கு புல்லரிக்கின்றது. படிப்பறிவு குறைந்த ஒரு ஏழை விவசாயி மனதில் உதித்த எண்ணம் எவ்வளவு உயர்வானது.

மாலை எமது சுற்றுலா மகாவலிப் பிரதேசத்தில் குடியேறியமக்களில்சிலரைக்கண்டு கலந்துரையாடுவதாக அமைகின்றது. இதற்காக நாம் மகாவலி "சி" வலய விவசாயிகள் சிலரைக் காணச் செல்கின்றோம். முதலில் அங்குள்ள பௌத்த விகாரையின் குருமார் மூவரைப் பேட்டிகாண்கின்றோம்.

நாம் வந்த நோக்கத்தை அவர்களுக்கு விளங்கவைக்கின்றோம். அவர்கள் மகிழ்வுடன் எம்மை வரவேற்கின்றனர். தங்களது வாழ்க்கை அங்கு அமைதியாக இருப்பதாகவும், தாம் அங்கு வசிப்பதை விரும்புவதாகவும் கூறுகின்றனர். அங்குள்ள மக்கள் மிகவும் பிரயாசப்பட்டு உழைப்பதாகக் கூறுகின்றனர்.

**திருநாவுக்கரசு கமலநாதன் எம். ஏ.**

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிதித்துறையில்
நாணயம்மிக்க நண்பன்
"ஷப்ரு"
207, மின்சாரநிலையவிதி, யாழ்ப்பாணம்.

சஞ்சீவி சஞ்சிகை

Your Friend in Finance
SHABRA
61, New Bullers Road, Co. 6.

12 - 08 - 198?

# ஆப்கன் நிலைமை கம்போடியாவிலும் ஏற்படுமா?

# பேரழிவைத் தடுப்பதில் பாரிஸ் மாநாடு தீவிரம்

## கிளர்ச்சிக் குழுக்களும் அரசதரப்பும் பங்குபற்றும் இடைக்கால அரசு ஏற்படுத்த முயற்சி

உலக உலா
என்.பி.சீலன்

ஜூலை இறுதிப் பகுதியிலும் இம்மாத ஆரம்பத்திலும் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் நடைபெற்ற கம்போடியா தொடர்பான சர்வதேச சமாதான மாநாட்டைஅடுத்துகம்போடியப் பிரச்சினையில் சுமுக தீர்வு ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

எதிர்வரும் செப்டம்பர் இறுதிக்குள் எஞ்சி உள்ள தனது 26 ஆயிரம் துருப்புக்களையும் கம்போடியாவில் இருந்து வியட்நாம் வாபஸ் பெறும்போது இளவரசர் நொரொடொம் சிஹாநூக் தலைமையிலான 3 கிளர்ச்சிக் குழுக்களுக்கும் பிரதமர் ஹூன் சென் தலைமையிலான கம்போடியா அரச படைகளுக்கும் இடையில் பெரும் உள்நாட்டு யுத்தம் மூழ்வதைத் தடுப்பதும்—

கம்போடியப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுகாண்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதுமே பாரிஸ் மாநாட்டின் பிரதான நோக்கம் ஆகும்.

கம்போடியாவில் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள நான்கு தரப்பினரையும் (3 கிளர்ச்சிக் குழுக்கள் - அரச தரப்பு) இணக்கம் ஒன்றுக்குக் கொண்டுவந்து கம்போடியாவில் இடைக்கால அரசு ஒன்றை உருவாக்குவதன் மூலம் ஆப்கானிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ளது போன்ற துயரமான நிலைமையைத் தவிர்க்கமுடியும் என்று பெரும்பாலான உலக நாடுகள் நம்புகின்றன.

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத்யூனியன் தனதுபடைகளை வாபஸ் பெற்றசமயம், சோவியத் ஆதரவு நஜிபுல்லா அரசுக்கும், முஜாஹூதீன் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையில் இடைக்கால அரசு தொடர்பாக இணக்கம் ஏற்படாததே ஆப்கானிஸ்தானின் இன்றைய துயர நிலைக்குக் காரணம்.

ஆப்கானிஸ்தான் பிரச்சினை தொடர்பாக தற்போது சோவியத் யூனியனும் அமெரிக்காவும் மீண்டும் சந்தித்து பேசும் அளவுக்கு அங்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

தனது படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் யூனியன் முற்றாக வாபஸ்பெற்றபோது தனக்கு ஆதரவான நஜிபுல்லா அரசை முழு அளவில் ஆயுதபாணியாக்கியது போன்று வியட்நாமும் கம்போடியாவில் செய்யமுடியும்.

ஆனால் அது பிரச்சினையை தீர்க்க யதார்த்த பூர்வமாக உதவமாட்டாது என்பது ஆப்கானிஸ்தான் பிரச்சினை மூலம் நன்கு உணரப்பட்டுள்ளது.

### 20 நாடுகள் பங்கு பற்றிய மாநாடு

இரு வாரங்களுக்கு முன் நடைபெற்ற கம்போடியா தொடர்பான பாரிஸ் மாநாட்டில்அமெரிக்கா, சோவியத்யூனியன், சீனா, பிரான்ஸ் உட்பட 20 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

கம்போடியா சார்பாக இந்த மாநாட்டில் வியட்நாம் ஆதரவு கம்போடிய அரசுத் தலைவர் பிரதமர் ஹூன் செசன் (Hun Sen)

கெமர் ரூச் (Khmer Rouge) தலைவர் கியூசம்பான் (Khieu Samphan) சிஹாநூக் தேசிய இராணுவத்தின் (Siha Nouk National Army) தலைவர் இளவரசர் நொரொடொம் சிஹாநூக் (Norodom Siha Nouk) கெமர் மக்கள் தேசிய விடுதலை முன்னணியின் (Khmer People's National Liberation Front) தலைவர் சொன்சான் (SonSann) ஆகிய நால்வரும் கலந்துகொண்டனர்.

பாரிஸ் மாநாட்டில் கெமர் ரூச் கலந்து கொள்வதற்கு வியட்நாம் ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது ஆனால் கடைசிநேரத்தில் தனது எதிர்ப்பை வியட்நாம் கைவிட்டுவிட்டது.

### பிரெஞ்சு மந்திரி புரிந்த சாதனை

பாரிஸ் மாநாட்டில் இந்த நான்கு தலைவர்களும் 'கம்போடியா' என்ற ஒரே பெயரில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் ஆகும்.

இந்தச் சாதனையைப் புரிந்தவர் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் ரோலண்ட் டுமாஸ் (Roland Dumas)

மாநாடு தொடங்குவதற்கு இரு தினங்களுக்கு முன் இந்த நான்கு தலைவர்களுடனும் பாரிஸில் பேச்சுநடத்தி இதற்கான இணக்கத்தை பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் ஏற்படுத்தி இருந்தார்.

கம்போடியாவில் உடனடியாக யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும் என்பதும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதுமே பிரதமர் ஹூன் சென்னின் நிலைப்பாடு.

அவருக்கு எதிரான 3கிளர்ச்சிக் குழுக்களின் தலைவர்களான கியூசம்பான், இளவரசர் சிஹாநூக், சொன்சான் ஆகியோர் ஹூன்சென்னின் தற்போதைய அரசு உடனடியாகக் கலைக்கப்படவேண்டும் என்றும்— ஹூன்சென், கியூசம்பான், இளவரசர் சிஹாநூக், சொன்சான் ஆகிய நான்கு தரப்பினரையும் கொண்ட இடைக்கால அரசு ஏற்படுத்தப்பட்டு தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் கோரிவருகின்றனர். இந்த மூன்று கிளர்ச்சிக்குழுக்களும் இளவரசர் சிஹாநூக் தலைமையில் இணைந்துள்ளன.

### ஐ. நா. பார்வையாளர் குழு

பாரிஸ் மாநாடு எடுத்த தீர்மானத்துக்கு அமைய ஐ. நா. பார்வையாளர்கள் குழு ஒன்று தற்போது கம்போடியா சென்றடைந்துள்ளது.

இந்தக்குழுவினர் கம்போடியாவின் பல பகுதிகளுக்கும் கம்போடிய அகதிகள் லட்சக்கணக்கில் வாழும் தாய்லாந்தின் எல்லைப் பகுதிகளுக்கும் விஜயம் செய்து உண்மை நிலையை நேரில் கண்டறிவார்கள்.

இம்மாதம் 20 ஆம் திகதி ஐ. நா. பொதுச் செயலாளருக்கு இவர்கள் கம்போடியா தொடர்பான முழு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார்கள்.

### கம்போடிய வரலாறு

தென் கிழக்கு ஆசியாவில் இந்தோ சீனத்தின் தென் மேற்குப் பகுதியில் கம்போடியா அமைந்துள்ளது.

இதன் விஸ்தீரணம் 69,898 சதுர மைல்கள். இதன் தலைநகரம் நொம்பென் (Phnom-penh)

கம்போடியா மேற்கு, வட மேற்கு எல்லையில் தாய்லாந்தையும் வட கிழக்கு எல்லையில் லாவோஸையும் கிழக்கு, தென் கிழக்கு எல்லையில் வியட்நாமையும் தென் மேற்கு எல்லையில் தாய்லாந்துக்குடாவையும் எல்லைகளாகக் கொண்டது.

1985 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின் படி இதன் சனத்தொகை 72 லட்சத்து 80 ஆயிரம்.

கம்போடியாவின் தற்போதைய அரசியல் நெருக்கடி 1970 ஆம் ஆண்டு இளவரசர் நொரோடொம் சிஹாநூக்கின் (NorodomSihanouk) வீழ்ச்சியுடன் ஆரம்பமானது. தீவிர சீன ஆதரவாளராக அப்போது கருதப்பட்டவர் இளவரசர் சிஹாநூக்.

1970 ஆம் ஆண்டில் பிரான்ஸ், சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை இவர் மேற்கொண்டிருந்த சமயம் பதவி கவிழ்ப்பு இடம்பெற்றது. தீவிர அமெரிக்க ஆதரவாளரான லொன்நொல் அப்போது ஆட்சியைக் கைப்பற்றினார்.

இளவரசர் சிஹாநூக் சீனாவில் இருந்தவாறு 'போட்டி கம்போடிய அரசு' ஒன்றை அப்போது நிறுவி இருந்தார்.

### அமெரிக்கப்படை வாபஸும் அரசுகள் வீழ்ச்சியும்

1975ஆம் ஆண்டில் இந்தோ சீன வரலாற்றைப் பொறுத்த அளவில் ஒரு சிறப்பான ஆண்டு.

அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக ரிச்சர்ட் நிக்ஸன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட பெரும் நிர்ப்பந்தம் காரணமாக தென் வியட்நாமில் இருந்தும் ஏனைய இந்தோ சீன நாடுகளில் இருந்தும் அமெரிக்கப்படைகளை வாபஸ் பெற்றார்.

அமெரிக்கப்படைகள் வாபஸ் பெற்றவுடன் தென் வியட்நாமில் அப்போது அமெரிக்க உதவியுடன் ஆட்சியில் இருந்துவந்த நூயன் வான் தியூ அரசு கவிழ்ந்தது.

நூயன்வான் தியூ அரசுக்கு எதிராக வட வியட்நாம் அரசின் ஆதரவுடன் சுமார் 10 வருட காலம் கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டுவந்த வியட்கொங் போராளிகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

அதே போன்று அதே ஆண்டு கம்போடியாவிலும் அமெரிக்க ஆதரவு லொன் நொல் ஆட்சி கவிழ்ந்தது.

லொன்நொல் ஆட்சிக்கு எதிராக கெரில்லா யுத்தம் நடத்திவந்த கெமர் ரூச் (Khmer Rouge) போராளிகள் ஆட்சியைக் கைப்பற்றினர். கெமர் ரூச் போராளிகளின் தலைவர் பொல்பொட் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது.

இதே போன்று இந்தோ சீனாவின் மற்றொரு நாடான லாவோஸிலும் அமெரிக்க ஆதரவு ஆட்சி கவிழ்ந்து 1976 ஆம் ஆண்டு சோஷலிச ஆட்சி ஒன்று ஏற்பட்டது.

### பொல்பொட் ஆட்சி

1975 ஆம் ஆண்டு கம்போடியாவில் ஆட்சியைக் கைப்பற்றிய பொல்பொட் குழுவினரால் 3 வருடங்கள் மட்டுமே ஆட்சி நடத்த முடிந்தது. இந்த 3 வருடகாலத்தில் அரச எதிர்ப்பாளர்கள் என்று கருதப்பட்ட 10 லட்சம் மக்கள் கம்போடியாவில் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலைகள் நீண்டபோது 1978 ஆம் ஆண்டு வியட்நாம் தனது படைகளை கம்போடியாவுக்குள் அனுப்பியது.

பொல் பொட் குழுவினர் தலைநகர் நொம்பெனில் இருந்து தப்பிச்சென்று தாய்லாந்து எல்லையை அண்டி உள்ள காடுகளில் தஞ்சம் அடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகளின் உதவியுடன் எப்படி ஓர் மார்க்ஸிய அரசு உருவாக்கப்பட்டதோ அதே பாணியில் கம்போடியாவிலும் வியட்நாம் படைகளின் உதவியுடன் ஹூன் சென் (Hun Sen) தலைமையில் புதிய ஆட்சி உருவாக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு வியட்நாமும் ஹூன் சென் தலைமையிலான கம்போடிய ஆட்சியாளர்களும் 25 வருட கால நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர்.

ஹூன் சென் ஆட்சிக்கு முட்டுக்கொடுக்கும் விதத்தில் வியட்நாம் படைகள் கம்போடியாவிலேயே நிலைகொண்டன.

ஹூன் சென் அரசுக்கு எதிராகவும் வியட்நாம் படைகளுக்கு எதிராகவும் 1978 ஆம் ஆண்டில் இருந்து கம்போடியாவில் உள்நாட்டுச் சண்டை நடைபெற்று வந்தது.

ஹூன் சென் அரசுக்கு எதிரான சண்டையில் மூன்று கிளர்ச்சிக் குழுக்கள் ஈடுபட்டன.

### கியூ சம்பான்

ஒன்று 1978 ஆம் ஆண்டு வியட்நாமிய படை எடுப்பின்போது பதவியில் இருந்து துரத்தப்பட்ட கெமர் ரூச் குழுவினர். இதன் தலைவராக தற்போது இருப்பவர் கியூ சம்பான் (Samphan).

ஹூன் சென் அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களின் கெமர் ரூச் குழுவினரே பலம் வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கம்போடிய — தாய்லாந்து எல்லையில் 100 மைல் தூர விஸ்தீரணப் பகுதியில் கெமர் ரூச்சின் பிரதான முகாம்கள் அமைந்துள்ளன. நன்கு பயிற்சி பெற்ற 35 ஆயிரம் பேர் கெமர் ரூச் படையில் உள்ளனர்.

கெமர் ரூச்சுக்குத் தேவையான [illegible] சீனாவினால் அனுப்பப்பட்டு [illegible] சேருகின்றன

### சிஹாநூக்

ஹூன் சென் அரசுக்கு எதிரான மற்றைய கிளர்ச்சிக் குழு முன்னாள் பிரதமர் இளவரசர் சிஹானூக்கை தலைவராகக் கொண்டது.

இதன் பெயர் 'சிஹானூக் தேசிய இராணுவம்' (Sihanoukist National Army) சிஹானூக் குழுவினருக்கும் சீன உதவி இருந்து வருகிறது. எனினும் சீனாவின் பிரதான ஆயுத விநியோகம் கெமர் ரூச்சுக்கே கிடைக்கிறது.

### சொன் சான்

மூன்றாவது கிளர்ச்சிக் குழு கெமர் மக்கள் தேசிய விடுதலை முன்னணி (Khmer People's National Liberation Front) இதன் தலைவர் சொன் சான் (Son Sann).

சொன் சான் தலைமையிலான கிளர்ச்சிக் குழு அமெரிக்க ஆதரவு பெற்றது. அமெரிக்க ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகிறது. எனினும் பலம் அற்றது.

ஹூன் சென் அரசுக்கு எதிரான இந்த மூன்று கிளர்ச்சிக் குழுக்களுக்கும் அமெரிக்காவின் நட்பு நாடான தாய்லாந்து ஆதரவு அளித்து வருகிறது. தாய்லாந்து மார்க்கமாகவே இந்த மூன்றுக்கும் ஆயுதங்கள் தாராளமாகக் கிடைத்து வருகின்றன.

இரு வாரங்களுக்கு முன் பாரிஸில் நடந்த மாநாட்டில் கெமர் ரூச்சின் எதிர்காலமே சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்தது.

சீனா கெமர் ரூச்சுக்கு முழு ஆதரவு வழங்கி வருகிறது. அமெரிக்காவிலும் பெரும்பாலான மேற்கு நாடுகளினதும் ஆதரவு இளவரசர் சிஹானூக்குக்கும் சொன் சானுக்கும் இருந்து வருகிறது.

பிரதமர் ஹூன் சென்னை சோவியத் யூனியனும் வியட்நாமும் அவற்றின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஆதரிக்கின்றன.

### சீனாவின் நிலை

சீனாவில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலை காரணமாகப் பாரிஸ் மாநாடு உருப்படியான பலனைத் தருமா என்பதில் ஆரம்பத்தில் சந்தேகம் நிலவி வந்தது.

மாணவர் போராட்டத்துக்கு ஆதரவு அளித்ததன் காரணமாக மேற்கு நாடுகள் மீது சீனா சீற்றம் கொண்டிருந்ததே இதற்குக் காரணம்.

எனினும் தனது நெருங்கிய சகாவான கெமர்ரூச் தொடர்பாகப் பாரிஸ் மாநாட்டில் சீனா நிதானமாக நடந்து கொண்டது.

கம்போடியாவில் மீண்டும் கெமர்ரூச் ஆட்சி ஏற்படுவதைத் தடுப்பதற்குச் சீனாவின் உதவி ஏனைய தரப்பினருக்கு அவசியமானது.

சோவியத் யூனியன் சீனாவுடன் நெருங்கிய உறவுகளை வைத்திருப்பதற்கு கம்போடியாவில் உள்ள வியட்நாம் படைகளே தடையாக இருந்து வருகின்றன.

சோவியத் யூனியனுடன் நெருங்கிய உறவு கொள்வதற்கு சீனா விதித்துள்ள நிபந்தனைகளில் கம்போடியாவில் இருந்து வியாட்நாமிய படைகள் வெளியேற வேண்டும் என்பதும் ஒன்று.

### ஏற்கனவே நடந்த சர்வதேச மாநாடுகள்

ஏற்கனவே இந்தோசீனம் தொடர்பான சர்வதேச மாநாடுகள் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை.

1954 ஆம் ஆண்டு வியட்நாம் தொடர்பான ஜெனீவா மாநாட்டில் வடவியட்நாம் - தென் வியட்நாம் என்று வியட்நாமைத் துண்டாடும் முடிவு எடுக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு வியட்நாம் பிரச்சினைக்குத் தீர்வு காண பாரிஸிலும் சர்வதேச மாநாடு கூட்டப்பட்டது.

ஆனால் 1975 இல் யுத்தம் மூலம் வியட்நாம் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டதால் ஜெனீவா, பாரிஸ் மாநாடுகள் அர்த்தமற்றவையாக்கப்பட்டன.

1962 இல் லாவோஸ் தொடர்பாக ஜெனிவா மாநாடு கூட்டப்பட்டு லாவோஸின் நடுநிலைமை அங்கீகரிக்கப்பட்டது.

எனினும் 1976 ஆம் ஆண்டு லாவோஸ் மீண்டும் சோவியத்தின் ஆதிக்கத்தின் கீழ் வீழ்ச்சி அடைந்தது.

ஆனால் தற்போது பாரிஸில் நடைபெற்ற மாநாட்டில் சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மனப்பூர்வமான விருப்பத்தை வெளியிட்டுள்ளன.

உலகில் கெடுபிடி யுத்தம் குறைந்து வரும் இவ்வேளையில் கம்போடியா தொடர்பான சமரச முயற்சிகள் வெற்றி வாய்ப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை அங்கு தற்போது தோன்றியுள்ள சுமுக நிலைமை எடுத்துக்காட்டுகின்றது. ★

## சுரங்கரயில் பாதை

பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் உள்ளது ஆங்கிலக் கால்வாய் எனப்படும் கடற் பகுதி.

இதன் அடியில் பூமியைக் குடைந்து ஈரோடனல் (Euro-tunnel) எனப்படும் சுரங்கப் பாதை அமைத்து வருகிறார்கள்.

1993 இல் இந்தச் சுரங்க ரயில்பாதை செயற்பட ஆரம்பிக்கும்.

இதன் வழியாக இங்கிலாந்தில் இருந்து கடலுக்கு அடியில் ஓடும் இந்த ரயில் மூலம் பிரான்ஸை அடையலாம்.

(Euro - tunnel Exrpess) ஈரோடனல் எக்ஸ்பிரஸ் என அழைக்கப்படும் இதன் வேகம் மணிக்கு 300 கிலோ மீற்றர் ஆக இருக்கும்.

இந்த ரயிலுடன் 18 பெட்டிகள் இணைக்கப்படும். இதே போன்று 30 ரயில்கள் இப்பாதையில் ஓட வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாம். ★

## பொது அறிவுப் போட்டி இல: 29

**சரியான விடைகள்**

1. கூழ், 2. மொகஞ்சதாரோ, 3. 75 ஆண்டுக்கு ஒரு முறை, 4. விழி, 5. காப்பு, 6. பெண் 7. மனம், 8. இன்பத்தில் 9. ஒன்று 10. பாரதிதாசன் 11. டோக்கியோ, 12. சீனமொழி.

★ இம் முறை சரியான விடைகளை எவருமே அனுப்பவில்லை.

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org